தமிழ்

# மெட்டீரியா மெடிக்கா

என்னும்

இங்கிலீஷ் வைத்தியத்தை தமிழில் எழுதப்பட்டிருக்கிற
இப்புஸ்தகம் திருநெல்வேலி டவுன்,
மெஸர்ஸ் பி. எஸ். சுந்தரம் அன் கோ.
இங்கிலீஷ் மருந்து ஷாப்பிலுள்ள
பி. எஸ். ஈஸ்வரம்பிள்ளை யவர்களால்
எழுதப்பட்டு

பாளையங்கோட்டை ரிட்டைர்ட் ஸப் அஸிஸ்டென்ட் ஸர்ஜன்
**ம-ா-ா-ஸ்ரீ, கனம் வி. பெருமாள் நாயுடுகாரு**
அவர்களால் பரிசோதிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

சென்னை:
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
**நா. முனிசாமி முதலியாரவர்களால்**
வெளியிடப்பெற்றது.

1936

காப்பிரைட்-ரிஜிஸ்டர்ட்] [விலை ரூபா 3-0-0.

PRINTED AT THE "ANANDA BODHINI" PRESS,
6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.

# முகவுரை.

"தமிழ் மெட்டீரியா மெடிக்கா" என்னும் "இங்கிலீஷ் வைத்தியத்தை" தமிழில் எழுதப்பட்டிருக்கிற இப்புத்தகம், இங்கிலீஷ் வைத்தியத்தைக் கையாடுகிறவர்களுக்கும், இங்கிலீஷ் வைத்தியம் கற்கும் கம்பவுண்டர்களுக்கும், இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளுக்கும் உபயோகிக்கப்படுமென்ற நோக்கத்தைக் கொண்டும், இங்கிலீஷ் வைத்தியத்தை இங்கிலீஷ் பாஷையில் மிகவும் விரிவாய் எழுதி யிருந்தபோதிலும், தமிழில் சுருக்கமாய் எழுதி யிருந்தால், இங்கிலீஷ் மருந்துகளைப் பற்றியும், அவைகளின் குணங்கள், அளவுகள், விபாதிகளுக்குத் தகுந்தபடி உபயோகப்படுத்தவேண்டிய விபரங்களைப் பற்றியும், கடினமின்றித் தெரிந்துக்கொள்ளக் கூடுமென்ற எண்ணத்தைக் கொண்டும் எழுதப்பட்டிருக்கிறது.

பாளையங்கோட்டையில், ரிட்டையர்ட் ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் ம-ா-ா-ஸ்ரீ, வி. பெருமாள் நாயுடு அவர்களுக்கும்,

மெஸர்ஸ். சண்முகம் அன் கோ, பாளையங்கோட்டை; மெஸர்ஸ். பி. எஸ். சுந்தரம் அன் கோ, திருநெல்வேலி டவுன், புரொப்ரைட்டர் அவர்களுமாகிய ம-ா-ா-ஸ்ரீ, சண்முகம் பிள்ளை அவர்களுக்கும் என் நன்றி யறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டவனா யிருக்கிறேன்.

பி. எஸ். ஈஸ்வரம் பிள்ளை.

பாளையங்கோட்டை,
22—10—11.

திருநெல்வேலி டவுன் மெஸ்ர்ஸ். பி. எஸ். சுந்தரம் அன் கோ, இங்கிலீஷ் மருந்து ஷாப்பிலுள்ள பி. எஸ். ஈஸ்வரம் பிள்ளையால் எழுதப்பட்டிருக்கிற இந்த "தமிழ் மேட்டீரியா மெடிக்கா" என்னும் புஸ்தகத்தை நான் சரி பார்த்ததில் தமிழ் பாஷை எழுதப்படிக்கத் தெரிகிறவர்களெல்லாம் எளிதில் இங்கிலீஷ் மருந்துகளையும் அவைகளின் குணங்களையும், அளவுகளையும், வியாதிகளில் உபயோகப்படுத்த வேண்டிய அநுபோக முறைகளையும் நன்றாய் அறிந்து கொள்ளலாம்.

மேலும் இந்தப் புஸ்தகத்தின் மூன்றாவது பாகத்தில் குறிப்பிட்ட முக்கியமான வியாதிகளுக்கு சிகிட்சை செய்ய வேண்டிய விதத்தை மிகவும் தெளிவாய், அநுபோக முறைகளையும் தற்காலம் உபயோகத்திலிருக்கிற பேட்டென்ற் மருந்துகளைப்பற்றியும் எடுத்துக்காட்டி எழுதி யிருப்பதால் தமிழ் எழுதப் படிக்கத் தெரிகிறவர்களெல்லாம் நன்றாய் அறிந்தும் அனுபோகத்துக்குக் கொண்டுவரவும் உதவியாய் இருக்கிறது. இந்தப் புஸ்தகத்தை எழுதி யிருக்கிற நூலாசிரியர் அவசியமான இங்கிலீஷ் வைத்திய புஸ்தகங்களைக் கற்றறிந்தவராயும் அநுபோக அறிவுடையவராயும் இருக்கிறார். சுருக்கிச் சொல்லில் இந்தப் புஸ்தகம் இங்கிலீஷ் மருந்துகளைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பமுடையவர்களுக்கும் அவைகளை அனுபோகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணமுடையவர்களுக்கெல்லாம் போதுமான உதவியாய் இருக்கிறதென்று நான் உறுதியாய்ச் சொல்லக்கூடும்.

(கையொப்பம்)

**வி. பெருமாள் நாயுடு,**

**ரிட்டையர்ட் ஸப் அஸிஸ்டென்ட் ஸர்ஜன்.**

## இப்புஸ்தகம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) முதல் பாகம்:—இது இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

முதல் உட்பிரிவு:—மருந்துகளின் நிறைக் கணக்கு.

இரண்டாம் உட்பிரிவு:—மருந்துகளின் தனிக் குணங்களைக் காட்டக்கூடிய இங்கிலீஷ் பெயர்களின் பொருளை தமிழில் விளக்கிக் காட்டல்.

(2) இரண்டாம் பாகம்:—இங்கிலீஷ் மருந்துகள், அவைகளின் குணங்கள், அவைகளைப் பிரயோகிக்கும் அளவுகள், வியாதிகளில் உபயோகப்படுத்த வேண்டிய விதங்கள்.

(3) மூன்றும் பாகம்:—இது இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

முதல் உட்பிரிவு:—தற்காலத்தில் வழக்கத்தில் இருக்கிற மிக்சர்களின் பெயர்கள், அவைகளைச் செய்யவேண்டிய முறைகள், அவைகள் ஒவ்வொன்றையும் இன்னின்ன வியாதிக்கு இவ்வளவு இவ்வளவு கொடுக்கலாம் என்பது.

இரண்டாம் உட்பிரிவு:—முக்கியமான வியாதிகளின் பெயர்கள், அவைகளுக்கு மருந்துகள் சேர்த்து வைத்தியம் செய்ய வேண்டிய அநுபோக முறைகள், தற்காலம் வழக்கத்தி

லிருக்கிற பேட்டென்ற் மருந்துகளை உபயோகப்படுத்தும் விதங்கள் வியாதிகளின் தன்மைக்குத் தகுந்தபடி கொடுக்கவேண்டிய ஆகாரங்கள்.

**நான்காவது பாகம்:**—பாய்ஸன் மருந்துகள். அவைகளில் முக்கியமான சிலவற்றை அதிக அளவில் சாப்பிட்டு விட்டால், அந்த மருந்துகளை முறிக்க வேண்டிய முறைகள்.

---

**குறிப்பு:**—இங்கிலீஷ் சப்தத்திற்குத் தகுந்த தமிழ் எழுத்துகள் இல்லாததால் அவ்வித தமிழ் எழுத்துக்களின் கீழ் இங்கிலீஷ் எழுத்துக்களைப் போட்டிருக்கிறோம். அதன்படி உச்சரிக்கவும்.

# முதல் பாகம்

## முதல் பிரிவு

### மருந்துகளின் நிறைகள்

| | | |
|---|---|---|
| 60 கிரைன் (g) | = | 1 டிராம் (d) |
| 8 டிராம் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 பவுண்டு |
| 20 அவுன்ஸ் | = | 1 பயின்று |
| 8 பயின்று | = | 1 கியாலன் |
| 20 கிரைன் | = | 1 ஸ்குருப்பிள் |

குறிப்பு:—1 கிரைன் உத்தேசம் 1 உளுந்து எடை, அல்லது 2 அரிசி எடை.

| | | |
|---|---|---|
| 1 மினிம் | = | உத்தேசம் 1 துளி |
| 60 மினிம் | = | 1 டிராம் |
| 8 டிராம் | = | 1 அவுன்ஸ் |

குறிப்ப:—

| | | |
|---|---|---|
| 1/32 | என்றால் | (அரை மாகாணி) |
| 1/16 | என்றால் | (மாகாணி) |
| 1/8 | என்றால் | (அரைக்கால்) |
| 3/16 | என்றால் | (மூண்டாணி) |
| 1/4 | என்றால் | (கால்) |
| 3/8 | என்றால் | (காலே அரைக்கால்) |
| 1/2 | என்றால் | (அரை) |
| 5/8 | என்றால் | (அரையே அரைக்கால்) |
| 3/4 | என்றால் | (முக்கால்) |
| 7/8 | என்றால் | (முக்காலே அரைக்கால்) |

பெரியவர்களுக்குக் கொடுக்கிற மருந்துகளின் அளவிலிருந்து குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டிய அளவுக்கு முறையாவது:—

குழந்தையின் வயசு நம்பரையும் அதோடு 12 ஐயுஞ் சேர்த்து வந்த தொகையால் குழந்தையின் வயசு நம்பரை வகுத்து அதோடு பெரியவர்களுக்கு ஏற்பட்ட அளவுகளைப் பெருக்கிக் கொள்ளவும்.

உதாரணமாக:— பெரியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஒரு மருந்தின் அளவு 5 முதல் 15 கிரைன் இருந்தால்,

$$\frac{3}{3+12}=3/15=1/5,\quad 1/5\times 5 \text{ கிரைன்}=1 \text{ கிரைன்}$$
$$1/5\times 15 \text{ கிரைன்}=3 \text{ கிரைன்}$$

ஆகையால் 1 முதல் 3 கிரைன் கொடுக்க வேண்டும். இப்படியே வயசுக்குத் தகுந்தபடி மேல் காட்டிய வழியை அனுசரித்துக் கொடுக்கவும்.

| | |
|---|---|
| 1 டீஸ்பூன் அல்லது 1 தேக்காண்டி | = 1 டிராம் |
| 1 டெஸர்ட் ஸ்பூன் (d) | = 2 டிராம் |
| 1 டேபிள் ஸ்பூன் (b) | = 4 டிராம் |
| 8 டிராம் | = 1 அவுன்ஸ் |
| 1 ஒயின் கிளாஸ் (g) | = $2\frac{1}{2}$ அவுன்ஸ் |

வியாதியைக் கண்டு பிடித்து இன்னவிதமான வியாதி என்று தீர்மானம் பண்ணி வியாதியின் நிலைமையைத் தெரிந்துகொண்ட பின்பு, மருந்துகளின் குணங்களும், அவைகளின் அளவுகளும், உபயோகங்களும் தெரிந்திருந்தால் அந்த வியாதிக்கு இங்கிலீஷ் மருந்துகள் சேர்த்து எழுதும் (அதாவது பிரிஸ்கிரிப்ஷன் ஸரற்றிங்) வழியாவது.

## வியாதிக்காரர் பெயர்.

(1) எடுத்துக்கொள்

(2)
- (1) வியாதிக்குத் தகுந்தபடி குணம் செய்யவேண்டிய முக்கியமான மருந்து', இது பவுடாராகவும் இருக்கலாம், அல்லது திராவக ரூபமாகவும் இருக்கலாம்.
- (2) மேல்படி மருந்துக்கு அதே குணமுள்ள துணை மருந்து. இதுவும் எந்த ரூபமாகவாவது இருக்கலாம்.
- (3) மேல்படி மருந்துகளின் கசப்பு, அல்லது அருவருப்புக்களை மாற்றும் படியான முதல் மருந்தின் குணமுள்ள மருந்து சேர்ந்த சிரப். இல்லாவிட்டால் மட்டும் 'சிம்பிள் சிரப்'
- (4) முதலாவது எடுத்துக் கொண்ட மருந்தின் குணமுள்ள இன்பியூ (f) ஷன்; இல்லாவிட்டால் மட்டும் "ஆக்குவா."

(3) ஒன்று சேர்

(4) மிக்சர் செய்

டைரக்ஷன் (அதாவது மிக்சர் கொடுக்கும் விதம்)
(d)

வைத்தியர் கையெழுத்து
தெய்தி.

உதாரணமாக:—ஒரு நோயாளிக்கு தொண்டைப் புகைச்சல் இருக்கிறதென்று தெரிந்துகொண்டு, கபத்தை இளக்கி வெளியாக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணின பின்பு அதற்காக, "எக்ஸ் பேக்டோரேன்ற்," குணமுள்ள மருந்துகள் சேர்த்து "எக்ஸ் பெக்டோரேன்ற் மிக்சர்" அதாவது கபத்தை இளக்கி வெளியாக்கித் தொண்டைப் புகைச்சலைத் தணிக்கக்கூடிய மிக்சர் செய்து கொடுப்பதற்கு

## வியாதிக்காரர் பெயர்.

(1) எடுத்துக்கொள்

| | |
|---|---|
| வியாதிக்குத் தகுந்த முக்கியமான மருந்து = | (1) அமோனியா. கார்போனஸ் கிரைன் 10 (b) |
| மேல்படி மருந்துக்கு துணை மருந்து = | (2) வைனம். இப்பிக்காக் . துளி 30 |
| (2) | (3) ஸிரப். டூலு . டிராம் $1\frac{1}{2}$ |
| முதல் மருந்தின் குணமுள்ள மருந்து சேர்ந்த ஷர்பத் | (4) இன்பியூஷன். ஸெனிகா சேர்ந்து, (f) (g) |
| முதல் மருந்தின் குணமுள்ள கஷாயம் = | அவுன்ஸ். $1\frac{1}{2}$ |

(3) ஒன்று சேர்.

(4) மிக்சர் செய்

தடவை 1 க்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம்
4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

வைத்தியர் கை எழுத்து
தெய்தி.

இந்த வழிப்படி வந்த வியாதிக்கும் லெகுவாய் இங்கிலீஷ் மருந்துகள் சேர்த்துப் பிரிஸ்கிரிப்ஷன் எழுதிவிடலாம்.

குறிப்பு:— (1) சிரப் என்றால் சர்பத்

(2) சிரப்சிம்பிள் என்றால் தனிச் சீனிப்பாகு

(3) இன்பியூஷன் என்றால் கஷாயம்

(f)

(4) ஆக்குவா என்றால் தண்ணீர்

பொதுவாக கிணற்றுத் தண்ணீர்

குறிப்பு:—மருந்துகள் சேர்ந்து மிக்சர் செய்த பிறகு அதை சுத்தமான சீசாவில் ஊற்றி காற்றுப் போகாமல் கார்க்கு நன்றாய் மூடி, ஒரு காகிதத்தில் வியாதிக்காரர் பெயரை எழுதி, மருந்து சாப்பிடவேண்டிய விதத்தையும் தெளிவாய் எழுதி சீசாவில் ஒட்ட வேண்டும்.

விஷமான மேல்பூச்சுத் தைலமாய் இருந்தால் "விஷம்" என்று பெரிய எழுத்தில் எழுதி, வெளிப் பிரயோகத்திற்கு மட்டும் என்று எழுதி ஒட்டவேண்டும்.

# முதல் பாகம்

## இரண்டாம் பிரிவு.

மருந்துகளின் தனிக்குணங்களின் இங்கிலீஷ் பெயர்களை தமிழில் நன்றாய் விளக்கிக் காட்டும்.

குறிப்பு:—இதற்கு அடுத்த பாகத்தில் எழுதி இருக்கிற ஒவ்வொரு மருந்துக்கும் ஏற்படுகிற தனிக்குணத்தைக் காட்ட இதனடியில் எழுதியிருக்கிற வார்த்தைகளையே பிரயோகப்படுத்தி இருப்பதால் இந்தப் பாகம் நன்றாய் மனதில் பதிந்திருக்க வேண்டும்.

எந்த இங்கிலீஷ் வார்த்தையை தமிழில் திருத்தமாய் உச்சரிக்க முடியவில்லையோ அந்த வார்த்தையை மட்டும் பூராவும் இங்கிலீஷிலேயே எழுதியிருக்கும். அல்லது ஏதாவது ஒரு வார்த்தையின் எழுத்துக்குக் கீழ் இங்கிலீஷ் எழுத்து எழுதியிருந்தால் அந்த எழுத்தின் உச்சரிப்பைக் கொண்டு உச்சரிக்க வேண்டும். இங்கிலீஷ் எழுத்துக்கள் தெரியாதவர்கள் வார்த்தைகளை தமிழ் எழுத்துக்களைக் கொண்டே திருத்தமில்லாமல் உச்சரித்ததினாலும் குற்றமில்லை.

(1) ஆன்டிசிபிலிடிக்:—என்றால் ரத்தத்தில் விஷத்தன்மை (Antisyphilitic) கலந்து ரத்தம் அசுத்தமாகி அதன் மூலமாய் உண்டாகிற மேகப்புண், சூலை, கண்டமாலை முதலான துர்நீர் வியாதிகளைக் குணமாக்குகிற மருந்து.

(2) அனல்ஜேஸிக் அல்லது அனோடைன் (d) — என்றால் மூளையிலும் ஸ்பரிச நரம்புகளிலும் தாக்கி நோவையும், வேதனையையும் தீர்க்கிற மருந்து.

(3) அஃப்ரோடிஸியாக் (f) (d);—என்றால் தாதுவைக குறைக்கும் மருந்து

(4) ஆல்டரேட்டிவ்:—என்றால் மருந்து கொடுக்கும்போது, அம்மருந்து இன்னவிதமாய்த்தான் வியாதியைக் குணமாக்கினது என்று விவரிக்கவாவது, அல்லது எடுத்துத் தெளிவாய்ச் சொல்லவாவது முடியாத விதமாய், ரத்தத்தில் விஷத்தன்மை கலந்து மாறுபாடடைந்து உடம்பில் ஏற்பட்டிருந்த வியாதியை குண

மாக்கி இருக்கிறது என்று மட்டும் சொல்லக் கூடிய மருந்து.

(5) அன்னிடிரோடிக்:— என்றால், அதிகமாக உண்டாகிற (Anhidrotic) வேர்வையைத் தணிக்கிற மருந்து.

(6) அனிஸ்தேட்டிக்:—இது இரண்டு வகைப்படும். முதலாவது முகர்ந்து பார்ப்பதினால் ரத்தத்தில் கலந்து மூளைக்குப்போய் அறிவை மயக்கக் கூடியது. ஆபரேஷன் செய்யும் காலத்தில் முகரவைத்து மயக்கத்தை உண்டு பண்ணுகிற குளோரோபாரம் இந்த இனத்தைச் சேர்ந்தது. (f)

குறிப்பு:—ஆப்பரேஷன் என்றால் பிளவை, கட்டி முதலானவைகளை கத்தியால் அறுத்தல்.

இரண்டாவது மேல் தடவினால் மேல் தோலைத் தின்று விடாமல் தடவின பாகத்தை மட்டும் சுரணை இல்லாமல் மதமதப்பை உண்டாக்கி வலி, வேதனை தெரிய வொட்டாமல் செய்கிற மருந்து.

(7) ஆந்தல்மின்டிக்:—என்றால் கிருமிகளை நாசஞ் செய்தும், வெளிப்படுத்துகிறதுமான மருந்து.

(8) ஆன்டிடோட்:—என்றால் விஷத்தை முறிக்கும் மருந்து. (d) இவைப்பற்றி இப் புஸ்தகத்தின் கடைசிப் பாகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

(9) ஆன்டி பீரியாடிக்:—என்றால் முறைசுரம்போல் குறிப் (d) பிட்ட காலங்களில் வந்து தேகத்தை வருத்தப்படுத்துகிற வியாதிகளைக் குணமாக்குகிற மருந்து.

(10) ஆன்டி ஸெப்டிக்:—என்றால் விஷப்பூச்சிகள் உற்பத்தியாகிறதையும், வளருகிறதையும், தடுத்தும் அவைகளை நாசம் செய்தும் அதன் மூலமாய் அவைகளால் ஏற்படும் கெடுதியை உண்டாகவொட்டாமல் தடுக்கிற மருந்து.

(11) ஆன்டி பைரெட்டிக்:— என்றால் காய்ச்சல்களிலும், இன்னும் வேறு வியாதிகளினாலும் உண்டாகிற கதகதப்பையும், தேகத்திலுள்ள அதிகச் சூட்டையும் தணிக்கிற மருந்து.

(12) ஆன்டி ஸ்பாஸ்மோடிக்:—என்றால் நரம்பு நாடிகளின்
(d)
படபடப்பைத் தணிக்கிறதும், ஜீரணக்குடல், வயிறு இவைகளிலுள்ள புளிப்பை அடித்து வாயுவை வெளிக்கிளப்பி, வயிற்று வலியைத் தணிக்கிறதும், சுவாஸக் குழலில் உள்ள அடைப்பை நிவர்த்தி செய்கிறதுமான மருந்து.

(13) அப்ரோ டிஸியாக்:—என்றால் தாதுபலத்தை அதிகப்
(f) (d) படுத்துகிற மருந்து.

(14) ஆஸ்டிரின்சென்ற்:—என்றால் ரத்தக் குழல்களையும் (Astringent) ஜீரணக் குடல்களையும் சுருங்கச் செய்து, அதன்மூலமாய் ரத்தப் பெருக்கையும், வயிற்றோட்டத்தையும் நிறுத்துகிற மருந்து.

(15) கார்மினேட்டிவ்:—என்றால் வயிற்றுப் பொருமல், புளிப்பு இவைகளைக் கண்டித்து, வயிற்று வலி, அஜீரணம் இவைகளைக் குணமாக்குகிற மருந்து.

(16) கோலகாக்:—பித்தத்தை வெளியாக்கியும், சமப்படுத்
(Cholagogue) துகிறதுமான மருந்து.

(17) கதார்ட்டிக்:— என்றால் மலத்தை வெளியாக்குகிற மருந்து. இது பின் எழுதி இருக்கிற விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

(1) லாக்ஸாட்டிவ்:— என்றால் வழக்கமாய்ப் போகிற மலத்தைக் காட்டிலும் கொஞ்சம் நெகிழ்த்தியாய் மலத்தை வெளியாக்குகிற மருந்து.

(2) பர்கட்டிவ்:—என்றால் கொஞ்சம் தண்ணீராய் மலத்
(g) தை வெளியாக்குகிற மருந்து.

(3) டிராஸ்டிக்:— என்றால் அநேகமாய் மலத்தை தண்ணீ
(d) ராகப் போகச் செய்கிற மருந்து.

(4) ஜடிாகாக்:— என்றால் பூராவும் தண்ணீராகவே மலத்
(Hydragogue) தை வெளியாக்குகிற மருந்து.

(5) கோலகாக் பர்கட்டிவ்:—என்றால் மலத்தோடு பித்தத்
(Cholagogue purgative) தையும் வெளியாக்குகிற மருந்து.

(18) டெமியூல் ஸென்ற்:— என்றால் வழுவழுப்பினாலும்
(d) எண்ணெய்ப் பசையாலும் எரிச்சல் ரணம் முதலியவைகளைச் சாந்தப்படுத்துகிற மருந்து.

(19) டயாபோ ரேட்டிக்:— என்றால் வேர்வையை உண்
(d) (f) டாக்கிக் காய்ச்சலைத் தணிக்கிற மருந்து.

(20) டைஜெஸ்டிவ்:—என்றால் ஜீரணத்தை உண்டு பண்ணு
(d) கிற செய்கைக்கு, வயிற்றுக்கும் குடல்களுக்கும் உதவியாக இருக்கிற மருந்து.

(21) டியோடரேன்ற்:—என்றால் கெட்ட வீச்சத்தை மாற்று
(d) (d) கிற மருந்து.

(22) டயூரெட்டிக்:—என்றால் நீரைப் பிரிக்கும் மருந்து.
(d)

(23) எக்பாலிக்:—என்றால் கருப்பையைச் சுருங்கவைக்கிற
(b) மருந்து.

(24) எமட்டிக்:—என்றால் வாந்தியை உண்டு பண்ணுகிற மருந்து.

(25) எம்மனகாக்:—என்றால் ஒழுங்கீனமான ருதகத்தை
(g) ஒழுங்கு படுத்துகிறதும், எந்தக் காரணத்தால் ருதகம் வெளியாகாமல் இருந்ததோ அந்தக் காரணத்தை நிவர்த்திசெய்து ருதகத்தைத் திரும்பவும் படும்படியாகவும் செய்கிற மருந்து.

(26) எஸ்காரோட்டிக் அல்லது காஸ்டிக். என்றால் பட்ட இடத்தைப் பொக்க வைத்துச் சதையைத் தின்று விடுகிற மருந்து.

(27) எக்ஸ் பெக்டோரேன்ற்:—என்றால் சுவாஸக் குழல் நெஞ்சு இவைகளில் கட்டி யிருக்கும் கபத்தை இளக்கி வெளித்தள்ளுகிறதும் தொண்டைப் புகைச்சல் காகரப்பு இவைகளைச் சாந்தப்படுத்துகிறதுமான மருந்து.

(28) காலக்ட. காக்:—என்றால் குழந்தைகளுக்குப் பால்
(g) (g) கொடுக்கும் பெண்களுக்குப் பால் சுரக்கும்படி செய்கிற மருந்து

(29) எமாடினிக்:—என்றால் ரத்தத்தை அதிகப்படுத்துகிற
(Haematinic) தும், ரத்தத்திற்கு நல்ல சிவந்த நிறத்தையும் கொடுக்கிற மருந்து.

(30) இப்னுடிக்:—என்ருல் மூளையைத் தாக்காமல் தூக்கத்
(h) தை உண்டு பண்ணுகிற மருந்து.

(31) நார்க்கோட்டிக்:—என்ருல் மூளையைத்தாக்க அறிவை மயக்கித் தூக்கத்தை உண்டுபண்ணுகிற மருந்து.

(32) ரெபிரிஜெரேன்ற்:—என்ருல் தாகத்தைத் தணிக்கிற
(f) தும், தேகத்தில் காய்ச்சலிஞல் உண்டாகிற உஷ்ணத்தையும் சாந்தம் செய்கிறதுமான மருந்து.

(33) ரிஸால்வென்ற்:—என்ருல் வீக்கம், ரத்தக்கட்டிகள், தூர்நீர்க் கட்டிகள் இவைகளைக் கரைக்கிற மருந்து.

(34) ரெஸ்டோரேட்டிவ்:—என்ருல் வியாதி யாதொன்றும் இல்லாத காலத்தில் ரத்தத்தில் உள்ள சத்தானது வியாதி ஏற்படும் காலத்தில் குறையும்போது அப்படிக் குறைய வொட்டாமல் ரத்தத்தில் சத்து உண்டாக ஈடுபண்ணக் கொடுக்கிற மருந்து.

(35) ஸ்டார்நியூட்டட்டோரிஸ்:—என்ருல் தும்மலை உண்டாக்குகிற மருந்து.

(36) ஸெடட்டிவ்:—என்ருல் நாடி நரம்புகளின் படபடப்
(d) பையும் இருதய ஓட்டத்தையும் சமப்படுத்துகிறதுமான மருந்து.

(37) ஸ்டமக்கிக்:—என்ருல் வயிற்றின் ஜீரண சக்தியை அதிகப்படுத்தி பசியை உண்டாக்குகிற மருந்து.

(38) ஸடிமிபூலென்ற் :— என்ருல் தாது நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கிறதும், பித்தாசயத்தின்

செய்கையை அதிகப்படுத்துகிறதும், இருதயத்தைப் பலப்படுத்துகிறதும், வயிற்றின் ஜீரண சக்தியை அதிகப்படுத்துகிறதுமான மருந்து.

(39) ஸ்டிப்டிக்:—என்றால் காயம்பட்டதினால் ரத்தம் வடிகிறதை, மேல்பிரயோகம் செய்வதால் ரத்தம் வடியவொட்டாமல் நிறுத்துகிற மருந்து.

(40) டானிக்:—என்றால் வயிறு, தாது நரம்பு, இருதயம், நாடிகள், தசைகள் இவைகளுக்கு எல்லாம் பலத்தைக் கொடுக்கிற மருந்து.

(41) வெர்மிபியூஜ்:—என்றால் கிருமிகளைக் கொல்லாமல் உயி (f) ரோடு வெளித்தள்ளுகிற மருந்து.

(42) வெர்மிசைட்:—என்றால் கிருமிகளைக் கொல்லுகிற (d) மருந்து.

---

# இரண்டாம் பாகம்

இங்கிலீஷ் மருந்துகளின் பெயர்களும் அவைகளின் குணங்களும், அளவுகளும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன.

## (1) ஆலிட்டானிலிடம்

(d)

இதற்கு ஆன்டி பெப்ரின் என்றும் பெயர்.

(f)(b)

இது வெண்மையான மினுமினுப்புள்ள தகடு தகடான தூள்.

குணம்:—1. அனல்ஜேஸிக். 2, ஆன்டிபைரேட்டிக்.
இவைகள் என்னவென்று தெளிவாய்த் தெரிய முதல் பாகத்தின் இரண்டாம் பிரிவில் எழுதி இருக்கிறதைக் கவனித்துத் தெரிந்து கொள்ளவும். இப்படியே ஒவ்வொரு மருந்துக்கும் சுருக்கமாய் ஒரே வார்த்தையில் எழுதி இருக்கிற குணங்களுக் கெல்லாம் முதல் பாகத்தின் இரண்டாம் பிரிவில் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

அளவு:—1 முதல் 3. கிரைன்.

உபயோகம்:—அற்பக் காய்ச்சலில் சூடுதணிய 4-மணி நேரத்திற்கு ஒரு தடவல், தடவல் 1-க்கு 3 கிரைன் வீதம், 3 கிரைன் காபின் ஸிட்ரஸ் என்னும்
(f)
மருந்தோடு சேர்த்துக் கொடுக்கலாம். ஆனால் இது பெனஸிட்டின் ஆன்டிபைரின்.
(f)
என்ற மருந்துகளைப்போல் அவ்வளவு நல்ல மருந்தல்ல. ஆகையால் இதற்குப் பதிலாக பெனஸிட்டின் ஒன்றையே விசேஷமாய் உபயோகப்படுத்தி வருவது உத்தமம்.

## (2) அக்கேஷியா கம்மி.
(g)

அல்லது கம் அக்கேஷியா. இது பிசின் தூள்.
(g)

குணம்:—டெமியூல் ஸென்ற்
(d)

உபயோகம்:—தண்ணீரில் கரைந்து மிக்சரோடு சோராத, பிஸ்மத்ஸப் நைட்ரஸ் காஸ்டர் ஆயில்,
(b)
ஓலியம் கோப்பைபா, டிஞ்சர் கனுபிஸ்
(b) (t) (b)
இன்டிக்கா முதலிய மருந்துகளைத் தண்ணீ
(d)
ரோடு சேரும்படி செய்ய உத்தேசமாய்ப் போதுமான அளவில் சேர்த்துக் கொள்ளலாம்.

(1) மியூஸிலேஜ் அக்கேஷியா:—இது கோந்துப்பசை

செய்யும் விதம்:— ஒருபாகம், கம் அக்கேஷியாவுக்கு, $1\frac{1}{2}$ பாகம் தண்ணீர் சேர்த்து, மார்ட்டரில், பேஸில் கொண்டு பசைபோல் அரைத்துக் கொள்ளவும். மருந்துகளோடு சேர்ந்து அரைக்கும்போது அப்போதைக்கப்போது புதிதாய்ச் செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு:—மார்ட்டர் என்ருல் மருந்து அரைக்கும் உரல், பேஸில் என்ருல் மருந்து அரைக்கும் உலக்கை.

---

## (3) ஆஸிட்டிக் ஆஸிட்.
(d)

இது தெளிவான, புளிப்பு வாடையுள்ள, தண்ணீர் போன்ற மருந்து.

(1) ஆஸிட்டிக் ஆஸிட் டைலியூட்
(d) (d)

**செய்யும் விதம்:**—1 பாகம் ஆஸிட்டிக் ஆஸிட்டும், 7 பாகம் டிஸ்டில்ட் வாட்டரும் ஒன்று சேர்ந்தது.
(d) (d)

**குறிப்பு:**—டிஸ்டில்ட் வாட்டர் என்றால் ஆவித்தண்ணீர்.

**குணம்:**—1. ரேபிரிஜெரேன்ற் 2. டயூரேட்டிக்.
(f) (d)

**அளவு:**—½ முதல் 2 டிராம்.

**உபயோகம்:**—1. இதைத் தனிமையாகவாவது அல்லது சரி பாகம் டிஞ்சர் ஆர்னிக்கா வோடாவது சேர்த்துப் பத்துக்கு மேல் தடவலாம்.
2. கால்ரா கண்டவுடன் 1 அவுன்ஸ் தண்ணீரில் 30 துளிபோட்டுக் கொடுக்கலாம் அல்லது பின் எழுதுகிறவிதமாய் மற்ற மருந்துகளோடு மிக்சராகச் செய்தும் கொடுக்கலாம்.

**கால்ராவுக்கு மிக்சர்**

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| ஆஸிட் ஆஸிட்டிக் டைலியூட் (d) (d) | டிராம் 1 |
| ஸ்பிரிட் ஈதர் நைட்ரோஸி | துளி 60 |
| ஸ்பிரிட் காம்பர் | துளி 15 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |

ஒன்று சேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம், அல்லது, 3 மணிக்கொரு தடவல் அவசரத்துக்குத் தகுந்தபடி கொடுக்கவும்.

## (4) ஆர்ஸனிக்

இது வெள்ளைப் பாஷாணம்.

குணம்:—ஆல்டரேட்டிவ் 2. டானிக்.

அளவு:—1/60 கிரைன் முதல் 1/15 கிரைன் அதாவது 1 கிரைனில் 60-ல் 1-பாகம் முதல் 1 கிரைனில் 15-ல் 1 பாகம் வரை கொடுக்கலாம். இதைத் தனிமையாக இப்படிக் குறைந்த அளவில் ஜாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியிருப்பதால் இதற்குப் பதிலாக இது சேர்ந்திருக்கிற,

(I) லைக்கர் ஆர்ஸனிக்காலிஸ்:—இதை உபயோகப்படுத்திவரலாம். இதற்கு பவ்லர்ஸ் சோலியூஷன்

(f)

என்றும் பெயர். இது லவண்டர் வாடையுள்ள திராவகம் 110 துளி மருந்தில் 1 கிரைன் வெள்ளைப் பாஷாணம் சேர்ந்திருக்கிறது.

அளவு:—2 முதல் 8 துளி.

உபயோகம்:—1. இதை ரத்த அசுத்தத்தால் உண்டாகிற நாள்பட்ட புண், பத்து இவைகளுக்கு 10 நாளைக்கு தடவல் 1-க்கு 2 துளி வீதம் 1 அவுன்ஸ் தண்ணீரில் சேர்த்து நாள் 1-க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுத்து பிறகு 5 நாள் மருந்து நிறுத்தி மறுபடியும் தடவல் 1-க்கு 3 துளி வீதம் மேல்படி விதமாய்க் கொடுத்து மறுபடியும் இடை இடையே மருந்து நிறுத்தி தடவல் 1-க்கு துளி

துளியாய்க் கூட்டிக்கொண்டேபோய் தட வல் 1-க்கு 8 துளி வரும்வரை சாப்பிட்டு நிறுத்திக் கொள்ளவும்.

2. ஆகாரம் சாப்பிட்ட வுடனே உண்டாகிற வயிற்றோட்டத்தையும் அன்னத் துவேஷத் தில் ஏற்படுகிற வாந்தியையும், வயிற்று வலி யையும் நிறுத்த

எடுத்துக்கொள்,

ஐலக்கர். ஆர்ஸனிக்காலிஸ். துளி. 3
ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ். 3

ஒன்று சேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் ஒவ்வொரு ஆகாரத்துக்கு முன் கொடுக்கவும்.

3. கோயினு கொடுத்தும் குணமாகாத நாள் பட்ட மலேக் காய்ச்சல், குளிர் காய்ச்சல் களுக்கு

எடுத்துக்கொள்

ஐலக்கர். ஆர்ஸனிக்காலிஸ். துளி 24
ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ். 3

ஒன்று சேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்க வும்.

இப்படி இரண்டு மூன்று நாள் கொடுத்த பிறகு "ஐலக் கர் ஆர்ஸனிக்காலிஸின்" அளவை தடவல் 1-க்கு 4 துளி

வீதம் நாள் 1-க்கு 3 தடவல் மறுபடியும் 10-நாள் கொடுத்து வரவும்.

2. லைக்கர் ஆர்ஸனியை. எற். ஐட்ராார்ஜிரி அயோடைட்.
(h)(d) (d)(d)
இதற்கு டோனோவான்ஸ் சொலியூஷன்
(d)
என்றும் பெயர்.

குணம்:—1. ஆன்டிஸிபிலிட்டிக் 2. ஆல்டரேட்டிவ்.
(f)

அளவு:—5 முதல் 20 துளி.

உபயோகம்:—1. இதையும், புண், பத்து முதலியவைக ளுக்கு தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் தண்ணீ ரில் 5 துளி வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும். இதை யும் இடை யிடையே நிறுத்தி நிறுத்திக் கொடுக்கவும். ஆனால் நீடித்துச் சாப்பிட வேண்டும்.

---

## (5) ஆஸிட் பென்ஸாயிக்

(Acid Benzoic,)

சாம்பிராணிப் பதங்கம்.

இது வெண்மையான வாசனையுள்ள தகடு தகடான பதங்கம்.

குணம்:—1. ஆன்டிஸேப்டிக் 2. எக்ஸ்பெக்டோரேன்ற் 3. டயூரெட்டிக்
(d)

அளவு:—5 முதல் 15 கிரைன்.

உபயோகம்:—1. இதை நீர்ச்சுருக்கு வியாதிக்கு தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் தண்ணீரில் 10 கிரைன் வீதம் கரைத்து நாள் 1-க்கு 3 தடவல் கொடுக்கவும்.

பார்லி அரிசிக் கஞ்சித் தண்ணீரில் பாலும் சீனியும் சேர்த்துக் கொடுக்கவும்.

2. கால்ராவில் உண்டாகிற வாந்தியை நிறுத்தவும், நீர் பிரியவும் தடவல் 1-க்கு 5 கிரைன் தேனில் கலந்து கொடுக்கவும்.

---

## (6) ஆஸிட் போரிக்

(d) (b)

**போரிக் ஆஸிட்.**

b) (d)

இது வெண்காரத்தில் இருந்து எடுக்கப்படுகிற வெண்மையான மிருதுவான தூள்.

குணம்:—1. ஆண்டி ஸெப்டிக். 2. டயூரெட்டிக்.
(d)

அளவு:—5 முதல் 15 கிரைன் 2 அவுன்ஸ் தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும்.

உபயோகம்:—1. மேகத்திற்கும், வெள்ளைப் பிரமேகத்திற்கும் 1 அவுன்ஸ் தண்ணீரில் 10 கிரைன் வீதம் கரைத்து சிரிஞ்சு பண்ணலாம்.

2. காதில் சீழ் வடிகிறதற்கும் மேல்காட்டிய அளவில் இளஞ் சூடான வெந்நீரில் கரைத்

துக் காதுக்குள் நாள் 1-க்கு 1 தடவல் சிரிஞ்சு பண்ணவும்.

3. 1 அவுன்ஸ் மழைத் தண்ணீரில் 10 கிரைன் வீதம் கரைத்து மேகநீர், கண்சிகட்பு இவைகளுக்கு அப்ஸார்பேன்ற் காட்டன் கொ
(b) (b)
ண்டு முக்கிக் கண்ணில் பிழிந்து கண்ணைச் சுத்தம் செய்யலாம்.

குறிப்பு:—அப்ஸார்பேன்ற் காட்டன் என்ருல் தண்ணீரை
(b) (b)
இழுத்துக் கொள்ளக்கூடிய பஞ்சு.

4. எவ்விதமான புண்களுக்கும், வெட்டுக் காயங்களுக்கும் போராக்ஸ் சோப் கொண்டு
(b)
முதலில் புண்ணை சுத்தம் செய்துவிட்டு அதன்மேல் போராக்ஸ் ஆஸிட் போட்டு மேல் லின்ற், காட்டன் இவைகள் வைத்து வெள்ளைத் துணியால் கட்டி வைக்கலாம்.

5 நீர்ப்பையில் வியாதி ஏற்பட்டு துர்வீச்சமுள்ளதும், கலங்கலான நீர் வரும்போது வீச்சத்தை மாற்றி நீர்ப்பையைச் சரியான நிலைமையில் வைக்க.

எடுத்துக்கொள்

| | | | |
|---|---|---|---|
| | போரிக். ஆஸிட். | | கிரைன். 30 |
| (1) | (b) | (d) | |
| | அக்குவா. சேர்ந்து. | | அவுன்ஸ். 6 |
| | | | ஒன்று சேர் |

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 2 அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் கொடுக்கவும்.

அல்லது

எடுத்துக்கொள்

| | | | |
|---|---|---|---|
| | போரிக். ஆஸிட். கிரைன், | | 15 |
| | (b) (d) | | |
| (2) | யுரோ. டுரோபைன். கிரைன். | | 15 |
| | இன்பியூஷன். பக்கு. சேர்ந்து. அவுன்ஸ். | | 3 |
| | (f) (b) | | |

ஒன்று சேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.
கொஞ்ச நாளைக்குள் தெளிவான வீச்சமில்லாத நீர் இறங்கும்.

1. கிளிஸரின் ஆஸிட்போரிக்
(g) (d)(b)

செய்யும் விதம்:—1 பங்கு போரிக் ஆஸிட்டும் $2\frac{1}{2}$ பங்கு கிளிஸரினும் ஒன்று சேர்த்துக் கலக்கிக் கொதிக்க வைத்து போரிக் ஆஸிட்டைக் கரைத்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:—இதை வாய்ப்புண், உதடு வெடிப்பு, பால் காம்பு வெடிப்பு, ரணம் முதலியவைகளுக்கு நாள் 1-க்குப் பல தடவல் மேல் தடவலாம். பால் குடிக்கும் குழந்தையின் வாயில் பட்டாலும் ஒன்றும் செய்யாது.

2. காது சவ்வுக்குள் ரணம் உண்டாகி ரத்தமாவது, சலமாவது வருகிறதாய் இருந்தால்

காதுக்குள் 20 துளி ஊற்றிப் பஞ்சால் அடைத்து வைத்திருந்து பின் 1 அவுன்ஸ் இளஞ் சூடான வெந்நீரில் 10 கிரைன் போரிக் ஆஸிட் வீதம் கரைத்து போதுமான

(d)

லோஷன் கொண்டு காதை சிரிஞ்சு பண்ணி மறுபடியும் 20 துளி கிளிஸரின் ஆஸிட் போரிக் விட்டு அடைத்து வைக்கவும். இப் படி குணமாகும்வரை செய்யலாம். 2 பாகம் போரிக் ஆஸிட்டும் 1 பாகம் அயோடபார மும் கலந்து புண்கள், காயங்கள் இவை களுக்குப் போடலாம்.

(2) அங்குவன்டம். ஆஸிட்போரிக் அல்லது போரிக் ஆயின்று மென்ற் (போரிக் ஆஸிட் கழிம்பு)

**செய்யும் விதம்:**—1. பங்கு போரிக் ஆஸிட்டும் 9 பங்கு வாஸலேனும் ஒன்று சேர்த்துக் கழிம்பா கச் செய்து கொள்ளவும்.

**உபயோகம்:**—இதையும் எவ்விதமான புண்களுக்கும், காயங் களுக்கும் மேல் போடலாம்.

வேனல் கொப்பளங்களுக்கும் மேல் தடவி 6 மணி நேரம் கழித்து "சாலுாட்டிஸ் சோப்பு கொண்டு சுத்தம் செய்யவும்.

## (7) ஆஸிட் கார்பாலிக்
(d) (b)

### கார்பாலிக் ஆஸிட்.

இது உறைந்திருந்தால் சிராய் சிராயாயும், இளக்கிவைத்திருந்தால் தண்ணீர்போல் வெண்மையாகவாவது, அல்லது சிவந்த நிறமாகவாவது இருக்கும்.

குணம்:—(1) ஆன்டிஸெப்டிக். (2) காஸ்டிக்.

அளவு:—1 முதல் 3 கிரைன் (கட்டியாய் இருந்தால்) 1 முதல் 3 துளி (தண்ணீராய் இருந்தால்) கம் அக்கேஷியா வோடு சேர்த்து அரைத்து 1 அவுன்ஸ் தண்ணீரில் டைபாய்ட் பீவர் என்
(f) d) (f)
னும் விஷஜுரத்துக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். என்றாலும் தற்காலம் இதை அதிகமாய்க் கையாடி வருகிறதில்லை. இதற்குப் பதிலாக குளோரின் மிக்சரை உபயோகப்படுத்தி வருகிறார்கள். இதைச் செய்ய வேண்டிய விதம் பின்னால் எழுதப்பட்டிருக்கிறது.

உபயோகம்:—அழுகச்சிரங்கு ஒன்று அல்லது இரண்டு கண்டவுடன் அவைகளைக் கிள்ளி மேல் தோலைப் பிய்த்துவிட்டு ஒரு குச்சியில் கார்பாலிக் ஆஸிட் முக்கி அவைகளில் வைத்தால் சிரங்குகளை அதிகப்படுத்துகிற பூச்சிகளைக் கொன்றுவிடும்.

## (1) கார்பாலிக் லோஷன்.

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் கார்பாலிக் ஆஸிட் 39 அவுன்ஸ் வெந்நீர் இரண்டையும் ஒன்று சேர்த்து நன்றாய்க் குலுக்கிக் கொள்ளவும்.

**உபயோகம்:**—இதை ஆறுத புண்கள், மேகரணங்கள், வெட்டுக் காயங்கள் முதலானவைகளுக்கு கழுவு நீராக உபயோகப் படுத்தலாம்.

இந்த லோஷனில் கைகளை 15 நிமிஷம் முக்கிவைத்திருந்து பின்பு கார்பாலிக் சோப் கொண்டு சுத்தம் செய்யவும்.

## (2) கார்பாலிக் ஆயில் அல்லது துவரெண்ணெய்

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் கார்பாலிக் ஆஸிட். $\frac{1}{4}$ படி (பக்காவுக்கு) தேங்காய் எண்ணெய் இரண்டும் ஒன்று சேர்த்து நன்றாய் குலுக்கி வைத்துக் கொள்ளவும்.

**உபயோகம்:**— இதை ரணங்களுக்கும், தீப்பட்ட புண்களுக்கும் மேல் போடலாம்.

## (3) கார்போலைஸ்ட் வாஸலைன்.

(b) (d)

**செய்யும் விதம்:**—1 துளி கார்பாலிக் ஆஸிட் 24 கிரைன் வாஸலைன் இரண்டையும் ஒன்று சேர்த்து களிம்பாகச் செய்து கொள்ளவும்.

**உபயோகம்:**—இதை மேகரணங்களுக்கும், துர்நீர்ப் புண்களுக்கும் மேல் தடவி கார்பாலிக் சோப் கொண்டு சுத்தம் செய்யவும்.

---

## (8) ஆஸிடம் ஸிற்றிக்கம்

(d)

ஸிற்றிக் ஆஸிட்.

(d)

*இது எலுமிச்சம்பழ உப்பு இது அதிகப் புளிப்பாயும், கட்டி கட்டியாயும் இருக்கும்.*

குணம்:—ரேபிரி ஜெரேன்ற்

(f)

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—*தாகம் தணிய* 20 கிரைன் ஸிற்றிக் ஆஸிட்டை ½ *அவுன்ஸ் தண்ணீரில் கரைத்து,* 24 கிரைன் சோடா உப்பை 1 அவுன்ஸ் தண்ணீரில் கரைத்து, இதில் மேல்படி புளிப்பை ஊற்றினல் பொங்கும். அப்போது சாப்பிடவும்.

கோயினு மிக்சர் செய்யும்போது கோயினுவைக் கரைக்கத் தடவல் 1 க்கு 5 கிரைன் ஸிற்றிக் ஆஸிட் சேர்த்துக் கொள்ளலாம்.

---

## (9) ஆஸிட் காலிக்

(d) (g)

காலிக் ஆஸிட்

(g) (d)

குணம்:—ஆஸ்டிரிஞ் சென்ற்.

அளவு:—5 முதல் 15 கிரைன்.

உபயோகம்:—உள் அவயவங்களில் உண்டாகிற ரத்தப் பெருக்குகளை நிறுத்த, தடவல் 1 க்கு 5 கிரைன் தண்ணீரில் கரைத்தாவது, மாத்திரையாகச் செய்தாவது, அல்லது தனிப் பொடியாகவாவது நாள் 1-க்கு 3 தடவல் கொடுக்கலாம். இதை இரும்பு சேர்ந்த மருந்துடன் சேர்த்துக் கொடுக்கக் கூடாது.

இரத்தத்தோடு கடுப்பும் வயிற்றழைச்சலும் இருந்தால் அதை நிறுத்த:—

எடுத்துக்கொள்

காலிக். ஆஸிட் கிரைன் 15
(g) (d)
டோவர்ஸ். பவுடர் கிரைன் 15
(d) (d)

ஒன்றுசேர்

3 பொட்டணமாக மடித்துக்கொண்டு நாள் 1-க்கு 3 தடவல், தடவல் 1-க்கு 1 பொட்டணம் தேனில் கலந்து கொடுக்கவும்.

பார்லிமாவு, அல்லது ஆரோருட் மாவு, கஞ்சியில் பால்சேர்த்துக் கொடுக்கவும்.

---

## (10) ஆஸிட். ஐடரோ குளோரிக்.
(d) (h)(d)

மிராட்டிக் ஆஸிட்.
(d)

இதற்கு சங்குத் திராவகம் என்றும் பெயர் வழங்கி வருகிறது.

குணம்:—காஸ்டிக்

(1) ஆஸிட். ஐட்ரோகுளோரிக் டைலியூட்
(d) (h)(d) (d)

செய்யும் விதம்:—$2\frac{1}{2}$ அவுன்ஸ் தண்ணீரை கல்கார்க்கு குப்பியில் அடைத்து அதில் 1 அவுன்ஸ் ஐட்ரோகுளோரிக் ஆஸிட்டைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஊற்றி நன்ருய் ஒன்று சேரும்படி குலுக்கிக் கொள்ளவும்.

அளவு:—5 முதல் 20 துளி

உபயோகம்:—(1) கொயினுமிக்சர் செய்யும்போது கொயினுவைக் கரைக்க தடவல் 1-க்கு 5 துளி சேர்த்துக் கொள்ளலாம்.

(2) வயிற்றில் காஸ்ட்ரிக் ஜியூஸ் என்னும் நீர்
(g)
சுரக்கிறதில் குறைவு ஏற்பட்டு அதனுல் அஜீரணம் வாந்தி ஏற்பட்டால் அதற்கும் கர்ப்ப ஸ்திரீகளுக்கு உண்டாகும் வாந்தியை நிறுத்தவும்.

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| ஆஸிட் ஐட்ரோகுளோரிக் டைலியூட் துளி | 10 |
| டிஞ்சர். ஜென்ஷன்கோ. துளி | 60 |
| ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் | 3 |

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் விதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

## (11) ஆஸிட். ஹைட்ரோஸியானிக்
(d) (h) d)

### டைலியூட்.
(d)

டைலியூட் பிரஸிக் ஆஸிட் என்றும் பெயர். இது கொடிய
(d) (d)

விஷம் ஆகையால் இதை உபயோகப் படுத்தும்போதெல்லாம் அதிக ஜாக்கிரதையாய் உபயோகப்படுத்த வேண்டும்.

**குணம்:**—ஸெடட்டிவ்
(d)

**அளவு:**—2 முதல் 6 துளி

**உபயோகம்:**—இதை அஜீரணத்தினாலும், முக்கியமாய் வயிறு புண்படுவதினாலும், ஏற்படுகிற வயிற்றுவலி, வாந்தி இவைகளை நிறுத்த தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் தண்ணீரில் 2 துளி சேர்த்துக் கொடுக்கலாம். என்றாலும் தனிமையாக இப்படிக் குறைந்த அளவில் ஜாக்கிரதையாய் உபயோகப்படுத்த வேண்டிய திருப்பதால் மேல்படி வியாதிகளுக்கு இந்த மருந்தும் இன்னும் மற்ற மருந்துகளும் சேர்ந்திருக்கிற "ஈலட்ஸ் பெப்ஸின் மிக்சர்" என்னும் மருந்
(h)
தை நன்றாய்க் குலுக்கிக்கொண்டு தடவல் 1 க்கு 30 துளி 1 அவுன்ஸ் தண்ணீரில் சேர்த்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

## (12) ஆஸிட் நைட்ரிக்.

(d)

நயிற்றிக் காஸிட்

(d)

இது வெடியுப்புத் திராவகம். இதை உள்ளுக்குக் கொடுக்கக் கூடாது.

குணம்:—கரோஸிவ் அதாவது மேல்புட்டால் சதையைத் தின்றுவிடக் கூடியது.

ஆஸிட்நைட்ரோ ஐட்ரோ குளோரிக். டில்

(d) (h)(d) (d)

செய்யும் விதம்:—$12\frac{1}{2}$ அவுன்ஸ் தண்ணீரை கல் கார்க்குக் குப்பியில் அடைத்து அதில் $1\frac{1}{2}$ அவுன்ஸ் நைட்ரிக் ஆஸிட்டையும் 2 அவுன்ஸ் ஐட்ரோ குளோரிக் ஆஸிட்டையும் முதலில் ஒன்று சேர்த்துக்கொண்டு மேல்படி தண்ணீரில் கொஞ்சம் கொஞ்சமாய் ஊற்றிக் குலுக்கிக்கொண்டு 14 நாள் வைத்திருந்து பின்பு உபயோகப்படுத்தவும்.

அளவு:—5 முதல் 20 துளி

உபயோகம்:—இது பித்தத்தைச் சாந்தம் செய்ய நல்ல மருந்து. ஜீரணக் கருவிகளாகிய வயிறு, குடல், லிவர் என்னும் பித்தாசயம் இவைகளுக்குப் பலத்தைக் கொடுத்துப் பசி உண்டாக்க.

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| ஆஸிட். நைட்ரோ. ஐட்ரோகுளோரிக். டில் | துளி | 30 |
| டிஞ்சர். நக்ஸ் வாமிக்கா | துளி | 30 |

ஸிரப். ஸிம்பில் — டிராம் 1½
இன்பியூஷன் குவாஷியா சேர்ந்து — அவுன்ஸ் 1½
(f) — ஒன்று சேர்
மிக்சர் செய்

தடவல் 1 க்கு ½ அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

குறிப்பு:—இன்பியூஷன் குவாஷியாவுக்குப் பதிலாக தடவல் 1 க்கு 20 துளி டிஞ்சர் குவாஷியா சேர்த்துக் கொள்ளலாம்.

(2) இதையும் கொயினவைக் கரைக்கத் தடவல் 1 க்கு 5 துளி உபயோகப்படுத்தலாம்.

---

## (13) ஆஸட், பாஸ்பாரிக். டைலியூட்.
(d) (f) (f) (d)

குணம்:—ரேபிரிஜெரேன்ற்
(f)

அளவு:—5 முதல் 20 துளி

உபயோகம்:—நீரழிவுக்காரர்களுக்குத் தாகத்தை நிறுத்த 10 அவுன்ஸ் தண்ணீரில் 10 துளி சேர்த்து ஒரே தடவலாகக் கொடுக்கலாம்.

---

## (14) ஆஸிட். ஸாலி ஸிலிக்
(d)

ஸாலி. ஸிலிக். ஆஸிட்.
(d)

குணம்:—(1) ஆன்டிபைரேட்டிக் (2) ஆன்டிரூமேட்டிக்:

ஆன்டிரூமேட்டிக் என்றால் வாதத்தைக் குணமாக்குகிற மருந்து.

அளவு:—5 முதல் 20 கிரைன்

**உபயோகம்:**—இதற்கு ஆன்டிஸெப்டிக் குணமும் உண்டு. பத்துக்குமேல் தடவ.

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| ஸாலி. ஸிலிக், ஆஸிட் | டிராம் | 1 |
| குளோரோபார்ம் | அவுன்ஸ். | 1 |

(f)

ஒன்று சேர்

கல்கார்க்குக் குப்பியில் வைத்துக்கொண்டு பத்தை முதலில் கார்பாலிக் சோப் அல்லது ரைட்ஸ் கோல்டார் சோப் கொண்டு சுத்தம் செய்துவிட்டு இதில் கொஞ்சம் நாள் 1-க்கு 1 தடவல் பத்தின்மேல் தடவலாம்.

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| (2) ஸாலி. ஸிலிக். ஆஸிட். | கிரைன் | 10 |
| போரிக். ஆஸிட் | கிரைன் | 30 |
| ரிஸார்ஸின். | கிரைன் | 20 |
| வாஸலேன் | அவுன்ஸ் | 1 |

ஒன்றுசேர்

களிம்பாகச் செய்துகொண்டு இதில் கொஞ்சம் பத்தின் மேல் தடவி முன் சொல்லிய சோப்களில் யாதேனும் ஒன்றால் சுத்தம் செய்யவும்.

வாதத்திற்கு ஆஸிட் ஸாலி ஸிலிக்கை உபயோகப்படுத்துவதை விட இது சேர்ந்திருக்கிற "ஸோடா ஸாலிஸிலஸ்" என்னும் மருந்தை உபயோகப்படுத்தலாம். இதைப் பற்றி பின் எழுதப்பட்டிருக்கிறது.

---

## (15) ஆஸிட் சல்பியூரிக்
(d) (f)

சல்பியூரிக் ஆஸிட்
(d)

இது கெந்தகத் திராவகம்.

**குணம்:**—கரோஸிவ்

(1) ஆஸிட் சல்பியூரிக் அரோமேட்டிக்
(d) (f)

**செய்யும் விதம்:**—$7\frac{3}{8}$ அவுன்ஸ் ரெக்டிபைட் ஸ்பிரிட். இதை
(f)(d)

16 அவுன்ஸ் பிடிக்கக்கூடிய கல்கார்க்குக் குப்பியில் விட்டு இதில் $\frac{3}{4}$ அவுன்ஸ் சல்பியூரிக் ஆசிட்டை கொஞ்சம் கொஞ்சமாய் ஊற்றிக் குலுக்கி ஒன்று சேர்த்துக்கொண்டு இதோடு 1 டிராம் ஸ்பிரிட் சின்னமனும், $2\frac{1}{2}$ அவுன்ஸ் டிஞ்சர் ஜிஞ்சி பேரிசும் சேர்த்துக் கொள்ளவும்.

**குணம்:**—ஆஸ்டிரிஞ்சென்ற்

அளவு:—5 முதல் 20 துளி

**உபயோகம்:**—வயிற்றோட்டத்தை நிறுத்த

*எடுத்துக்கொள்*

| | |
|---|---|
| ஆஸிட். சல்பியூரிக். அரோமேட்டிக் | துளி 15 |
| டிஞ்சர். ஓப்பியம் | துளி 15 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

*மிக்சர்செய்*

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் கொடுக்கவும்.

## (2) ஆஸிட். ஸல்பியூரிக். டைலியூட்
(d) (f) (d)

**செய்யும் விதம்:**—$5\frac{1}{2}$ அவுன்ஸ் தண்ணீரை கல்கார்க்குக் குப்பியில் அடைத்து, $\frac{1}{2}$ அவுன்ஸ் ஸல்பியூரிக் ஆஸிட்டைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஊற்றிக் குலுக்கி ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.

**குணம்:**—ஆஸ்டிரிஞ்சென்ற்

**அளவு:**—5 முதல் 20 துளி

**உபயோகம்:**—வயிற்றில் ஜீரணமாகாத ஆகாரம் இல்லாமலும் வயிற்றில் உப்பிசம் இல்லாமலும் இருந்து அதே சமயத்தில் மலம் தண்ணீராய்ப் போகிறதாய் இருந்தால் மலத்தைக் கட்டி வயிற்றோட்டத்தை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| ஆசிட். ஸல்பியூரிக். டில் | துளி 30 |
| டிஞ்சர். ஓப்பியம் | துளி 15 |
| ஸ்பிரிட். குளோரோபாரம் | துளி 30 |
| ஆக்குவாமெந்தா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் 2, அல்லது 3-மணிக்கொரு தடவல் அவசரத்துக்குத் தகுந்தபடி கொடுக்கவும். ஒரே தடவல் மருந்தில் மலம் போகாமல் நின்று விட்டால் அடுத்த தடவல் கொடுக்க வேண்டாம்.

இதையும் கொயினவைக் கரைக்கத் தடவல் 1-க்கு 5 துளி சேர்த்துக் கொள்ளலாம்.

## (16) ஆஸிட் டானிக்
(d)

டானிக் ஆஸிட்
(d)

*இது துவர்ப்புள்ள தவிட்டு நிறமான தூள் இது தண்ணீரில் கரையும்.*

**குணம்:**—ஆஸ்டிரிஞ்சென்ற்

**அளவு:**—2 *முதல்* 5 **கிரைன்.**

**உபயோகம்:**—*இதை உள்ளுக்கு, உள் அவயவங்களில் உண்டாகிற ரத்தப் பெருக்கை நிறுத்த* **கர்லிக் ஆஸிட்டைப் போல்** *உபயோகப்படுத்தலாமென்றாலும்* **விசேஷமாய்** *வெளிப் பிரயோகத்திற்கு மட்டும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.*

### (1) கிளிஸரின் ஆஸிட் டானிக்
(g) (d)

**செய்யும் விதம்:**—$\frac{1}{4}$ *அவுன்ஸ்* டானிக்ஆஸிட் 1 *அவுன்ஸ்* கிளிஸரின் *இந்த இரண்டையும்* **மார்ட்டரில்** *நன்றாய்* டானிக் ஆஸிட் கிளிஸரினோடு *சேரும்படி அரைத்துக் கொள்ளவும்.*

**இதை உதடு** வெடிப்பு, நாக்குப்புண், *உள்நாக்கு வளர்தல் முதலானவைகளுக்கு ஒவ்வொரு தடவலும் மருந்தை நன்றாய்க் குலுக்கிக் கொண்டு காலை, மாலை தடவி வரலாம்.*

## (17) ஆஸிட். டார்ட்டாரிக்
(d)

டார்ட்டாரிக் ஆஸிட்
(d)

இது புளிப்புள்ள வெண்மையான மருந்து

**குணம்:**—ரேபிரி ஜெரேன்ற்
(f)

**அளவு:**—5 முதல் 20 கிரைன்

**உபயோகம்:**—சோடா உப்பைப் பொங்க வைத்துச் சாப்பிட உதவும்.

---

## (18) அக்கோனைட். ரூட்

கலப்பக் கிழங்கு

இது விஷமான மருந்து.

(1) டிஞ்சர். அக்கோனைட்

**குணம்:**—ஸெடட்டிவ்
(d)

**அளவு:**—6 முதல் 15 துளி.
2 முதல் 5 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க)

**உபயோகம்:**—காய்ச்சல் மும்மரமாய் 105, 106 டிகிரியில் இருக்கையில் 1 அவுன்ஸ் தண்ணீரில் 2 துளி வீதம் சேர்த்து 15 நிமிஷத்துக்கு ஒரு தடவல், தர்மாமிட்டர் வைத்துப் பார்த்துக் கொண்டு, 6 அல்லது 8 தடவல் இந்தப்படி கொடுத்துப் பிறகு 2 அல்லது 3 மணிக் கொரு தடவல் மேல்படி விதமாய் தடவல் 1-க்கு 2 துளி வீதம் கொடுத்து காய்ச்சல்

101 டிக்கிரிக்கு வந்தவுடன் நிறுத்திக் கொள்ளவும்.

குறிப்பு:—தர்மாமீட்டர் என்றால் உடம்பில் சூடு எவ்வளவு இருக்கிறதென்று காட்டும் கருவி.

(2) லினிமேன்ற் அக்கோனைட்

இது விஷமான தைலம். இதை வெளிப் பிரயோகத்திற்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். வாத வலி, உளைச்சல், இடுப்புவலி, சந்துவலி இவைகளுக்கு இந்தத் தைலத்தை வலி உளைச்சல் உள்ள இடங்களில் சூடு பிறக்க அழுத்தித் தேய்த்து வைத்திருந்து வெந்நீர் விடவும். தைலம் தேய்த்தவர்கள் கையை நன்றாய்ச் சுத்தம் செய்யவேண்டும்.

---

## (19) ஈதர்

இதற்கு ஸல்பியூரிக் ஈதர் என்றும் பெயர். இது காற்றோடு (f)

காற்றாய்ப் போய்விடுகிறதும், நெருப்புப் பற்றி எரியக் கூடியதும், மிகவும் காரமான வாசனை யுள்ளதுமான தண்ணீர் போன்ற மருந்து.

குணம்:—(1) ஸ்டிமியூலேன்ற் (2) அனிஸ்தேட்டிக்

அளவு:—10 முதல் 30 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க)
40 முதல் 60 துளி (ஒரே தடவல் கொடுக்க)

உபயோகம்:—இதை விக்கலுக்கு தடவல் 1-க்கு 10 துளி ஒரு அவுன்ஸ் தண்ணீரில் போட்டுக் கொடுக்கலாம்.

(1) ஸ்பிரிட் ஈதர்

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் ஈதர். 2 அவுன்ஸ் ரெக்டிபைட் ஸ்பிரிட் இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக் கல்கார்க்குக் குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

**குணம்:**—ஈதருக் குண்டானது

அளவு:—20 முதல் 40 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க)
60 முதல் 90 துளி (ஒரே தடவல் கொடுக்க)

உபயோகம்:—நாடியில் சூடுண்டாக்கி, இருதயத்தையும் பலப்படுத்தி, தேகத்திலும் சூடுண்டாக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| ஸ்பிரிட். ஈதர் | துளி 30 |
| ஸ்பிரிட். அமோனியா, அரோமேட்டிக் | துளி 60 |
| ஸ்பிரிட். குளோரோபாரம் | துளி 30 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம், 2 அல்லது 3 மணிக்கொரு தடவல் அவசரத்துக்குத் தகுந்தபடி கொடுக்கவும்.

(2) ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி

**குணம்:**—(I) டயாபோரெட்டிக் (2) டயூரெட்டிக்
(f) (d)

அளவு:—20 முதல் 40 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க)
60 முதல் 90 துளி (ஒரே தடவல் கொடுக்க)

உபயோகம்:—(1) குழந்தைகளுக் குண்டாகிற ஜாக்காய்ச்சல், கணைச் சூட்டுக்கு.

எடுத்துக்கொள்

ஸ்பிரிட் ஈதர். நைட்ரோஸி துளி. 30

லைக்கர். அமோனியா. ஆஸிட்டேட்டிஸ் டிராம். 1.

ஸிரப் ஆரன்டி துளி. 40

ஆக்குவா சேர்ந்து அவுன்ஸ். 1

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 2 தேக்கரண்டி வீதம் 3 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

(2) பெரியவர்களுக்கு உண்டாகிற எவ்வித மான காய்ச்சல்களிலும் சூடு தணிய:—

எடுத்துக்கொள்

ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி டிராம். 1

லைக்கர். அமோனியா. ஆஸிட்டேட்டிஸ் டிராம் 6

ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ். 3

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

(3) நீர்க்கடுப்புக்கு:—

எடுத்துக்கொள்

ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி துளி. 90

பொட்டாஸ் பைகார்ப் கிரைன். 30

டிஞ்சர். அயோஸியாமஸ் துளி. 30

இன்பியூஷன். பக்கு. சேர்ந்து அவுன்ஸ் 3
(f) (b)

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

---

## (20) ஆலோயின்

இது கற்றாழையிலிருந்து எடுக்கப்படுகிற வாசனை யாதொன்று மில்லாத மஞ்சள் நிறமான மருந்து:

குணம்:—கதார்ட்டிக்

அளவு:—½ முதல் 2 கிரைன் (மாத்திரையாகச் செய்து கொடுக்கவும்.)

உபயோகம்:—நாள்பட்ட மலச்சிக்கலை நீக்க.

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| ஆலோயின் | கிரைன் | 7 |
| எக்ஸ்ட்ராக்ட். நக்ஸ். வாமிக்கா | கிரைன் | 6 |
| எக்ஸ்ட்ராக்ட்.காஸ்காராஸாக்ரடா | கிரைன் | 30 |

(d)

ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக் கொண்டு 1 மாத்திரை, ஒவ்வொருநாள் இரவிலும் சாப்பாட்டுக்கு சற்றுமுன் சாப்பிடவும்.

(1) பில் ஆலோஸ் எற்மர்.

குணம்:—கதார்ட்டிக் (2) எம்மனகாக்

அளவு:—4 முதல் 8 கிரைன்

உபயோகம்:—சூதகக் கட்டுக்கு சூதகத்தை வெளியாக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பில். ஆலோஸ். எற்மர் | கிரைன் 48 |
| பெர்ரை. ஸல்பஸ் | கிரைன் 12 |
| (f) (f) | |

ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக் கொண்டு தடவல் 1-க்கு 1 மாத்திரைவீதம் நாள் 1-க்கு 2 அல்லது 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

(3) டிஞ்சர் ஆலோஸ்.

குணம்:—கதார்ட்டிக் (2) எம்மனகாக்

அளவு:—½ முதல் 1 டிராம் (அடுத்தடுத்துக் கொடுக்க)
1½ முதல் 2 டிராம் (ஒரே தடவல் கொடுக்க)

உபயோகம்:—இதையும் சூதகக் கட்டுக்குக் கொடுக்கலாம்.

---

## (21) அமோனியா. பென்சாஸ்.
(b) (z)

குணம்:—(1 டயூரெட்டிக்
(d)

அளவு:—5 முதல் 15 கிரைன்

உபயோகம்:—இதை நீர் பிரியவும் தாராளமாய் நீர் இறங்கவும் செய்ய

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| அமோனியா. பென்சாஸ் | கிரைன் 30 |
| இன்பியூஷன். பக்கு சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| (f) (b) | |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்

(1) அமோனியா. புரோமைட்
(b) (d)

குணம்:—ஸேடட்டிவ்
(d)

அளவு:—5 முதல் 30 கிரைன்

உபயோகம்:—இதை, தொண்டை கமருதலையும், புகைச்சலையும், வலியையும், குத்திருமலையும் குணமாக்கக் கொடுக்கலாம்.

1 வயசுக் குழந்தைக்குக் குத்திருமலை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| அமோனியா. புரோமைட். | கிரைன் 8 |
| வைனம். இப்பிக்காக் | துளி 8 |
| டிஞ்சர். ஸில்லி | துளி 10 |
| டிஞ்சர். ஸெனிகா (g) | துளி 10 |
| ஸிரப். ரோலு | துளி 30 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 1 |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 2 தேக்கரண்டி வீதம் 3-மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

(2) எம்பிளாஸ்ட்ரம். அமோனியை. கம். ஐட்ரார்ஜிரி
(h)

குணம்:—ரிஸால்வென்ற்

உபயோகம்:—இதில் கொஞ்சம் இளக்கித் தோலிலாவது, முரடான துணியிலாவது தடவி அனல்

காட்டி அரையாப்புக் கட்டிகள், ரத்தக்கட்டிகள், கண்டமாலே இவைகளேக் கரைக்க மேல் போடலாம். கட்டிகள் கரையும் வரை, மாறிமாறிப் போடவேண்டும்.

---

## (22) அமோனியா கார்போனஸ்.

(ந)

இது மிகவும் காரமுள்ள கட்டியான மருந்து. நவாச்சாரமும் சுண்ணும்பும் சேர்ந்தது.

குணம்:—(1) ஸ்டிமியூலென்ற் (2) எக்ஸ் பெக்டோரேன்ற்

அளவு:—3 முதல் 10 கிரைன்.

உபயோகம்:—(1) ஜலதோஷத்திற்கு இதை முகந்து பார்க்கலாம். அல்லது இது சேர்ந்திருக்கிற "ஸ்மெல்லிங் சால்ட் வித் லவண்டர்" என்ற மருந்தையும் ஜலதோஷத்திற்கு முகர்ந்து பார்க்கலாம்.

பல் கிட்டி மூச்சுப் பேச்சில்லாமல் இருக்கும் காலத்தில் மூக்கில் பிடித்து முகர வைக்கலாம்.

(2) நியுமோனியா என்னும் கபசுரத்துக்கும் ஜலதோஷத்தால் உண்டாகிற தொண்டைப் புகைச்சல் அதோடு சம்பந்தப்பட்ட காய்ச்சல் இவைகளேக் குணமாக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| அமோனியாகார்ப் | கிரைன் 10 |
| டிஞ்சர். ஸெனிகா | துளி 40 |

(g)

| | |
|---|---|
| டிஞ்சர். ஸின்கோனு. கோ | துளி 60 |
| டிஞ்சர் ஸில்லி | துளி 15 |
| வைனம். இப்பிக்காக் | துளி 30 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி | துளி 60 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் 4-மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

அல்லது

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| அமோனியாகார்ப் | கிரைன் 10 |
| டிஞ்சர். செனிகா | துளி 30 |
| வைனம். இப்பிக்காக் | துளி 30 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி | துளி 60 |
| ஆக்குவா காம்பர். சேர்ந்து | அவுன்ஸ் 3 |

(f)

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் கொடுக்கவும்.

(1) லிக்கர் அமோனியா ஆஸிட்டேட்டிஸ்.

குணம்:—(1) டயூரெட்டிக் (2) டயா?பா ரெட்டிக்
(d) (d) (f)

அளவு:—2 முதல் 6 டிராம்

உபயோகம்:—இதை எவ்விதமான காய்ச்சல்களிலும் சூடு தணியு

எடுத்துக்கொள்

லைக்கர். அமோனியா. ஆஸிட்டேட்டிஸ் டிராம் 6
ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி டிராம் 1
ஆக்குவா சேர்ந்து அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் 3 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

காய்ச்சலோடு இருமலும் இருந்தால் மேல்படி மிக்சரில் தடவல் 1-க்கு 10-துளி வைனம் இப்பிக்காக் சேர்த்துக் கொள்ளவும்.

(2) ஸ்பிரிட் அமோனியா அரோமேட்டிக்.

**குணம்:**—ஸ்டிமியூலென்ற்

**அளவு:**—20 முதல் 40 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க)
60 முதல் 90 துளி ஒரே தடவல் கொடுக்க)

**உபயோகம்:**—இதை அஜீரணம், வயிற்றுப் பொருமல் இவைகளைக் கண்டிக்கவும் இருதய பலயீனத்தை மாற்றவும், நாடிகளில் சூடுண்டாக்கவும், களைப்பை மாற்றவும் கொடுக்கலாம்.

## (23) அனித்தி

### சதகுப்பை

### (1) ஒலியம் அனித்தி

**குணம்:**—(1) ஆன்டி ஸ்பாஸ்மோடிக் (2) கார்மினேட்டிவ்

அளவு:—½ முதல் 3 துளி

உபயோகம்:—குழந்தைகளுக்குண்டாகிற, புளிப்பு, மந்தம், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி இவைகளுக்குக் கொஞ்சம் சீனியில், ஒரு குச்சியில் முக்கிக் கலந்து கொடுக்கலாம்.

(2) ஆக்குவா அனித்தி

செய்யும் விதம்:—1 அவுன்ஸ் தண்ணீருக்கு ½ துளி ஆயில் அனித்தி வீதம், முதலில் ஆயில் அனித்தியைப் பாட்டிலில் போட்டு பிறகு தண்ணீர் விட்டு நன்றாய்க் குலுக்கிக் கொள்ளவும்.

அளவு:—½ முதல் 2 அவுன்ஸ்

உபயோகம்:—1 வயசு குழந்தைக்கு, வயிற்று வலிக்கு 1 முதல் 2 தேக்கரண்டி தடவல் 1 க்குக் கொடுக்கலாம்.

---

## (24) அனிஸி

### பெருஞ் சீரகம்

### (1) ஒலியம் அனிஸி

குணம்:—(1) ஆன்டி ஸ்பாஸ்மோடிக் (2) கார்மினேட்டிவ்
(d)

அளவு:—½ முதல் 3 துளி

உபயோகம்:—இதை சிறு குழந்தைகளுக்கு மந்தம், புளிப்பு, வாந்தி, வயிற்றுப் பொருமல் இவைகளைக் குணமாக்க.

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| ஒலியம் அனிஸி | துளி 1 |
| சோடா பை கார்ப் | கிரைன் 10 |

(d) (b)

பல்விஸ் ரீயை — கிரைன் 5
ஒன்றுசேர்

4 பொட்டணமாக மடித்துக் கொண்டு 4 மணிக்கொரு தடவல் 1 பொட்டணம் தேனில் கலந்து கொடுக்கவும்.

### (2) ஆக்குவா அனீஸி

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் தண்ணீருக்கு $\frac{1}{2}$ துளி ஆயில் அனிஸி **வீதம்** முதலில் பாட்டிலுக்குள் போட்டு பிறகு தண்ணீர் சேர்த்து நன்ருய்க் குலுக்கிக் கொள்ளவும்.

**அளவு:**—$\frac{1}{2}$ முதல் 2 அவுன்ஸ்

**உபயோகம்:**—இதையும் சிறு குழந்தைகளுக்கு ஆக்துவா அனித்தியைப் போல் உபயோகப்படுத்தலாம்.

### (3) ஸ்பிரிட் அனீஸி

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் ஆயில் அனிஸி, 9 அவுன்ஸ் ரெக்டிபைட் ஸ்பிரிட் இந்த இரண்டும் ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.

**குணம்:**—ஆயில் அனிஸிக்குள்ளது

**அளவு:**—5 முதல் 20 துளி

## (25) ஆன்டிமோனியல். பவுடர்.

(d)

பல்விஸ் ஆன்டிமோனியாலிஸ்

இலை "ஜேம்ஸஸ்" பவுடருக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம்.

குணம்:—(1) டயாபோ ரெட்டிக் (2) எமட்டிக்
(d) (f)

அளவு:—3 முதல் 6 கிரைன்

உபயோகம்:— இதைக் குழந்தைகளுக்குக் காய்ச்சலைத் தணிக்க 1 வயசு குழந்தைக்கு ¼ முதல் ½ கிரைன் கொஞ்சம் சீனியில் கலந்து 4 மணி நேரத்துக்கொரு தடவல் கொடுக்கலாம். அல்லது தேனில் கலந்து கொடுக்கலாம்.

## (1) ஆன்டி மோனியம் டார்ட்டரேட்டம்

இதற்கு டார்ட்டார் எமட்டிக் என்றும் பெயர்.

குணம்:—(1) எமட்டிக் (2) டயாபோரெட்டிக் (3) எக்ஸ்
(d) (f)
பெக்டோ ரேன்ற்

அளவு:—1 முதல் 2 கிரைன் (வாந்தி உண்டுபண்ண)
1/24 முதல் ⅛ கிரைன் (காய்ச்சலைத்தணிக்க)
⅛ முதல் ¼ கிரைன் (தொண்டைப் புகைச்சலைத் தணிக்க)

உபயோகம்:—1 வயசு குழந்தைக்கு ஈளை இருமலுக்கு அதாவது இழுப்போடு கஷ்ட சுவாசமு முள்ள இருமலுக்கு வாந்தி உண்டுபண்ணி கபத்தை வெளியாக்கி இருமலையும் குணப்படுத்த.

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டார்ட்டார். எமட்டிக் | கிரைன் 1 |
| வைனம் இப்பிக்காக் | டிராம் 4 |
| ஸிம்பிள் ஸிரப் | அவுன்ஸ் 1 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 6 |
| | ஒன்றுசேர் |

மிக்சர் செய்

15 நிமிஷத்துக்கு ஒரு தடவல் வாந்தி உண்டாகும் மட்டும் தடவல் 1 க்கு 2 தேக்கரண்டி வீதம் கொடுத்து வாந்தி ஆன பிறகு ஒன்று, இரண்டு அல்லது மூன்று மணிக்கொரு தடவல் வியாதியின் மும்மரத்துக்குத் தகுந்தபடி தடவல் 1 க்கு 1 தேக்கரண்டி வீதம் கொடுக்கவும்.

(2) வைனம். ஆன்டி. மோனியாலிஸ்

**செய்யும் விதம்:**—½ அவுன்ஸ் தண்ணீரை நன்றாய்க் கொதிக்க வைத்து அதில் 20 கிரைன் டார்ட்டார் எமட்டிக்கைக் கரைத்து மொத்தம் 10 அவுன்ஸ் ஆகும்படி முந்திரிப்பழ ஒயின் சேர்த்துக்கொள்ளவும்.

**அளவு:**—10 முதல் 30 துளி (தொண்டைப் புகைச்சலைத் தணிக்க); 2 முதல் 4 டிராம் (வாந்தி உண்டாக்க)

**குறிப்பு:**—(1) 1 வயசுக் குழந்தைக்கு தொண்டைப் புகைச்சலைத் தணிக்க தடவல் 1 க்கு 3 துளி.

(2) வாந்தி உண்டுபண்ண தடவல் 1 க்கு 15 துளி.

---

## (26) அரரோபா

(b)

கிரைஸரோபின்

(b)

இதற்கு கோவா பவுடர் என்றும் பெயர்

(g) (d)

உபயோகம்:—இதில் கொஞ்சம் எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் கலந்தாவது அல்லது 1 அவுன்ஸ் வாஸலேனேடு 30 கிரைன் கோவாபவுடர் சேர்த்துக் களிம்பாகச் செய்தாவது பத்துக்கு மேல் தடவலாம். பின்பு கார்பாலீக் சோப், அல்லது ரைட்ஸ் கோல்டார் சோப் கொண்டு சுத்தம் செய்யவும்.

## (27) அர்ஜெண்டம் நைட்ரஸ் லூனார்காஸ்டிக்

இதற்கு வெள்ளிக் காடிக்காரம் என்று பெயர்.

உபயோகம்:—(1) கண் ரெப்பைகள் வீங்கி கண் இமைக்குள் பூவளர்ந்திருப்பதைக் கரைக்க 1 அவுன்ஸ் மழைத் தண்ணீரில் 4 அல்லது 5 கிரைன் வீதம் கரைத்து நீல நிறமான சீசாவில் கார்க்கு நன்றாய் மூடி வைத்துக்கொண்டு காமல் ஏர் பிரஷ் இதினாலாவது, அல்லது
(c) (b) (b)
குச்சியில் "அப்ஸார் பென்ற் காட்டன்"
(b) (b)
சுற்றியாவது முதலில் 1 அவுன்ஸ் தண்ணீருக்கு 10 கிரைன் போரிக் ஆஸிட் கரைத்து போதுமான லோஷன் செய்து கொண்டு அப்ஸார் பென்ற் காட்டனால் முக்கிக் கண்களுக்குள் பிழிந்து கண்களைச் சுத்தம் செய்து, பிறகு கண் இமையை மடக்கி வைத்துக்கொண்டு காஸ்டிக் சோலியூஷனில் முக்கி இமையில் தடவி கண்ணை மூடி விடவும்.

(2) புண்ணின் கோழைச் சதையைக் கரைக்க மேல் தடவ உதவும்.

(3) 1 அவுன்ஸ் தண்ணீரில் 1 கிரைன் கரைத்து மேகத்துக்கு நீர்த்தாரைக்குள் சிரிஞ்சு பண்ணலாம்.

---

## (28) ஆர்னிக்கா

### (1) டிஞ்சா ஆரனிக்கா.

உபயோகம்:—இதை வெளிப்பிரயோகத்திற்கு மாத்திரம், சுளுக்கு, ஊமை அடி முதலியவைகளுக்கு மேல் தடவி வைத்திருந்து பின்பு வெந்நீர் விடவும். ரத்தம் கண்டால் உபயோகிக்கக் கூடாது.

(3) சமபாகம் இந்த மருந்தும் ஆஸிட்டிக் ஆஸிட்டும் ஒன்று சேர்ந்து பத்துக்கு மேல் தடவலாம்.

---

## (29) அஸபீட்டிடா

(f) (b)

பெருங்காயம்.

குணம்:—(1) ஸ்டிமியூலென்ற் (2) ஆன்டி ஸ்பாஸ்மோடிக். (d)

அளவு:—5 முதல் 15 கிரைன்

### (1) டிஞ்சர் அஸபீட்டிடா

(f) (d)

குணம்:—ஸ்டிமீயூலென்ற் (2) ஆன்டிஸ்பாஸ்மோடிக்

அளவு:—½ முதல் 1 டிராம் (d)

உபயோகம்:—வயிற்றுப்பொருமல், வாய்வு, வயிற்றுவலி, சூதகஜன்னி, சூதக வயிற்றுவலி, இவைகளுக்கெல்லாம் கொடுக்கலாம்.

---

## (30) ஆரன்டி கார்ட்டெக்ஸ்

கசப்பு ஆரஞ்சுப் பழத்தின்தோல்

### (1) ஸிரப் ஆரன்டி

செய்யும் விதம்:—1 அவுன்ஸ் டிஞ்சர் ஆரன்டி 7-அவுன்ஸ் ஸிம்பிள்ஸிரப் ஒன்று சேர்த்துக்கொள்ளவும்.

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—மற்ற மருந்துகளோடு வாசனையையும், தித்திப்பையும் உண்டு பண்ணச் சேர்க்கப்படுகிறது.

### (2) டிஞ்சர் ஆரன்டி

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—இது ஜீரணசக்தியை உண்டுபண்ணும். வாந்தியையும் குமட்டலையும் நிறுத்தும்.

---

## (31) ஆஸிட் பிக்ரிக்

(d)

இது மஞ்சள் நிறமான மருந்து

உபயோகம்:—ஆஸிட்பிக்ரிக் 11¼ கிரைன் இதை 3 டிராம் ரேக்டிபைட் ஸ்பிரிட்டில் கரைத்து,

5 அவுன்ஸ் டிஸ்டில்ட் வாட்டர் சேர்த்துக்
(d) (d)
கொண்டு, (இதற்கு பிக்ரிக்லோஷன் என்று பெயர்) இந்த லோஷனைத் தீப்பட்ட புண்ணுக்கு லின்றுத் துணியில் நனைத்து வைத்துக் கட்டவும்.

---

## (32) அனுகார்டியம்
(d)

**உபயோகம்:—** இந்த எண்ணெயை வெளிப்பிரயோகமாக, குஷ்டரோகத்தின் ரணம் ஆரவும், பத்துக்கும் மேல் தடவலாம்.

---

## (33) அப்பியால்

**உபயோகம்:—** இதை சூதக வயிற்றுவலிக்கும், சூதகக் கட்டுக்கும், மாதவிடாய் வருகிறதற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன் 3 முதல் 5 துளி வரையும் தடவல் 1-க்குக் கொடுக்கலாம்.

---

## (34) அரிஸ்டால்

இது வீச்சம் யாதொன்றும் இல்லாததும், தவிட்டு நிறமான தூள்.

**உபயோகம்:—** இதைத் தனிமையாகவாவது அல்லது சமபாகம் சிங் ஆக்ஸைட் என்னும் மருந்தோடு
(d)
சேர்த்தாவது அயோடபாரத்தை எதற்கெல்லாம் உபயோகப்படுத்தலாமோ அதற்கெல்லாம் உபயோகிக்கலாம்.

## (35) ஆஸ்பைரின்

உபயோகம்:—இதைத் தடவல் 1-க்கு 5 முதல் 15 கிரைன் வரை மும்மரமான வாதத்திற்கும், அதோடு இருக்கிற சுரத்துக்கும் கொடுக்கலாம். "சோடாஸாலிஸிலஸ்," "ஸாலி ஸிலிக் ஆசிட்," இவைகளுக்கும் பதிலாக உபயோகப் படுத்தலாம்.

---

## (36) பால்ஸம் டூலு

(b)

குணம்:—எக்ஸ் பெக்டோரேன்ற்

அளவு:—5 முதல் 15 கிரைன் (கம் அக்கேஷியாவோடு சேர்த்து அரைத்துக் கொடுக்கவும்)

### (1) ஸிரப் டூலு

குணம்:—எக்ஸ்பெக்டோரேன்ற்

அளவு—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—இதை விசேஷமாய் சிறு குழந்தைகளுக்கு தொண்டைப் புகைச்சலை நிறுத்தச்செய்து கொடுக்கிற மிக்சரில் சேர்த்துக் கொடுக்கலாம்.

### (1) டிஞ்சர் டூலு

குணம்:—எக்ஸ்பெக்டோரேன்ற்

அளவு:—½ முதல் 1 டிராம்

---

## (37) பெல்லடோனு போலியா
(d) (f)

(1) எக்ஸ்ட்ராக்டம். பெல்லடோனு. விர்டி.
(d) (d)

குணம்:—(1) அனேடைன் (2) ஸெடட்டிவ்
(d) (d)

அளவு:—$\frac{1}{4}$ முதல் 1 கிரைன் (மாத்திரையாகச் செய்து கொடுக்கவும்)

உபயோகம்:—(1) க்ஷயரோகிகளுக்கு இரவில் உண்டாகிற வேர்வையைத் தணிக்க:—

எடுத்துக்கொள்

எக்ஸ்ட்ராக்ட் பெல்லடோனுவிர்டி. கிரைன் 6
சிங் ஆக்ஸைட் கிரைன் 36
(z) (d)
எக்ஸ்ட்ராக்ட் ஜென்ஷன் கிரைன் 18
ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொருநாள் இரவிலும் 1 மாத்திரை கொடுத்து வரவும்.

(2) வீக்கம், வலி, வேதனை முதலியவைகளைத் தணிக்கவும், இரத்தக் கட்டிகள், அம்மைக் கட்டு, பிளவை, இவைகளை வற்றவைக்கவும்.

### பெல்லடோனு பிக்மேன்ற்
(d)

செய்யும் விதம்:—

எடுத்துக்கொள்.

(1) எக்ஸ்டிராக்ட். பெல்லடோனு அவுன்ஸ் 1 மேல்படி மருந்து கட்டியாய் இருந்

தால் நெகிழ்த்தியாக்க போதுமான தண்ணீர் கிளிஸரின் போதுமான அளவு இந்த
(g)
இந்த மூன்றையும் ஒன்று சேர்த்து அதிக நெகிழ்த்தியாய் இல்லாமலும், அதிகக்கட்டியாய் இல்லாமலும் ஸிலாப்பில், போலஸ் கத்தியால் நன்றாய்த் தோய்த்துக் கொள்ளவும்.

அல்லது
எடுத்துக்கொள்

(2) எக்ஸ்ராக்ட் பெல்லடோனு அவுன்ஸ் 1
கிளிஸரின் போதுமான அளவு
இக்தியால் டிராம் 2
ஒன்று சேர்
பிக்மென்ருகச் செய்து, கட்டி, வீக்கங்களில் மேல்தடவி, பஞ்சுவைத்துக் கட்டவும்.

---

(2) எம்பிளாஸ்ட்ரம். பெல்லடோனு
(b) (d)

**உபயோகம்:**—இதை இருதயப்பக்கம், நெஞ்சு, இடுப்பு இவைகளிலுள்ள வலி, நோவுக்கு, நோவுள்ள பாகத்தின் அளவுக்குத் தக்கபடி தோலாவது, முரடான துணியாவது வெட்டி, பிளாஸ்திரியை இளக்கித் தடவி, மறுபடியும் அனல்காட்டி வெது வெதுப்பாய் இருக்கையில் போட்டு மேல் பஞ்சு வைத்துக் கட்டி வைக்கவும். இரண்டு மூன்று நாள் வரைக்கும் வலி தணிகிறவரை எடுக்கக்

கூடாது. அவசரமானல் மறுபடியும் இப்படிப் போடவும்.

### (3) லினிமேன்ற். பெல்லடோனு.

(d)

இது விஷமான தைலம். இதை வெளிப் பிரயோகத்திற்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டும்.

**உபயோகம்:**—வாதம், உளைச்சல்களுக்கும், மற்றும் வலி வேதனைகளுக்கும், சூடு உண்டாகும்படி இந்தத் தைலத்தை காலை, மாலை, தேய்த்து வைத்திருந்து பிளானல் பாளமாவது, அல்லது உல்லன்பட்டியாவது சுற்றிவைத்திருந்து பின்பு சுடச்சுட வெந்நீர் விடவும். தைலம் தேய்த்தவர்கள் கைகளை நன்ருய்ச் சுத்தம் செய்யவேண்டும்.

### (4) டிஞ்சர். பெல்ல டோனு.

(b)

குணம்:—(1) அனேடைன் (2) ஸெடட்டிவ்

அளவு:—5 முதல் 15 துளி

**உபயோகம்:**—(1) ஒருவயசுக் குழந்தைக்கு குத்திருமலுக்குக் கொடுக்க.

*எடுத்துக்கொள்*

| | |
|---|---|
| டிஞ்சர். பெல்லடோனு. | துளி 3 |
| வைனம் இப்பிக்காக். | துளி 6 |
| ஸிரப். டோலு | துளி 15 |
| ஆக்குவா. சேர்ந்து | டிராம் 3 |
| | ஒன்று சேர் |

*மிக்சர் செய்*

தடவல் 1-க்கு 1 தேக் காண்டி வீதம் 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

(2) சிறு குழந்தைகளுக்கு உண்டாகிற கடுப் போடு சொட்டுச் சொட்டாய் இறங்குகிற நீருக்கு.

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| டிஞ்சர். பெல்லடோனா. | துளி. | 4 |
| சிரப். ஆரன்டி. | துளி. | 15 |
| ஆக்குவா, சேர்ந்து | டிராம். | 6 |

ஒன்று சேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 2 தேக்காண்டி வீதம் 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

---

## (38) பென்சாயின்

(b) (z)

### சாம்பிராணி.

**குணம்:—(I) டயூரெட்டிக் (2) எக்ஸ்பெக்டோரேன்ற்**

ஆனால் மேல்படி குணங்களுக்கு இதை இக் தப்படி உள்ளுக்கு உபயோகப்படுத்துகிற வழக்கமில்லை.

### (1) டிஞ்சர். பென்சாயின். கோ.

(b) (z)

**குணம்:—எக்ஸ்பெக்டோரேன்ற்**

**அளவு:**—$\frac{1}{2}$ முதல் 1 டிராம்.

**உபயோகம்:—(1)** இதை, உள்ளுக்கு, தொண்டைப் புகைச் சலை நிறுத்த தடவல் 1 க்கு 20 துளி கொஞ் சம். 'கம் அக்கேஷியா' வோடு சேர்த்து

அரைத்து 1 அவுன்ஸ் தண்ணீரில் நாள் 1 க்கு இப்படி 3 தடவல் கொடுக்கலாம்.

(2) வெளிப்பிரயோகமாக வெட்டுக் காயங்களுக்கு மேல் போடலாம்.

---

## (39) பிஸ்மத். கார்போனஸ்.

(b) (b)

நிமிஷா.

குணம்:—(1) அன்டாஸிட் என்றால் வயிற்றின் புளிப்பை (d) அடிக்கக் கூடியது.

(2) காஸ்ட்ரிக். ஸெடட்டிவ். என்றால் வயிற்றின் (Gastric Sedative) நோவைச் சாந்தம் செய்யக்கூடியது.

அளவு:—5 முதல் 20 கிரைன்

(1) லிக்கர். பிஸ்மத். எற். அமோனியா. ஸிட்ரஸ்.
(b)

குணம்:—(1) அண்டாஸிட் (2) காஸ்டிரிக். ஸெடட்டிவ்.

அளவு:—$\frac{1}{2}$ முதல் 1 டிராம்.

உபயோகம்:—வயிற்றோட்டம், கிராணி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வாந்தி, பசியின்மை, குன்மம் இவைகளுக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்.

லிக்கர். பிஸ்மத். எற். அமோனியா ஸிட்ரஸ். டிராம் 2

ஸோடா. பைகார்ப் கிரைன் 30
(d) (b) (b)

டிஞ்சர். கலம்பா. டிராம் 1
ஸ்பிரிட். குளோரோபாரம். துளி 30
ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 நடவல் ஆகாரத்துக்கு 1 மணி நேரத்துக்கு முன் கொடுக்கவும்.

குறிப்பு:—மேல்படி ஒவ்வொரு தடவல் மருந்துடன் 5 துளி "டிஞ்சர் நக்ஸ்வாமிக்கா" சேர்த்தும் கொடுக்கலாம்.

(2) பிஸ்மத் ஸாலிஸிலஸ்.
(b)

குணம்:—(1) அன்டாஸிட் (2) காஸ்ட்ரிக் ஸெடட்டிவ்
(d) (g) (d)

அளவு:—5 முதல் 20 கிரைன்.

உபயோகம்:—இதை "டைபாய்ட் பீவர்." என்னும் விஷ
(f) (d)(f)

ஜந்நி சுரத்தில் உண்டாகிற வயிற்றோட்டத்தை நிறுத்தவும் வயிற்றுப்புண்ணை ஆற்றவும் கொடுக்க நல்ல மருந்து.

(3) பிஸ்மத். ஸப்நைட்ரஸ்.
(b) (b)

இது வெண்மையான கனமுள்ள தூள்.

குணம்:—(1) அன்டாஸிட் (2) காஸ்ட்ரிக் ஸெடட்டிவ்.
(d) (g) (d)

அளவு:—5 முதல் 20 கிரைன்.

**உபயோகம்:**—வயிற்றுவலி, வயிற்ரேட்டம், வயிற்றுப்புண், வாந்தி இவைகளை நிறுத்த:—

எடுத்துக்கொள்

(1) பிஸ்மத். ஸப் நைட்ரஸ் கிரைன் 15
(b)
ஸோடா. பை கார்ப் கிரைன் 30
(d) (b) (b)
கம். அக்கேஷியா. போதுமான அளவு
(g)
டிஞ்சர். ஜென்ஷன். கோ துளி 45
ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் சாப்பிடவும். அல்லது இந்த மருந்தும் இன்னும் மற்ற மருந்துகளும் சேர்ந்திருக்கிற (2) ஈலட்ஸ்
(h)
பெப்ஸின் மிக்சர். என்னும் மருந்தை ஒவ்வொரு தடவலும் நன்ருய்க் குலுக்கிக் கொண்டு தடவல் 1 க்கு 30 துளி 1 அவுன்ஸ் தண்ணீரில் சேர்த்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

குறிப்பு:—அதிகமான வயிற்ரேட்டமும், வயிற்று வலியும் இருந்தால் முதல் மிக்சரில் ஒவ்வொரு தடவல் மருந்துடன் 10 துளி "லைக்கர். மார்பைன். ஐட்ரோ குளோரைட்" என்னும்
(f) (h)(d)
மருந்தைச் சேர்த்தாவது, அல்லது இரண்

டாவது எழுதியிருக்கிற "ஈலட்ஸ். பெப்
(h)
ஸின் மிக்சரில்" ஒப்பியம் சேர்ந்ததை உப
யோகப்படுத்தவும். ஒப்பியம் என்ருல்
அபின்,

---

## (40) போராக்ஸ்.

## (Borax)

வெண்காரம்.

இதற்கு "டைபோரேட். ஆவ். ஸோடியம்"
(b)(b) (f) (d)
என்றும் பெயர்.

குணம்:—(1) ஆன்டிஸெப்டிக் (2) எம்னகாக் (3) டயூ
ரேட்டிக் (g) (d)

செய்யும் விதம்:—6 அவுன்ஸ் கிளிஸரினேடு 1 அவுன்ஸ் போ
ராக்ஸைக் கரைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:—இதை வாய்ப்புண், உதடுவெடிப்பு பால்காம்பு
வெடிப்பு, ரணம் இவைகளுக்கு மேல் தடவ
லாம். பால் குடிக்கும் குழந்தையின் வாயிற்
பட்டாலும் ஒன்றும் செய்யாது.

---

## (41) பக்கு. போலியா.

(b) (f)

பக்கு இலைகள்.

குணம்:— டயூரேட்டிக்
(d)

(1) இன்பியூஷன். பக்கு.
(f) b)

பக்கு இலைக் கஷாயம்
(b)

**செய்யும்விதம்:**—½ அவுன்ஸ். பக்கு இலையை ஒரு பாத்திரத்தில் போட்டு 10 அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரை அதின்மேல் ஊற்றி ¼ மணி நேரம் மூடிவைத்திருந்து பின்பு வடிகட்டிக் கொள்ளவும்.

**குணம்:**—டயூரெட்டிக்
**அளவு:**—1 முதல் 2 அவுன்ஸ்.
**உபயோகம்:**—நீர்க்கடுப்புக்கு நீர் இறங்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பொட்டாஸ். பை கார்ப். (b) (b) | கிரைன் 10 |
| டிஞ்சர். அயோஸியாமஸ். | துளி 15 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி. | துளி 30 |
| இன்பியூஷன். பக்கு. சேர்ந்து. (f) | அவுன்ஸ் 2 |

ஒன்றுசேர்

மிக்சர் செய்

(2) டிஞ்சர் பக்கு.

**குணம்:**—டயூரெட்டிக்
**அளவு:**—½ முதல் 1 டிராம்
**உபயோகம்:**—இன்பியூஷன்பக்கு வுக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம்.

## (42) பியூட்டல் குளோரல் ஐட்ரஸ்.

(b) (h)(d)

குணம்:—(1) அனேடைன் (2)இப்னுட்டிக்
(d) (h)

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—இதை, கழுத்து நரம்புவலி, தலைவலி, ஒருத்தலை இடி முதலிய நரம்பு வேதனைகளுக்கு:—

(1) எடுத்துக்கொள்

பியூட்டல். குளோரல். ஐட்ரஸ். கிரைன் 60
(b) (h)(d)

மியூஸிலேஜ். அக்கேஷியா. போதுமான அளவு

ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக்கொண்டு முதலில் 2 மாத்திரைகள் ஒன்றின்பின் ஒன்றாய் விழுங்கி, பிறகு 2 மணி நேரத்துக் கொரு தடவல் 1 மாத்திரை வீதம் 3 தடவல் கொடுக்கவும். மறுநாளும் வலிவேதனை இருந்தால் மட்டும் தடவல் 1 க்கு 1 மாத்திரை வீதம் நாள் 1 க்கு 3 மாத்திரை, 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

குறிப்பு:—மாத்திரைகளை அப்போதைக்கப்போது புதிதாய்ச் செய்து கொள்ளவேண்டும்.

அல்லது

(2) எடுத்துக்கொள்

பியூட்டல் குளோரல். ஐட்ரஸ். கிரைன் 40
(b) (h)(d)

டிஞ்சர். ஜெல்ஸெமி. துளி 40
கிளிஸெரின் டிராம் 3
(g)
ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ் 4
ஒன்றுசேர்

மிக்சர் செய்

முதல் தடவலில் 1 அவுன்ஸ் கொடுத்து பிறகு 2 மணி நேரம் கழித்து தடவல் 1 க்கு ½ அவுன்ஸ் வீதம் 2 மணிக்கொரு தடவல் மறுபடியும் 3 தடவல் கொடுக்கவும். மறு நாளும் வலி வேதனை இருந்தால் மட்டும் தடவல் 1 க்கு ½ அவுன்ஸ் வீதம் 4 மணி நேரத்துக் கொரு தடவல் கொடுக்கவும்.

---

## (43) காபீன் ஸிட்ரஸ்.

(f)

இது வாசனை யாதொன்றும் இல்லாத வெண்மையான தூள். இது தண்ணீரில் கரையும்.

**குணம்:**—(1) கார்டியக் டானிக் = (அதாவது இருதயத்தைப் பலப்படுத்தக் கூடியது)
(d)

(2) டயூரெட்டிக்
(d)

**அளவு:**—2 முதல் 10 கிரைன்

**உபயோகம்:**—(1) இருதய வியாதியால் உண்டாகிற வீக்கத்தில், நீரைப் பிரித்து வீக்கத்தைக் குறைக்க, "டிஞ்சர். டிஜிடாலிஸ்" கொடுத்தும் நீர் பிரி

யாத சந்தர்ப்பத்தில் தடவல் 1 க்கு 8 கிரைன் வீதம் கொடுக்கவாம்.

(2) ஆன்டிபெப்ரின், ஆன்டிபைரின், பேல
(f)(b) (f)
ஸெட்டின், இவைகள் இருதயத்தைப் பல யீனப்படுத்தாமல் இருக்க மேல்படி மருந்துகளில் யாதேனும் ஒன்றை மண்டை இடியை நிறுத்தவும், காய்ச்சல்களில் சூடு தணியவும் கொடுக்கும்படி நேரிடுகிற சந்தர்ப்பத்தில் தடவல் 1 க்கு 3 கிரைன் "காபீன்.
(f)
ஸிட்ரஸ்" சேர்த்துக் கொடுக்கவும்.

(3) ஒருத்தலை இடியை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| காபீன். ஸிட்ரஸ் (f) | கிரைன். 6 |
| ஆன்டி. பைரின் | கிரைன். 8 |
| | ஒன்றுசேர் |

இதை ஒரே தடவலில் வாயில் போட்டு உமிழ் நீருடன் சேர்த்து விழுங்கி கொஞ்சம் வெந்நீர் குடிக்கவும் 2 மணி நேரம் கழித்து சுடச்சுட காப்பி சாப்பிடவும்.

---

## (44) கஜபுட். தைலியம்.

### ஆயில் கஜபுட்

இது பச்சை நிறமுள்ளது. கர்ப்பூரவாடையுள்ள எண்ணெய் இதற்கு ஏலக்காய்த் திரா

வகம் எனப்பெயர் வழங்கி வருகிறது. ஆனால் ஏலக்காயிலிருந்து எடுக்கப்பட்டதல்ல.

**குணம்:—(1)** ஆன்டி. ஸ்பாஸ்மோடிக் (2) ஸ்டிமியூலேன்ற் (d)

**அளவு:**—½ முதல் 3 துளி

**உபயோகம்:**—(1) இதை வெளிப்பிரயோகமாக மண்டை இடிக்குமேல் தடவலாம் சரிபாகம் "லினிமேன்ற். காம்பர்கோ" என்ற தைலத்தை (f) யும் சேர்த்து ஒன்றாய்க் குலுக்கிக் கொண்டு வாதம், உளைச்சல், இடுப்புவலி, பக்கவாதம், திமிர், பிடரி நரம்புவலி, முதலானவைகளுக்கு சூடு பிறக்க அழுத்தித் தேய்க்கலாம்.

(2) உள்ளுக்குக் கொஞ்சம் சீனியில் 3 துளி கலந்து அஜீரணத்தால் உண்டாகிற வயிற்று வலியை நிறுத்தக் கொடுக்கலாம்.

## (1) ஸ்பிரிட். கஜபுட்

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் ஆயில் கஜபுட், 9 அவுன்ஸ் ரெக்டிபைட். ஸ்பிரிட் (f)(d)

இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும்.

**குணம்:**—கஜபுட் ஆயிலுக்குள்ளது

**அளவு:**—5 முதல் 20 துளி (1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம்.)

---

## (45) கால்ஷியம் ஐட்ரஸ்.

இது நீற்றின சுண்ணும்பு

### (1) லீக்கர் கால்ஸிஸ் அல்லது

(லீம் வாட்டர். சுண்ணும்புத் தண்ணீர்)

செய்யும் விதம்:—10 கிரைன், நீற்றின சுண்ணும்புத்தூளை 20 அவுன்ஸ் மழைத்தண்ணீரில் கரைத்துக் கலக்கி, 12 மணிநேரம் மூடிவைத்திருந்து பிறகு சுண்ணும்பு கலங்காமல் தெளிவாய் இறுத்து சீசாவில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:—1 முதல் 4 அவுன்ஸ் (பெரியவர்களுக்கு) (1 வயசு குழந்தைக்கு) 30 முதல் 60 துளி.

உபயோகம்:—இதைப் பொதுவாக குழந்தைகளுக்குப் பால் செமிக்க, பால்கொடுக்கும் போதெல்லாம், அதில் 30 துளி சேர்த்துக் கொடுக்கலாம். (பால் என்றால் தாய்ப்பால் அல்லாமல் மற்றப்பால்)

### (2) லினிமென்ற் கால்ஸிஸ் அல்லது

காரோன். ஆயில்

செய்யும் விதம்:—சரிபங்கு சுண்ணும்புத் தண்ணீரையும், தேங்காய் எண்ணெயையும் ஒன்றுசேர்த்து நன்றாய்க் குலுக்கினால் பால்போலாகும்.

உபயோகம்:—இதை தீப்பட்ட புண்ணுக்கும் கொப்பளத்துக்கும் மேல் போடலாம்.

## (16) கலம்பா. ரூட்

இது கசப்புள்ளவேர். இது ஜீரணசக்தியை உண்டு பண்ணும்.

அளவு:—5 முதல் 20 கிரைன் (தூள் பண்ணிக்கொடுக்கவும்)

### (1) இன்பியூஷன் கலம்பா
(f)

கலம்பா கஷாயம்

செய்யும் விதம்:—10 அவுன்ஸ் குளிர்ந்த தண்ணீரில், ½-அவுன்ஸ் கலம்பா ரூட்டை ½-மணிநேரம் போட்டு வைத்திருந்து வடிகட்டிக்கொள்ளவும்.

இது கசப்பான கஷாயம்

அளவு:—½ முதல் 1 அவுன்ஸ்

உபயோகம்:—வயிறு முதலிய ஜீரணக்கருவிகளுக்குப் பலத்தைக் கொடுக்கக் கூடியது.

குறிப்பு:—கலம்பாரூட்டையும், குவாஷியா பட்டையையும் கஷாயம் செய்ய குளிர்ந்த தண்ணீரையே உபயோகப்படுத்தவேண்டும்.

ஜீரணக்கருவிகளுக்குப் பலத்தைக்கொடுத்து பசி உண்டாக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| ஆஸிட். நைட்ரோ. ஐட்ரோகுளோரிக்டில் (d) (h)(d) (d) | துளி 30 |
| டிஞ்சர். நக்ஸ் வாமிக்கா | துளி 30 |
| ஸிரப். ஸிம்பிள் | டிராம் 1½ |
| இன்பியூஷன். கலம்பாசேர்ந்து (f) | அவுன்ஸ் 1½ |

மிக்சர் செய்

தடவல் 1 க்கு ½ அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

(2) டிஞ்சர் கலம்பா

குணம்:—ஜீரணசக்தியை உண்டுபண்ணக் கூடியது.

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—இன்பியூஷன். கலம்பாவுக்குப் பதிலாக, ஜீர (f) ணக்கருவிகளுக்குப் பலத்தைக் கொடுக்கத் தடவல் 1 க்கு 30 துளி சேர்த்துக் கொள்ள லாம்.

குறிப்பு:—"இன்பியூஷன் கலம்பாவையும்," "டிஞ்சர்கலம் பாவையும்" இரும்புசேர்ந்த மருந்துகளோடு சேர்த்துக்கொடுக்கலாம்.

## (47) காம்பர்.
(f)

சூடன்.

குணம்:—(1) ஆண்டிஸ்பாஸ்மோடிக் (2) ஸ்டிமியூலென்ற்

அளவு:—2 முதல் 5 கிரைன் (d)

(1) ஆக்குவா. காம்பர்—(சூடன் கலந்த தண்ணீர்)
(f)

செய்யும் விதம்:—10 கிரைன் காம்பரை (சூடனை) 30 துளி "ரெக்டிபைட் ஸ்பிரிட்டில்" கரைத்து இதைக் கொஞ்சம் கொஞ்சமாய் 20 அவு ன்ஸ் தண்ணீரில் விட்டு நன்றாய்க் குலுக்கிக் கொள்ளவும்.

**குணம்:—காம்பருக்குள்ளது**

**அளவு:—**$\frac{1}{2}$ *முதல்* 1 *அவுன்ஸ்*

(2) லினிமேன்ற் காம்பர். கோ.

(f)

சூடன் தைலம்

**செய்யும் விதம்:**—5/8 *அவுன்ஸ்* "**காம்பரையும்** 15 *துளி*
(f)
ஆயில் லவண்டரையும்"3 *அவுன்ஸ்*"**ரெக்டி
பைட் ஸ்பிரிட்டில்**" *கரைத்து அதோடு* $1\frac{1}{4}$
(f)(d)
*அவுன்ஸ்* "லைக்கர். "**அமோனியா போர்ட்**"
(f)
*சேர்த்துக்குலுக்கி எல்லாம் சேர்ந்து* 5 *அவு
ன்ஸ் ஆகும்வரை*, "**ரெக்டிபைட் ஸ்பிரிட்**"
(f)(d)
*சேர்த்துக்கொள்ளவும்.*

**உபயோகம்:**—*இதை வெளிப்பிரயோகமாக*, (1) **கால்ருவில்** *உண்டாகிற கைகால் குளிர்ச்சி*, **இழுப்பு** *இவைகளுக்குத்தேய்த்து சூடுண்டாக்காவும்*. (2) *நெஞ்சில் கபம்கட்டி இருப்பதை இளக்கி, கபத்தை வெளியாக்க நெஞ்சில்* **தேய்க்கவும்.**

*ச்சல் வலி, வாதம் முதலியவை களுக்கு வலியுள்ள இடங்களில் தனிமை யாகவாவது, அல்வது சரிபாகம்* "**கஜபுட் ஆயிலோடு**" *சேர்த்து ஒன்ருய்க்குலுக்கிக் கொண்டாவது சூடுபெறக்கத்* **தேய்க்கலாம்.** *தைலம் தேய்த்தவர்கள் கையை நன்ருய்ச் சுத்தம் செய்யவேண்டும்.*

(3) டிஞ்சர். காம்பர். கோ
(f)

1 அவுன்ஸ் மருந்தில் 2 கிரைன் "அபின்" சேர்ந்திருக்கிறது.

**குணம்:—(1) எக்ஸ்பெக்டோரேன்ற் (2) நார்க்கோட்டிக்**

**அளவு:**—30 முதல் 60 துளி

**உபயோகம்:**—இதை தொண்டைப் புகைச்சலைத் தணிக்கச் செய்து கொடுக்கிற மிக்சரில் சேர்க்கப்பட்டு வருகிறது.

**தொண்டைப்புகைச்சலை நிறுத்த:—**

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர். காம்பர். கோ (f) | துளி 70 |
| ஸோடா. பை கார்ப் (d) (b) (b) | கிரைன் 30 |
| வைனம். இப்பிகாக். | துளி 30 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் 4 மணி நேரத்துக் கொருதடவல் கொடுக்கவும்.

(4) ஸ்பிரிட். காம்பர்.

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் "காம்பர்" இதை 9 அவுன்ஸ் "ரேக்டிபைட் ஸ்பிரிட்" டில் சேர்த்துக்
(d)
கரைத்துக்கொள்ளவும்.

**குணம்:—காம்பருக்குள்ளது**

அளவு:—5 முதல் 20 துளி.

## (48) கஞபிஸ். இன்டிக்கா
(b) (d)
கஞ்சா

குணம்:—நரர்க்கோட்டிக் (2) அனேடைன்

(1) எக்ஸ்ட்ராக்ட். கஞபிஸ். இன்டிக்கா
(Extract) (b) (d)

அளவு:—$\frac{1}{4}$ முதல் 1 கிரைன்

உபயோகம்:—நாள்பட்டதும் விடாத ஒருத்தலை இடியை நிறுத்த:—

எடுத்துக்கொள்

எக்ஸ்ட்ராக்ட். கஞபிஸ். இன்டிக்கா கிரைன் 8
(b) (d)

பியூட்டல். குளோரய் ஐட்ராஸ். கிரைன் 48
(b) (h)(d)

மியூஸிலேஜ். அக்கேஷியா. போதுமான அளவு

ஒன்றுசேர்

12 மாத்ரைகளாகப்பிரித்துக்கொண்டு, தினாள் 1-க்கு 3 தடவல், தடவல் 1-க்கு 1-மாத்ரை வீதம், ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

(2) டிஞ்சர். கஞபிஸ். இன்டிக்கா
(b) (d)
கஞ்சாதிராவகம்

அளவு:—5 முதல் 15 துளி ("கம். அக்கேஷியா" வோடு சேர்த்து அரைத்துக் கொடுக்கவும்)

உபயோகம்:—ஒருத்தலைஇடி, நரம்புவேதனை, தூக்கமின்மை, இளைப்பு, சூதகப் பெருக்கு இவைக

ளுக்குக கொடுக்கலாம். சூதகப்பெருக்கு அல்லது பெரும்பாட்டில் கருக்குழியின் எரிச்சல் நோவு இவைகளைச் சாந்தப்படுத்த:—

*எடுத்துக்கொள்*

டிஞ்சர். கஞைபிஸ். இன்டிக்கா. துளி 30
(b) (d)
கம். அக்கேஷியா. போதுமான அளவு
(g)
பொட்டாஸ். புரோமைட். கிரைன் 30
ஸ்பிரிட். குளோரோபாரம் துளி 30
ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

*மிக்சர்செய்*

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

குறிப்பு:—சில பெண்களுக்கு கஞ்சா சேர்ந்த மருந்து ஏற்றுக் கொள்கிறதில்லை. ஆகையால் மேல் எழுதியிருக்கிற மிக்சரில் முதல் பொழுது மருந்திலேயே விகர்ப்பம் ஏற்பட்டால் உடனே இந்த மருந்தை நிறுத்தி விடவேண்டும். இளைப்புக்கு= (மந்தாரகாசத்துக்கு) "காஞபிஸ் இன்டிக்கா" சேர்ந்திருக்கிற "கிரி
(b) (d) (g)
மால்ட் அன்கோ ஸிகரேட்" இதை உப
(g)
யோகப்படுத்தலாம்.

## (49) கந்தாரிடிஸ்
(d)

எரிவண்டு

(1) எம்பிளாஸ்ட்ரம். கந்தாரிடிஸ்

அல்லது (d)

எரிவண்டுப் பிளாஸ்திரி

உபயோகம்:—வாதம், சூலைக்கட்டுகளிலுள்ள நீரைப்பொக்க வைத்து வெளியாக்க உபயோகப் படுத்தலாம்.

(2) லைக்கர் எப்பிஸ் பாஸ்டிக்கஸ்

அல்லது

பொங்கவைக்கிற திராவகம்

உபயோகம்:—மொழிக்கு மொழி கட்டுகிற சூலை நீரையும் வாத நீரையும் பொக்கவைத்து நீரை வெளியாக்க.

வட்டமாய்க் கடுதாசித்துண்டு வெட்டி அதில் "எம்பிளாஸ்ட்ரம் கந்தாரிடிஸ்" (d) தடவி, அதின் மத்தியில் 5 துளி "லைக்கர் எப்பிஸ் பாஸ்டிக்கஸ்" விட்டு, வீக்கமுள்ள இடத்தில் போட்டு அதின்மேல் பஞ்சுவைத்துக் கட்டி 9 மணி நேரம் கழித்து அவிழ்த்தால் பொக்களமிருக்கும்; பொக்களத்திலுள்ள நீரை வெளியாக்கி பிறகு 'போரிக் ஆயின்ற் மென்ற்' போட்டு புண்ணை ஆற்றவும். 'லைக்கர் எப்பிஸ் பாஸ்டிக்கஸ்' இதைத்

தனிமையாகவும் தடவி சூலைக்கட்டு நீரைப் பொக்க வைக்கலாம்.

கண்ணின் மேகநீரைக் குணமாக்க:—கால் ரூபாய் அகலம் கடுதாசி வெட்டி, அதில் "எம்பிளாஸ்ட்ரம் கந்தாரிடிஸ்" தடவி (d) அதின் மத்தியில் 5 துளி 'லைக்கர் எப்பிஸ் பாஸ்டிக்கஸ்' விட்டு மேகநீர் இறங்கி இருக்கிற கண்ணின் பக்கத்திலுள்ள கன்னப் பொருத்தில் போட்டு மேல் பஞ்சுவைத்துக் கட்டவும். 6 மணி நேரம் கழித்து அவிழ்த்தால் பொக்களம் இருக்கும். நீர் வெளியான பின் 'போரிக் ஆயின்ற் மேன்ற்' போட்டுப் புண்ணை ஆற்றவும்.

குறிப்பு:— எரிவண்டுப் பிளாஸ்திரி, மெதுவாகப் போட்டு 6 மணிமுதல் 9 மணி நேரத்துக்குள் பொக்க வைக்கும்.

(3) டிஞ்சர் கந்தாரிடிஸ்
(d)

அல்லது

எரிவண்டுத் திராவகம்

குணம்:—(1) அப்ரோடிஸியாக் (2) டயூரெட்டிக்
(f) (d) (d)

அளவு:—5 முதல் 15 துளி

2 முதல் 5 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க) ஆனால் மேல் எழுதி இருக்கிற குணத்தை உத்தேசித்து இந்த மருந்தை உள்ளுக்குக் கொடுப்பது அவ்வளவு உசிதமல்ல.

## (50) காப்ஸிஸி

மிளகாய்

### (1) டிஞ்சர் காப்ஸிஸ்

குணம்:—ஸ்டிமியூ லென்ற்

அளவு:—5 முதல் 15 துளி

---

## (51) கார்டமம்

(d)

ஏலம்

### (1) டிஞ்சர் கார்டம் கோ

ஏலத் திராவகம்

குணம்:—கார்மினேட்டிவ்

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்தேப் பம் இவைகளுக்கு:—

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| டிஞ்சர். கார்டம். கோ | துளி | 60 |
| (d) | | |
| டிஞ்சர். ஜென்ஷன். கோ | துளி | 60 |
| ஸ்பிரிட். அமோனியா. அரோமேட்டிக் | துளி | 30 |
| ஸ்பிரிட் குளோரோ பார்ம் | துளி | 30 |
| (f) | | |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் | 3 |

ஒன்று சேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1½ அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

---

## (52) கரியோ பில்லம்
(f)

அல்லது

(கிளவ்ஸ்) கிராம்பு

(1) ஓலியம். கரியோபில்லம்=(ஆயில். கிளவ்ஸ்)
(f)

கிராம்பு எண்ணெய்

குணம்:—(1) ஸ்டிமியூலென்ற் (2) கார்மினேட்டிவ்

அளவு:—½ முதல் 3 துளி (சீனியில் கலந்து கொடுக்கவும்)

உபயோகம்:—மண்டை இடிக்கு மேல் தடவலாம்.

---

## (53) காஸ்காரா. ஸாக்ரடா
(g) (d)

(1) எக்ஸ்ட்ராக்ட் காஸ்காரா. ஸாக்ரடா
(g)(d)

குணம்:—கதார்டிக்

அளவு:— 2 முதல் 8 கிரைன் (மாத்திரையாகச் செய்து கொடுக்கவும்)

உபயோகம்:—இதை வழக்கமாய் ஏற்பட்டிருக்கிற மலச் சிக்கலை நீக்கக் கொடுக்க நல்ல மருந்து.

மலச் சிக்கலை நீக்கி மலத்தைக் கிரமமாய்ப் போகச்செய்ய:—

எடுத்துக்கொள்

எக்ஸ்ட்ராக்ட். காஸ்காரா. ஸாக்ரடா கிரைன்
(g)(d) 48

எக்ஸ்ட்ராக்ட். நக்ஸ்வாமிக்கா. கிரைன் 3
ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொருநாள் இரவிலும் படுக்கைக்குப் போகும்பொழுது 1 மாத்திரை சாப்பிட்டு அதற்குமேல் பாலாவது, தண்ணீராவது குடிக்கவும். 1 மாத்திரை சாப்பிட்டும் மலம் வெளியாகாவிட்டால் தடவல் 1க்கு 2 மாத்திரைகள் ஒன்றின் பின் ஒன்றாய் விழுங்கவும். ஆனால் தடவல் 1 க்கு 2 மாத்திரைகளுக்குமேல் வேண்டாம். நாள்தோறும் தடவல் 1 க்கு 1 அல்லது 2 மாத்திரைகள் சாப்பிடுகிறதை அவாவர்கள் தேக நிலைமைக்கும், குடலின் தன்மைக்கும் தகுந்தபடி நிதானப் படுத்திக்கொள்ளவும்.

அல்லது

பாரோஸ். வெல்கம். காஸ்காரா. ஸாக்ரடா.
(b) (g)(d)

டேபிளாய்ட்ஸ்'' இதில் 1 முதல் 4 மாத்தி
(b)

ரைகள் தேக நிலைமைக்குத் தகுந்தபடி ஒவ்வொரு நாள் இரவிலும் படுக்கைக்குப் போகும்போது சாப்பிட்டு அதன்மேல் பாலா

வது, தண்ணீராவது குடித்துவந்தால் காலை
யில் மலச் சிக்கலில்லாமல் வெளியாகும்.

(2) எக்ஸ்ட்ராக்ட். காஸ்காரா. ஸாக்ரடா. லிக்குவிட்
(g) (d) (d)

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—இதையும் மலற்சிக்கலை நீக்கவும் பித்தத்தைக் கழிக்கவும், மூலவியாதிக்காரர்களுக்கு வழக்கமாய் ஏற்படுகிற மலச்சிக்கலை நீக்கவும் கொடுக்கலாம். நாள்பட்ட மலச்சிக்கலை நீக்க:—

எடுத்துக்கொள்

எக்ஸ்ட்ராக்ட். காஸ்காரா. ஸாக்ரடா. லிக்கு
(g) (d)
விட். டிராம் 1
(d)

| | |
|---|---|
| டிஞ்சர். நக்ஸ்வாமிக்கா. | துளி 5 |
| கிளிஸரின். | டிராம் 1 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர் செய்

இதை ஒரே தடவலாக ஒவ்வொரு நாள் சாயங்காலம் சாப்பிடவும். ஆனுல் மேற்படி மிக்சரில் எக்ஸ்ட்ராக்ட் காஸ்காரா. ஸாக்
(g)
ரடா லிக்குவிட்' இதை மாத்திரம் தடவல் 1-க்கு 30 துளி முதல் 60 துளிவரை இந்த அளவுக்குள் நிதானப்படுத்திக்கொண்டு அவ ரவர்கள் தேகநிலைமைக்குத் தகுந்தபடி, ஒவ் வொரு நாள் காலையில் மலம் தண்ணீராய்ப்

போகாமல் தன்மலமாய் முக்கலில்லாமல் சாதாரணமாய்ப் போகும்படி நிதானப்படுத்திக் கொள்ளவும். இப்படிப் பொறுமையாய் நீடித்துச் சாப்பிட்டு வந்தால் நாள்பட்ட மலச்சிக்கல் நீங்கிவிடும்.

அல்லது

**(1)** பார்க். டேவிஸ். அன்கோ. "காஸ்காரா.
(d)

எவாக்குவன்ற்" தன் மலமாய் கொஞ்சம் நெகிழ்த்தியாய்ப் போக இதில் தடவல் 1-க்கு 10 முதல் 15 துளிவரை ½-அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1 க்கு 3 தடவல் சாப்பிடவும்.

மலம் தண்ணீராய்ப் போகவேண்டுமானல் தடவல் 1 க்கு 20 முதல் 30 துளிவரை ½ அவுன்ஸ் தண்ணீரில் கலந்து காலையிலும் மாலையிலும் நாள் 1-க்கு 2-தடவல் சாப்பிடவும்

அல்லது

**(2)** பிரடரிக். ஸ்டேரன்ஸ். அன்கோ
(f) (d)

காஸ்காரா. அரோமேட்டிக்," இதற்கு மற்ருெரு பெயர் "காஸாக்ரா" மலம் கொஞ்
(g)
சம் நெகிழ்த்தியாய் முக்கலில்லாமல் வெளியாக இதில் தடவல் 1-க்கு 15 துளி ½ அவுன்ஸ் தண்ணீரில் நன்ருய்க்கலந்து பகலில் 3 தடவல் ஒவ்வொரு ஆகாரத்துக்கும் ½மணி நேரத்துக்கு முன்பும், இரவில் படுக்கைக்

குப் போகும்போது 1 தடவலும் ஆக நாள் 1 க்கு 4 தடவல் சாப்பிடவும்.

மலம் தண்ணீராய்ப் போக வேண்டுமானல் இரவில் படுக்கைக்குப் போகும்போதும் 30 துளி முதல் 60 துளிவரை ½ அவுன்ஸ் தண்ணீரில் நன்ருய்க்கலந்து சாப்பிட்டுப் பிறகு மறுநாள் காலையிலும் எழுந்தவுடன் மேல் காட்டிய அளவில் 1 பொழுது சாப்பிடவும்.

குறிப்பு:—இந்த இரண்டு மருந்துகளையும் அவைகளுக்கு ஏற்பட்டிருக்கிற அளவுகளை நிதானப்படுத்திக் கொண்டு மலச்சிக்கலுள்ளவர்கள் ஒவ்வொருநாளும் மலம் சிக்கலில்லாமல் வெளிப் போகும்படி கவனித்துப் பொருமையாய் கொஞ்சகாலம் நீடித்துச் சாப்பிட்டு மலம் வெளிப்போகுதல் கிரமப்பட்டவுடன் நிறுத்திக் கொள்ளலாம்.

---

## (54) காட்டிக்கு—(Catechu)

### கரசுக்கட்டி

### (I) டிஞ்சர் காட்டிக்கு

குணம்:—ஆஸ்டிரிஞ் சென்ற் (Astringent)

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—இதை நாள்பட்ட வயிற் ருேட்டத்தை நிறுத்தக் கொடுக்கலாம் 1-வயசு குழந்தைக்கு வயிற்ருேட்டத்தை நிறுத்த:—

எடுத்துக்கொள்

டிஞ்சர். காட்டிக்கு — துளி 15

பல்விஸ். கிரிட்டா. அரோமேட்டிக் — கிரைன் 6

ஸ்பிரிட். குளோரோ பாரம் — துளி 6

(f)

ஆக்குவா. சேர்ந்து — டிராம் 3

(d)

ஒன்று சேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 தேக்கரண்டி (1 டிராம்.) விதம் 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

---

## (55) ஸிரியை ஆக்ஸாலஸ்

இது வெண்மையான தூள்

இதைப் பெண்களுக்கு, கருத்தரித்திருக்கும் காலத்தில் உண்டாகிற மசக்கை வாந்தியை நிறுத்தக் கொடுக்கிற மருந்தாய் இருந்த போதிலும் அனேகரால் கையாடப் படுகிற தில்லை.

அளவு:—2 முதல் 10 கிரைன் தனித்தூளாகவாவது அல்லது பின் எழுதுகிற விதமாய் மாத்திரைகளாகச் செய்தாவது கொடுக்கலாம்.

கர்ப்ப ஸ்த்ரீகளுக்கு உண்டாகிற மசக்கை வாந்தியை நிறுத்த:—

எடுத்துக்கொள்

ஸிரியை ஆக்ஸாலஸ் — கிரைன் 30

எக்ஸட்ராக்ட் ஜென்ஷன் — கிரைன் 30

ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக்கொண்டு தடவல் 1-க்கு 2 மாத்திரைகள் வீதம் நாள் 1 க்கு 2 தடவல் கொடுக்கவும்.

---

## (56) சிரட்டா

### நிலவேம்பு

### (1) இன்பியூஷன் சிரட்டா

#### நிலவேம்புக் கஷாயம்

**செய்யும் விதம்:**—½ அவுன்ஸ் நிலவேம்பில் 10 அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரைவிட்டு 15 நிமிஷம் மூடி வைத்திருந்து பின்பு வடிகட்டிக்கொள்ளவும்.

**அளவு:**—½ முதல் 1 அவுன்ஸ்

**உபயோகம்:**—இதை 'பொட்டாஸ் அயோடைட்' என்னும் (d)(d) 'வாத உப்போடு' சேர்த்து வாதத்துக்குக் கொடுக்கலாம்.

### (2) டிஞ்சர் சிரட்டா

#### நிலவேம்புத் திராவகம்

**அளவு:**— ½ முதல் 1 டிராம்

**உபயோகம்:**—இதையும் நிலவேம்புக் கஷாயத்துக்குப் பதிலாக உபயோகப் படுத்தலாம்.

## (57) குளோரல் ஐட்ரஸ்
(h)(d)

**குணம்:**—ஸெடட்டிவ் (2) இப்னுட்டிக்
(d) (h)

**அளவு:**—5 முதல் 20 கிரைன்

**உபயோகம்:**—(1) தூக்கம் உண்டு பண்ண:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| குளோரல் ஐட்ரஸ் (h)(d) | கிரைன் 20 |
| பொட்டாஸ் புரோமைட் (b) (d) | கிரைன் 20 |
| ஸிரப் ஆரன்டி | டிராம் 1 |
| ஆக்குவா சேர்ந்து | அவுன்ஸ் 1 |
| | ஒன்று சேர் |

மிக்சர்செய்

இதை ஒரே தடவலாகப் படுக்கைக்குப் போகும்பொழுது கொடுக்கவும்.

**குறிப்பு:**—இருதயவியாதி உள்ளவர்களுக்கு மேல்படி மிக்சர் கொடுக்கக் கூடாது.

இரண்டு வயசு குழந்தைக்குக் குத்திருமலை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| குளோரல் ஐட்ரஸ் (h)(d) | கிரைன் 4 |
| அமோனியா புரோமைட் (b) (d) | கிரைன் 6 |
| ஸிரப் ரோலு | துளி 30 |
| ஆக்குவா சேர்ந்து | டிராம் 6 |
| | ஒன்றுசேர் |

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 2 தேக்காண்டி (கால் அவுன்ஸ்) வீதம், 3 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

ஒருத்தலை இடி, நாம்புவேதனை, பல் அரண்கட்டி இருத்தல் இவைகளைக் குணமாக்க:—

எடுத்துக்கொள்

குளோரல் ஐட்ரஸ் (h)(d) கிரைன் 5

காம்பர் கிரைன் 5

ஒன்றுசேர்

சிலாப்பில், போலஸ் கத்தியால் தேய்த்துப் பசைபோல் செய்து வலி, வேதனையுள்ள இடத்தில் அழுத்தித் தேய்க்கவும். பல் அரண் கட்டின இடத்தில் மேல்படி பசையைப் பஞ்சில் தோய்த்து வைக்கவும். அரண் கரைந்து வலி வேதனை நீங்கும்

(4) வாத, சூலைக்கட்டு நீர்களைப் பொக்க வைத்து நீரை வெளியாக்க:—

கொஞ்சம் பொடி செய்த 'குளோரல் ஐட்ரஸ்' (h)(d)

இதை 'ஸ்டிக்கிங் பிளாஸ்டர்' தடவின துணியில் தூற்றி கொஞ்சம் அனல் காட்டிப் பொக்க வைக்க வேண்டிய இடத்தில் ஒட்டி மேல் பஞ்சுவைத்துக் கட்டிவைத்தால், சீக்கிரம் "எரிவண்டுப் பிளாஸ்திரி" க்கு மேலாகப் பொக்கவைக்கும் எனத் தீர்மானிக்கிறார்கள்.

## (58) குளோரின் மிக்சர்

**செய்யும் விதம்:**—12 அவுன்ஸ் பிடிக்கக்கூடிய கல்கார்க்கு அல்லது கார்க்கு நன்ருய் மூடிய குப்பியில், 30 கிரைன் "பொட்டாஸ் குளோரஸ்" இதைத் தட்டி அதின்மேல் 1 டிராம் "ஸ்டிராங் ஐட்ரோ குளோரிக் ஆஸிட்" இதை
(h)(d) (d)
ஊற்றிக் கார்க்கு நன்ருய் மூடி, சீசாவை அசைத்துக்கொண் டிருந்தால், அதற்குள் ஒரு விதமான வீச்சமுள்ள மஞ்சள் புகை நிறைந்திருக்கும். பிறகு 10 அவுன்ஸ் தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பாட்டிலுக்குள் ஊற்றிக் கார்க்கு நன்ருய் மூடிப் பாட்டிலேக் குலுக்கினல் பாட்டிலுக் குள்ளிருந்த மஞ்சள் புகை பூராவும் தண்ணீரில் கலந்து விடும். பிறகு 30 கிரைன் "கோய்னைன் ஸல்பஸ்" இதைப் பாட்டிலுக்குள்
(f)
தட்டிக் கரைத்து, அதோடு 1 அவுன்ஸ் "ஸிரப் ஆரன்டி." இதைச் சேர்த்து 12 அவுன்ஸ் மேல்படி பாட்டில் நிறையப் போதுமான தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும்.

**அளவு:**—தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

**உபயோகம்:**—இதை "டைபாய்ட். பீவர்." என்னும் வயிற்
(f) (d) (f)
ருேட்டத்தோடு கூடிய விஷஜ்ஜுர சுரத்துக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம்.

---

## (59) குளோரோ பார்ம்
(f)

**குணம்:**—(1) அனிஸ்தெட்டிக் (2) அனேடைன் (3) ஸெடட்டிவ்
(d) (d)

**அளவு:**—1 முதல் 5 துளி

**உபயோகம்:**—மேல் தடவினால், லேசான எரிச்சலை உண்டாக்கி வலி வேதனையைத் தணிக்கும்.
ஆப்பரேஷன் செய்யும் காலத்தில், வலிவேதனை தெரிய வொட்டாமல் இருக்க முகரவைக்கிறார்கள். இப்படிச்செய்யும் காலத்தில் ஜாக்கிரதையாய் உபயோகப்படுத்த வேண்டும்.

### (1) ஆக்குவா. குளோரோ பார்ம்
(f)

குளோரோ பார்ம் கலந்த தண்ணீர்
(f)

**செய்யும் விதம்:**—25 அவுன்ஸ் தண்ணீரில் 30 துளி குளோரோ பார்ம் ஒரு பாட்டிலில்போட்டு நன்
(f)
றாய்க் குலுக்கிக்கொள்ளவும். இந்த அளவில் வேண்டிய 'ஆக்குவா. குளோரோபார்ம்' செய்து கொள்ளவும்.

**அளவு:**—½ முதல் 2 அவுன்ஸ்

**உபயோகம்:**—மிக்சர்களில் மற்ற மருந்துகளுக்கு இனிப்பை உண்டாக்கச் சேர்க்கப்படுகிறது.

(2) டிஞ்சர் குளோரோபார்ம். கம்போஸிட்டா
(f)

செய்யும் விதம்:—1 அவுன்ஸ் குளோரோபார்ம்
(f)
4 அவுன்ஸ். ரெக்டிபைட். ஸ்பிரிட்
(f) (d)
5 அவுன்ஸ். டிஞ்சர். கார்டம். கோ
(d)
இவைகளை வரிசைக் கிரமமாய் ஒன்று சேர்த்து கல்கார்க்குக் குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:—5 முதல் 60 துளி

உபயோகம்:—மிக்சர்களில் மற்ற மருந்துகளுக்கு இனிப்பு உண்டாக்கவும், "கார்மி னேட்டிவ்" குணம் கொடுக்கவும் உபயோகப்படுத்தலாம்.

(3) ஸ்பிரிட். குளோரோ பார்ம்
(f)

செய்யும் விதம்:—குளோரோபார்ம். இதை 19 அவுன்ஸ்.ரெக்
(f)
டிபைட். ஸ்பிரிட்டில் கரைத்துக் கொள்ள
(f) (d)
வும்.

அளவு:—5 முதல் 20 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க)
30 முதல் 40 துளி( ஒரேதடவல் கொடுக்க)

உபயோகம்:—(1) இதை ஆக்குவா. "குளோரோ பார" த்
(f)
துக்குப் பதில் மிக்சரில் தடவல் 1 க்கு 10 துளி சேர்த்துப் பின்பு "ஆக்குவா" = (தண்

ணீர்) சேர்த்துக்கொள்ளவும். இதே பிரகாரம் "ஆக்குவா. (1) அனிஸி" (2) அனித்தி, (3) மேந்தாபிப். இவைகள் மிக்சர்களில் வரும்போது முதலில் "ஆயில் (1) அனிஸி (2) அனித்தி (3) மேந்தாபிப்" இவைகளை முறையே, 1 அவுன்ஸ் "ஆக்குவா" வுக்கு ½ துளிவீதம் "மினிம் மேஷர்"=(சொட்டு கிளாஸ்) இதில் போட்டு அதில் 10 துளி "ஸ்பிரிட் குளோரோபார்ம்" சேர்த்தால்
(f)
மேல்காட்டிய எண்ணெய் சம்பந்தமான மருந்துகள் கரைந்து தண்ணீரோடு ஒன்று சேரும்.

(2) பல் ஈருகட்டி, வேதனை இருந்தால் குச்சியில் பஞ்சு சுற்றி "ஸ்பிரிட் குளோரோபாரத்தில்" முக்கி ஈருகட்டி வலி இருக்கிற இடத்தில் வைத்தால் ஈரு கரைந்து வலி நின்றுவிடும்.

(3) "ஆக்குவா குளோரோ பாரத்தை"ப் போல் இதையும் மிக்சர்களில் மற்ற மருந்துகளுக்குத் தித்திப்பை உண்டாக்க தடவல் 1 க்கு 10 துளி உபயோகிக்கலாம்.

(4) டிஞ்சர் குளோரோ பார்ம். எற். மார்பைன்
(f) (f)

கம்போஸிட்டா

இதில் சேர்ந்திருக்கிற மருந்துகளாவன:—
குளோரோபார்ம் அவுன்ஸ் ¾
f)

மார்பைன். ஐட்ரோகுளோரைட் கிரைன்
(f) (h)(d) (d) 43¾
டைவியூடெட். ஐட்ரோஸியானிக்.
(d) (d)(h)(d)
ஆஸிட். அவுன்ஸ் ½
டிஞ்சர். காப்ஸிஸி அவுன்ஸ் ¼
டிஞ்சர். கஞபிஸ். இன்டிக்கா அவுன்ஸ் 1
(b) (d)
பெப்பர் மென்ற். ஆயில் துளி 7
கிளிஸரின் அவுன்ஸ் 2½
(g)
ரெக்டிபைட். ஸ்பிரிட். சேர்ந்து ஆக
அவுன்ஸ் 10

எல்லாம் ஒன்று சேர்த்துக் கல்கார்க்குக் குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:—5 முதல் 15 துளி

உபயோகம்:—இதை "காம்பரோடைன்" "குளோரோ
(f) (d)
டைன்", இவைகளுக்குப் பதிலாக 'கால்ரு' வயிற்ருேட்டம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

## (60) கிரைஸரோ பைனம்
(b)

இது "கோவா ப்வுடரி" லிருந்து எடுக்கப்
(g)
படுகிற மஞ்சள் நிறமான தூள்.

உபயோகம்:—இதை பத்து, சொறி, அரைகடி முதலியவை களுக்கு வெளிப்பிரயோகமாக, எலுமிச் சம்பழச்சாற்றில் கொஞ்சம் கலந்து, பத் தை முதலில் "கார்பாலிக் ஸோப்", ரைட்ஸ் கோல்டார் ஸோப்", "குட்டிக்கி யூராஸோப்'," "கிரிமால்ட் அன்கோ மெடி
(g) (d)
ஸினல் ஸ்கின்சோப்" இவைகளில் யாதே னும் ஒன்றால் சுத்தம் செய்துவிட்டுப் பிறகு பத்தின்மேல் நாள் 1 க்கு 1 தடவல் நன் ருய் அழுத்தித் தேய்த்து வைக்கவும். அல் லது பின் எழுதியிருக்கிற விதமாய்க் கழிம் பாகச் செய்து மேல் சொல்லிய ஸோப்புக் களில் யாதேனும் ஒன்றால் பத்தை முத லில் சுத்தம் செய்துகொண்டு நாள் 1 க்கு 1 தடவல் பத்தின்மேல் கழிம்பைக் கொஞ் சம், அழுத்தித் தேய்த்து வைத்திருந்து மறுபடியும் சோப்பு கொண்டு சுத்தம் செய்து வரவும். பத்து நீங்குகிறவரையும் உபயோகப்படுத்தி வரவும். பின்பு ரத்தம் சுத்தியாகும் பொருட்டு "நேச்சர்ஸ் எல்த்
(h)
ரெஸ்டோரர்" என்னும் ரத்தசுத்தி அமெரி க்கர மாத்திரையையாவது, பார்காயின்ஸ்
(b)(g)
அயோடைஸ்ட் ஸார்ஸ பாரில்லா", "கிள
(d) (d)
ர்க்ஸ் பிளட்மிக்சர்". கிரிமால்ட்ஸ் ஸார்ஸ
(b) (d) (g)

பாரில்லா'', ஸர் ஆஸ்ட்லி கூப்பர்ஸ் ஸார்ஸ பாரில்லா'' இவைகளில் யாதேனும் ஒன்றை உள்ளுக்குக் கொடுத்து வரலாம். ஆனல் கொஞ்சகாலம் நீடித்துச் சாப்பிட வேண்டும்.

அல்லது

''லைக்கர் ஆர்ஸனிக் காலிஸ்'' இதில் தடவல் 1 க்கு 2 துளியில் ஆரம்பித்து இடை இடையே விட்டு விட்டு தடவல் 1 க்கு 8 துளி வரும்வரை நாள் ஒன்றுக்கு 3 தடவல் 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து ஆகாரத் துக்குப் பின் சாப்பிடவும்.

அல்லது

''டோனேவான்ஸ் ஸோலியூஷன்'' இதில் (d)
தடவல் 1 க்கு 5 துளி 1 அவுன் தண்ணீரில் சேர்த்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக் குப் பின் சாப்பிடவும்.

| | |
|---|---|
| ஆஸிட் ஸாலிஸிலிக் (d) | கிரைன் 10 |
| ஆஸிட் போரிக் (d) (b) | கிரைன் 30 |
| ஆஸிட் ஆஸிட்டிக் (d) | துளி 10 |
| ஆஸிட் கார்பாலிக் (d) (b) | துளி 10 |
| வாஸலேன் | அவுன்ஸ் 1 |

ஒன்றுசேர் கழிம்பாகச் செய்து கொள்ளவும்.

குறிப்பு:—இந்தக்கழிம்பை கண்டத்திற்கு மேலுள்ள பத்தில் போடக்கூடாது.

முகத்திலுள்ள பத்துக்குப் போட:—

எடுத்துக்கொள்

கால்லனல், அல்லது காலால் அவுன்ஸ் ½
(g) (g)

வாஸலேன் அவுன்ஸ் 1

ஒன்றுசேர்

கழிம்பாகச் செய்துகொண்டு முகத்திலுள்ள பத்தை முதலில் போராக்ஸ். ஸோப்,"
(b)
கொண்டு சுத்தம் செய்துவிட்டு கழிம்பில் கொஞ்சம் எடுத்து நாள் 1 க்கு 1 தடவல் தடவிவரவும். இதற்கு எரிச்சல் கிடையாது. விஷமானதும் அல்ல வெனத் தீர்மானிக்கிறார்கள்.

---

## (61) சின்கோனு. கார்ட்டெக்ஸ்

### கோயினுப்பட்டை

இதிலிருந்துதான் "கோய்னைன்" எடுக்கப் படுகிறது.

குணம்:— (1) ஆன்டி. பைரெட்டிக் (2) ஆன்டி. பீரியாடிக்
(d)

(3) டானிக்

(1) டிஞ்சர். சின்கோனு. கோ

அளவு:—30 முதல் 60 துளி

உபயோகம்:— (1) தேகத்தில், காய்ச்சல் சூட்டைத் தணிக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர், சின் கோனு. கோ | துளி 60 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி. | துளி 60 |
| ஸிரப். ஆரன்டி. | டிராம். $1\frac{1}{2}$ |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

(2) காய்ச்சல் குணமானபின், கதகதப்பையும், பசியின்மையையும், களைப்பையும் மாற்ற:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர். சின் கோனு. கோ | துளி 40 |
| ஆஸிட் நைட்ரோ ஐட்ரோ குளோரிக் டில்<br>(d) (h)(d) (d) | துளி 15 |
| டிஞ்சர். நக்ஸ்வாமிக்கா | துளி 15 |
| ஸிரப். ஆரன்டி | டிராம் $1\frac{1}{2}$<br>(d) |
| ஆக்குவா. சேர்ந்து. | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

## (62) சின்னமன் பார்க்
(b)

கருவாப்பட்டை

### (1) ஓலியம் சின்னமன்.

**சின்னமன் ஆயில்=(கருவாப்பட்டைத் தைலம்)**

*இது தண்ணீரைக் காட்டிலும் கனமுள்ளது.*

**குணம்:**— (1) ஸ்டமக்கிக் (2) கார்மி னேட்டிவ்

அளவு:—½ முதல் 3 துளி கொஞ்சம் சீனியில் கலந்தாவது அல்லது "கம் அக்கேஷியா" வுடன் தண்
(g)
ணீர்விட்டு அரைத்தாவது கொடுக்கலாம்.
மண்டை இடிக்கு மேல் தடவலாம்.

### (2) டிஞ்சர் சின்னமன்.

அளவு:— ½ முதல் 1 டிராம்

உபயோகம்:—சிறு குழந்தைகளுக்கு வயிற்று வலிக்கு தடவல் 1 க்கு 5 துளி கொஞ்சம் சீனியில் கலந்து கொடுக்கவும்.

---

## (63) கொடீனு.
(d)

இது "அபினிலிருந்தாவது," அல்லது "மார்ஃபனி லிருந்தாவது," எடுக்கப்படுகிற வெண்
(f)
மையான கட்டி

அளவு:—¼ முதல் 2 கிரைன்.

உபயோகம்:—இதை நீரழிவுக்காரர்களுக்கு மலத்தைக் கட்டாமல், நீரில் இருக்கிற சீனியின் அளவைக் குறைப்பதற்காக மாத்திரைகளாகச் செய்து கொடுக்கப்படுகிறது.

கோடிஞ மாத்திரை செய்யும் விதம்:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| கொடிஞ. | கிரைன் 3 |
| எக்ஸ்ட்ராக்ட் நக்ஸ்வாமிக்கா | கிரைன் 3 |
| எக்ஸ்ட்ராக்ட் ஜென்ஷன் | கிரைன் 24 |
| | ஒன்றுசேர் |

முதலில் "கோடிஞவை சிலாப்பில்போல (b) ஸ்கத்தியால் நன்றாய்த் தூளாக்கிக்கொண்டு பிறகு மற்ற இரண்டு மருந்துகளோடும் நன்றாய் ஒன்று சேர்த்துக் கொண்டு 12 மாத்திரைகளாகப் பிரித்துக்கொண்டு நாள் 1 க்கு 3 மாத்திரைகள் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

குறிப்பு:— "எக்ஸ்ட்ராக்ட் ஜென்ஷன்" இதற்குப் பதில் "எக்ஸ்ட்ராக்ட் காஸ்காரா ஸாக்ரடா" (g) (d) இதை மேல்படி "கோடிஞ" மாத்திரை ஒவ் (d) வொன்றிலும் 2 கிரைன் சேர்த்துக் கொள்ளலாம்.

## (6 1) கால்ச்சிஸி.

### (1) வைனம் கால்ச்சிஸி

**குணம்:**—(1) டயூரெட்டிக் (2) பர்கட்டிவ்
(d) (g)

**அளவு:**—10 முதல் 30 துளி

**உபயோகம்:**—இதை, பெருவிரல்கள் போன்ற சிறுகணுக்களில் உண்டாகிற 'கவுட்' என்னும் வாத (g) ரோகத்திற்கு உபயோகப்படுத்தலாம்.

**மேல்படி வியாதிக்கு:**—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| வைனம் கால்ச்சிஸி | துளி 30 |
| ஸோடா ஸாலிஸிலஸ் (d) | கிரைன் 30 |
| டிஞ்சர் ஜென்ஷன் கோ | துளி 45 |
| ஸ்பிரிட் குளோரோபார்ம் (f) | துளி 30 |
| ஆக்குவா சேர்ந்து அவுன்ஸ் | 3 |

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

மேல்படி வியாதியஸ்தர்களுக்கு மலமும் வெளியாக:—இரவில் படுக்கைக்குப் போகும் போது 4 கிரைன் "பளூபில்" கொடுத்து (b) மறுநாள் 3 தடவல் பின் எழுதுகிற மிக்ச

யைக் கொடுத்து மறுநாள் முதல் மிக்சர் மட்டும் கொடுத்து வரவும் மலம் ஒழுங்காய் வெளியாகாமல் இருந்தால் மட்டும் இடை இடையே இரவில் 4 கிரைன் 'புளூபில்' (b) கொடுத்து வரவும்.

கவுட் என்னும், பெருவிரல்கள் போன்ற (g) சிறு கணுக்களில் உண்டாகிற வாதரோகத்தில் மலம் வெளியாகவும், மேல்படி வியாதியைக் கண்டிக்கவும்:—

எடுத்துக்கொள்.

| | |
|---|---|
| வைனம். கால்ச்சிஸி | துளி. 30 |
| எப்ஸம். ஸால்ட் | டிராம் 3 |
| மெக் னீஷியா. கார்ப் (g) (b) | கிரைன். 30 |
| ஆக்குவா. அனிஸி. சேர்ந்து. | அவுன்ஸ். 3 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் விதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

---

## (65) கோக்கா போலியா.
(f)

### (1) எக்ஸ்ட்ராக்ட். கோக்கா. லிக்குவிட்.
(d)

குணம்:—டானிக்

அளவு:—$\frac{1}{2}$ முதல் 1 டிராம்

உபயோகம்:—இதை தாது பலயீனத்தை மாற்றி, பலத்தைக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

எக்ஸ்ட்ராக்ட். கோக்கா லிக்குவிட் துளி 60
(d)

எக்ஸ்ட்ராக்ட். டாமியான. லிக்குவிட்.
(d) (d)
துளி, 60

டிஞ்சர். நக்ஸ்வாமிக்கா. துளி. 15

ஸ்பிரிட். குளோரோ பார்ம் துளி 30
(f)

ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் சாப்பிடவும்.

அல்லது

இந்த மருந்தும் இன்னும் மற்ற மருந்துகளும் சேர்ந்திருக்கிற (1) டாமியானடைன்
(d) (d)
(2) டாமியான எலக்ஷியர் (3) பொலிவி
(d) (b)
யன் கோக்கா ஒயின் (4) ஆல்ஸ். கோக்கா
(b)
ஒயின். இவைகளில் யாதேனும் ஒன்றை தாது பலத்தைக் கொடுக்க உபயோகப் படுத்தலாம்.

## (66) காலோ ஸிந்து பல்ப்.

குமட்டிக்காய்

(1) எக்ஸ்ட்ராக்ட். காலோஸிந்து. காம்பவுன்ட்.
(d)

குணம்:—பர்கட்டிவ்
(g)

அளவு:—2 முதல் 8 கிரைன்.

(2) பில். காலோஸிந்து. காம்பவுண்ட்.
(d)

குணம்:—பர்கட்டிவ்
(g)

அளவு:—4 முதல் 8 கிரைன்.

**உபயோகம்:**—*மலச்சிக்கலை நீக்க:*—

*எடுத்துக்கொள்*

*பில். காலோஸிந்து காம்பவுண்ட். கிரைன்*
(d)
48

*காலோமல்* *கிரைன்* 12

*ஒன்று சேர்*

12 *மாத்திரைகளாகப் பிரித்துக் கொண்டு, இரவில் படுக்கைக்குப் போகும்போது தேக நிலைமைக்கும், குடலின் தன்மைக்கும் தகுந்தபடி 1 அல்லது 2 மாத்திரை விழுங்கி அதன்மேல் பாலாவது, தண்ணீராவது குடிக்கவும். காலையில் மலம் வெளியாகும். ஆனால் இந்த மாத்திரையையே வெளிக்குப் போக வழக்கமாய் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. மூலவியாதி யுள்ளவர்கள் சாப்பிடக் கூடாது.*

(3) பில். காலோஸிந்து. எழ். அயோஸியாமி.

இதற்கு, மலம் வெளிப் போகும்போது, வயிற்று வலியையாவது, பிசைதலையாவது உண்டுபண்ணுகிற துர்க்குணம் இல்லை.

குணம்:—பர்கட்டிவ்

அளவு:—4 முதல் 8 கிரைன்

உபயோகம்:—கடுமையான மலச்சிக்கலை நீக்க:—

எடுத்துக்கொள்

பில் காலோஸிந்து எற் அயோஸியாமி கிரைன் 48

எக்ஸ்ட்ராக்ட். பெல்லடோனா விரிடி கிரைன் 3
(b) (d) (d)

போடோபில்லம் ரெஸினு கிரைன் 3
(f)

ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக் கொண்டு இரவில் படுக்கைக்குப் போகும்போது 1 மாத்திரை விழுங்கவும். இந்த மாத்திரையையும் மலம் வெளிப்போக வழக்கமாய் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. மூலவியாதிக்காரர்களும் உபயோகப்படுத்தக் கூடாது.

---

## (67) கொப்பை பா
(b)

குங்கிலியம்

(1) ஓலியம் கோப்பை பா
(b)

இது 'கோப்பை பா' விலிருந்து எடுக்கப் படு கிற வெளிறின மஞ்சள் நிறமுள்ள குங்கிலிய வாடையுள்ள எண்ணெய்.

அளவு:—5 முதல் 20 துளி (கம் அக்கேஷியா. சேர்த்து (g) அரைத்துக் கொடுக்கவும்.

உபயோகம்:—இதை, மேகம் கடுப்பு முதலியவைகளுக்கு கொடுக்கலாம்.

மேகம் கடுப்புக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| கம் அக்கேஷியா | கிரைன் 30 |
| ஓலியம். கொப்பைபா (b) | துளி 30 |
| ஓலியம். கியூபெப் (b)(b) | துளி 10 |
| லிக்கர். பொட்டாஸ் | துளி 45 |
| டிஞ்சர். அயோசியாமஸ் | துளி 45 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி | துளி 45 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் கொடுக்கவும்.

குறிப்பு:— (1) மேல் காட்டிய. "கோப்பை பா. மிக்சர்," (b) செய்யும் விதத்தைப்பற்றி இப்புஸ்தகத்தின் 3 வது பாகத்தின் முதல் பிரிவில் எழுதி யிருப்பதைக் கவனித்துக் கொள்ளவும்.

(2) "ஓலியம் கோப்பைபா" வுக்குப் பதிலாக
(b)
"பால்ஸம். கோப்பை பா" வை தடவல்
(b) (b)
1 க்கு 10 துளி சேர்த்துக் கொள்ளலாம்.
(3) "கோப்பை பா. மிக்சரை" மேக வியா
(b)
தியின் ஆரம்பத்தில் கொடுக்கக்கூடாது. தட
வல் 1 க்கு ஓலியம் "கோப்பை பாவை"
30 துளிக்குமேல் கொடுக்கக்கூடாது. கோப்
பைபா. மிக்சர்" முதலில் மேகத்தை அதிகப்
(b)
படுத்தித்தான் பின்பு நிறுத்தும் என்றும்
தீர்மானிக்கிறார்கள்.

---

## (68) கிரியா ஸோட்

இதற்கு "சிரட்டைத் தைலம்" என்று பெயர் வழங்கி வருகிறது. இது வெளிரின மஞ்சள் நிறமுள்ள எண்ணெய் போன்ற திராவகம்.

குணம்:— (1) ஆன்டி. ஸெப்டிக், (2) ஸெடட்டிவ் (3) ஆஸ். டிரிஞ்சென்ற் (உள்ளுக்குக் கொடுத்தால்) ஸ்டிப்டிக் (வெளிப்பிரயோகத்தில்)

அளவு:—1 முதல் 5 துளி (ரொட்டிப்பசையோடு சேர்த்து மாத்திரைகளாகச் செய்தாவது, அல்லது பின் எழுதுகிறவிதமாய் மிக்சர் செய்தாவது கொடுக்கலாம்)

**உபயோகம்:**—(1) வெளிப்பிரயோகமாக, பல் சொத்தையாகி பல்லில் குழி விழுந்து வேதனை, குடைச்சல் இருந்தால் ஒரு குச்சியில் கொஞ்சம் பஞ்சு சுற்றி முக்கி பல்குழிக்குள் 1 துளி விடவும்.

(2) ஓய்யாமல் உண்டாகிற வாந்தியை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| கிரியா ஸோட் | துளி 6 |
| (Bread Crumb) = ரொட்டிப்பசை போது மான அளவு | |

ஒன்று சேர்

6 மாத்திரைகளாகச் செய்து கொண்டு 3, அல்லது 4 மணிக்கொரு தடவல் I மாத் திரை கொடுக்கவும்.

அல்லது.

(3) வயிற்றுவலி, குமட்டல், வாந்தி, மசக் கை வாந்தி, வயிற்றில் உண்டாகும் புளிப்பு இவைகளை நிறுத்த:—

**எடுத்துக்கொள்.**

| | |
|---|---|
| கிரியாஸோட் | துளி 3 |
| ஸ்பிரிட். ஜூனிப்பர் | துளி 3 |
| ஸிரப் ஸிம்பிள் | துளி 90 |
| ஆக்குவா சேர்ந்து | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

**மிக்சர்** செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

(4) நாள்பட்ட இருமல், க்ஷயம், காசம் இவைகளுக்கு இந்த மருந்து சேர்ந்திருக்கிற

(1) " கிரியாஸோட் டேட் எமல்ஷன் காட்
(d) (d)
லிவர் ஆயில்,"

(2) "கிரீம் ஆப் மால்ட் காட்லிவர் ஆயில்
(f) (d)
வித் ஐப் போ பாஸ்பைட் ஆன்ட் கிரியா
(h) (f) (f) (d)
ஸோட்."

இவைகளில் யாதேனும் ஒன்றில் தடவல் 1 க்கு 1 தேக்கரண்டி, 2 அவுன்ஸ் சுடுகிற பசும்பாலில் கலக்கி நாள் 1 க்கு 2 அல்லது 3 தடவல் கொடுக்கலாம்.

## (69) கிரிட்டா பிரிப்பரேட்டா

பிரிப்பர்ட் க்ஷாக்
(d)

சுத்திசெய்த சாக்கட்டித்தூள்.

குணம்:—(1) ஆஸ்டிரிஞ் சென்ற் (2) அன்டாஸிட்
(d)

அளவு:—10 முதல் 60 கிரைன்

உபயோகம்:—(1) இதை வெளிப் பிரயோகமாகப் பல் ஈருகளிலிருந்து ரத்தம் வரும்போது பல் தேய்க்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| கிரிட்டா பிரிப்பரேட்டா | அவுன்ஸ் $\frac{1}{2}$ |
| பல்விஸ் கைநோ. கோ | டிராம் 1 |

ஒன்றுசேர்

இதில் கொஞ்சம் எடுத்துக் காலையில் பல் தேய்த்து வரவும்.

(2) உள்ளுக்குக் கொடுத்து வயிற்ருேட்டத்தை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| கம். அக்கேஷியா. (g) | கிரைன் | 30 |
| கிரிட்டா பிரிப்பரேட்டா | கிரைன் | 45 |
| (சுகர் என்ருல் சீனி) சுகர் (sh) | கிரைன் | 60 |
| ஓலியம் ஸின்னமன் | துளி | 3 |
| ஆக்குவா சேர்ந்து | அவுன்ஸ் | 3 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் ஒவ்வொரு தடவலும் மருந்தை நன்ருய்க் குலுக்கிக் கொண்டு 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

(1) பல்விஸ் கிரிட்டா அரோமேட்டிக்

**குணம்:**—ஆஸ்டிரிஞ் சென்ற்

**அளவு:**—10 முதல் 60 கிரைன்

**உபயோகம்:**—இதை, சிறு குழந்தைகளுக்கு வயிற்ருேட்டத்தை நிறுத்தக் கொடுக்கலாம்.

(3) பல்விஸ் கிரிட்டா அரோமேட்டிக் கம் ஓப்பியம்.

40 கிரைன் மருந்தில் 1 கிரைன் "அபின்" சேர்ந்திருக்கிறது.

**குணம்:**—ஆஸ்டிரிஞ்சென்ற்

**அளவு:**—10 முதல் 40 கிரைன்

**உபயோகம்:**—இந்தப் பொடியில், "அபின்" மிகவும் குறைந்த அளவில் சேர்ந்திருப்பதால், வயிற்றழைச்சல், வயிற்ரோட்டம் இவைகளை நிறுத்த 1 வயசுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு "அபின்" சேர்ந்த மருந்து கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் இதை உபயோகப் படுத்தலாம்.

---

## (70) குரோட்டன் ஆயில்

### நேர்வாள எண்ணெய்

**குணம்:**—ஜட்ரகாக்
(h)(d) (g)

**அளவு:**—½ முதல் 1 துளி (ரொட்டிப்பசையில் சேர்த்து மாத்திரையாகச் செய்தாவது, அல்லது கொஞ்சம் சீனியில் கலந்தாவது கொடுக்கவும்.)

**உபயோகம்:**—மருந்து கொடுத்து 1 அல்லது, 2 மணி நேரத்துக்குள்ளாக தண்ணீராய் மலத்தைப் போக்கக் கூடியது.

**குறிப்பு:**—மற்றப் பேதி மருந்து கொடுத்து மலம் வெளியாகாத சமயத்திலும், காலதாமசப்படாமல் அதிக அவசரமாய் மலம் வெளியாக வேண்டிய தருணத்திலும் இந்த மருந்தை உபயோகிக்க வேண்டும்.

---

8

## (71) கியூபெப்

(b)(b)

### வால்மிளகு

**குணம்:**—(1) டயூரெட்டிக் (2) எக்ஸ் பேக்டோ ரேன்ற்.

**அளவு:**—30 முதல் 60 கிரைன் (தூள் பண்ணிக் கொடுக்கவும்)

**உபயோகம்:**—இதை, மேக வியாதிக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பல்விஸ். கியூபெப்=(வால்மிளகுத் தூள். | கிரைன் 30 |
| பொட்டாஸ். நைட்ரைஸ். | கிரைன் 10 |
| ஓலியம். கொப்பைபா. | துளி 15 |

ஒன்றுசேர்

குழம்புபோல் குழப்பி இதை ஒரே தடவலாகச் சாப்பிடவும் இப்படி நாள் I க்கு 3 தடவல் சாப்பிடவும்.

**(1) ஓலியம். கியூபெப்=(வால்மிளகு எண்ணெய்).**

(b)(b)

**குணம்:**—வால் மிளகுக்குள்ளது.

**அளவு:**—5 முதல் 20 துளி ("கம். அக்கோஷியா"வுடன் சேர்த்து அரைத்துக் கொடுக்கவும்).

---

## (72) காப்பர் ஸல்பேட்

(f)

### மயில் துத்தம்

**குணம்:**—(1) எமட்டிக் (2) டானிக் (3) ஆஸ்டிரிஞ்சென்ற் (4) காஸ்ட்டிக்.

அளவு:—$\frac{1}{4}$ முதல் 2 கிரைன் (மாத்திரையாகச் செய்து கொடுக்கவும்) 5 முதல் 10 கிரைன் (வாந்தி உண்டு பண்ண)

உபயோகம்:—(1) வாந்தி உண்டாக்கி, விஷமான மருந்துகளை அதிக அளவில் சாப்பிட்ட சமயத்தில் அந்த மருந்துகளை வெளியாக்க, 1 தமிளர் இளஞ் சூடான தண்ணீரில் 10 கிரைன் கரைத்துக் கொடுக்கலாம்.

(2) நாள்பட்ட வயிற்றோட்டத்திற்கு $\frac{1}{2}$ கிரைன் வீதம், மாத்திரையாகச் செய்து கொடுக்கலாம்.

(3) கோழைச் சதையின் மேலும், காண் வைத்திருக்கிற புண்ணின் மேலும், தண்ணீரில் முக்கித் தடவினால், கோழைச் சதை காண் கரையும்.

(4) 1 அவுன்ஸ் தண்ணீரில் 3 கிரைன் வீதம் கரைத்து நாள்பட்ட மேகத்திற்கும், பெண்களுக்கு வெள்ளைப் பிரமேகத்திற்கும் சிரிஞ்சு பண்ணலாம்.

(5) கண் வலியில், கண் இமைகள் வீங்கியிருந்தால் "காஸ்டிக் ஸொலியூஷன்" "நம்பர் 4 அல்லது 5" இவைகளுக்குப் பதிலாக உபயோகப் படுத்தலாம்.

குறிப்பு:—" காஸ்டிக் ஸொலியூஷன்" நம்பர் 4 அல்லது 5" இவைகள் என்ன வென்று தெரிந்துகொள்ள இப்புஸ்தகத்தின் மூன்றாவது பாகத்தின் முதல் பிரிவில் கவனித்துக் கொள்ளவும்.

## (73) கார்ல்ஸ் பேட். ஸால்ட்
(b)(d)

இதை பித்தாசயத்திலும் (Lever,) மூத்திரக்காய்களிலும் (Kidneys) வியாதி கண்டிருக்கும்போதும், வாதரோகத்திலும், "கவுட்"
(g)
என்னும் வாதரோகத்திலும் மலம் வெளியாக, 1 தமிளர் தண்ணீரில் 2 தேக்கரண்டி. கலக்கிக் கொடுக்கலாம்.

---

## (74) டிஜிடாலிஸ். போலியா
(d) (f)

டிஜிடாலிஸ். இலைகள்.

**குணம்:**—(1) கார்டியக். டானிக்=என்றால் இருதயத்தைப்
(d)
பலப்படுத்தி அதன் நடையையும் கிரமப் படுத்துகிற மருந்து.

(2) டயூரெட்டிக்
(d)

**அளவு:**—½ முதல் 2 கிரைன் (இலைகளைத் தூளாக்கிக் கொடுக்கவும்)

(1) இன்பியூஷன். டிஜிடாலிஸ்
(f) (d)

டிஜிடாலிஸ் இலைக்கஷாயம்

**செய்யும் விதம்:**—1 டிராம். டிஜிடாலிஸ். இலையில், .20 அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரை ஊற்றி ¼ மணிநேரம் மூடிவைத்திருந்து பின்பு வடிகட்டிக் கொள்ளவும்.

குணம்:—டிஜிடாலிஸ் இலைக்குள்ளது.
(d)

அளவு:—$\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ அவுன்ஸ்.

(2) டிஞ்சர். டிஜிடாலிஸ்.
(d)

குணம்:—டிஜிடாலிஸ் இலைக்குள்ளது.

அளவு:—5 முதல் 15 துளி

உபயோகம்:—(1) சமபாகம் "டிஞ்சர். டிஜிடாலிஸ்," "டிஞ்சர் பெரை பெர்க்குளோரைட்." இந்த இரண்டும் ஒன்றுசேர்த்து கைகால் வீக்கம், சுரப்பு, ரத்தம் கன்னல் இவைகளுக்கு மேல் தடவலாம்.

(2) உள்ளுக்குக் கொடுத்தால் இருதய வியாதியைக் கண்டித்து, இருதயத்தின் நடையைக் கிரமப்படுத்தும். நீரையும் பிரிக்கும்.

இருதயவியாதிக்குக் கொடுக்க.

எடுத்துக்கொள்

டிஞ்சர். டிஜிடாலிஸ். துளி 15
(d)

லைக்கர். பெரை. பெர்க்குளோரைட்.
(f) (d)
துளி 15

ஆஸிட். பாஸ்பாரிக். டில். துளி 15
(d) (f) (f) (d)

ஸிரப். ஸிம்பிள். டிராம் $1\frac{1}{2}$.

இன்பியூஷன். குவாஷியா. சேர்ந்து
(f)

அவுன்ஸ் $1\frac{1}{2}$

ஒன்று சேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு ½ அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்திற்குப் பின் கொடுக்கவும்.

குறிப்பு:—"டிஞ்சர். டிஜிடாலிஸ்" கொடுத்து வரும்போது
(d)
இடை இடையே இருதயத்தைச் சோதித்துக் கொண்டு கொடுத்து வரவும்.

---

## (75) டயூரெட்டின்
(d)

இதை எவ்விதமான வீக்கத்திலும் நீர்ப்பிரிய தடவல் 1-க்கு 15 கிரைன் வீதம் நாள் 1-க்கு 3 அல்லது 4 தடவல் 1 அவுன்ஸ் தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும். "டிஜிடா
(d)
லிஸ்" "காபின்ஸிட்ரஸ்," இவைகள் கொ
(f)
டுத்தும் நீர்பிரியாத சந்தர்ப்பத்தில் இதைக் கொடுத்தால் நீர்பிரியும்.

---

## (76) டியோட்டால்
(d)

அல்லது

"குவாக்கல். கார்போனேட்"
(g) (d)

இது தண்ணீரில் கரையக்கூடியதூள். இதை முக்கியமாய் க்ஷயரோகிகளுக்கு உண்டாகிற இருமல், வேர்வை, காய்ச்சல் இவைகளுக்கும், கபசம்பந்தமான வியாதிகளைக் குண

மாக்கவும், தடவல் 1 க்கு 5 கிரைன் வீதம் நாள் 1 க்கு 3 அல்லது 4 தடவல் கொடுக்கலாம்.

(77) டெர்மட்டால்
(d)

இது வீச்சமில்லாததும், விஷமில்லாததும், எரிச்சல் இல்லாததுமான, மஞ்சள் நிறமுள்ள தூள்.

இதை "அயோடபார" த்துக்குப் பதிலாக
(d)
உபயோகப்படுத்தலாம்.

---

## (78) எர்காட்
(g)

### (1) எக்ஸ். ட்ராக்ட். எர்காட். லிக்குவிட்
(g) (d)

குணம்:—எம்மனகாக்
(g)

அளவு:—10 முதல் 30 துளி (1-அவுன்ஸ் தண்ணீரில் சேர்த்துக் கொடுக்கவும்)

உபயோகம்:—(1) சூதகம் கட்டுப்பட்டிருந்தாலும் சரியான அளவில் படாமலிருந்தாலும் சூதகத்தை ஒழுங்கு பண்ண:—

எடுத்துக்கொள்

எக்ஸ்ட்ராக்ட் எர்காட் லிக்குவிட் துளி 60
(g) (d)

லிக்கர். ஸ்டிரிக்னின். ஐட்ரோ. குளோரைட்
(h)(d) (d)
துளி. 8

ஸ்பிரிட் குளோரோ பார்ம் துளி 30
(f)
ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம், நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

(2) கரு அழிவு (Abortion) ஏற்பட்டால்

அந்தச் சமயம் கருக்குழியிலுள்ள கசடு நீங்க:—

எடுத்துக்கொள்

எக்ஸ். ட்ராக்ட். எர்காட் விக்குவிட் டிராம் 2
(g) (d)
டிஞ்சர். ஜிஞ்சிபெரிஸ் டிராம் 2
(b)
ஸ்பிரிட். அமோனியா. அரோமேட்டிக்
டிராம் 1
ஸ்பிரிட். குளோரோ பார்ம் துளி 30
(f)
ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 4
ஒன்று சேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் 2 அல்லது 3-மணி நேரத்துக்கொரு தடவல் கொடுக்கவும்.

பிறகு கருக்குழியின் வலி, வேதனை நிற்க:—

எடுத்துக்கொள்

ஸிக்கர். ஸெடாடன்ஸ். துளி 90

(d)

ஆக்குவா, சேர்ந்து அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1—அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3-தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும். இந்தமருந்தை 2 வாரம் கொடுத்து

பிறகு

"அலேட்ரிஸ் கார்டியல்" என்னும் மருந் (d) தில் தடவல் 1-க்கு 1 தேக்கரண்டி ½-அவுன்ஸ் வெந்நீரில் சேர்த்து நாள் 1-க்கு 3-தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

இந்த மருந்தை 2, 3, மாதம் கொடுத்து வரவும்.

---

## (79) யுக்காலிப்டஸ் ஆயில்

இது வெளிறின மஞ்சள் நிறமான ஒருவித காரமான வாசனையுள்ள எண்ணெய்.

**குணம்:**—ஆன்டி. ஸெப்டிக்

**அளவு:**—½ முதல் 3 துளி

**உபயோகம்:**—மண்டை இடிக்கு மேல் தடவலாம். ஜலதோஷத்திற்குக் கைக் குட்டையில் 10-துளி போட்டு முகர்ந்து பார்க்கலாம். கால்ராக் காலத்தில் கைக்குட்டை, உடுப்பு முதலியவைகளில் 10 துளி போட்டுக்கொள்ளலாம்.

நெஞ்சில் கபம் கட்டியிருந்தால், கபத்தை இளக்க சமபாகம் "டர்ப்பன்டைன்" வோடு சேர்த்து குலுக்கிக் கொண்டு மார்பிலும், விலாவிலும், முதுகிலும் தேய்த்து, கோதுமைத்தவிடு வறுத்து ஒத்தடம் 4-மணிக்கொரு தடவல் கொடுக்கலாம்.

காலராக்காலங்களில், வீடுகளில் பல இடங்களிலும் தெளித்து வைத்தால் விஷக்காற்றுப் பரவாமல் தடுக்கும்.

---

## (80) யூக்கொய்னேன்

இது கசப்பில்லாத "கோயினா." இதை "கோயினாவை" உபயோகப்படுத்துகிற சந்தர்ப்பங்களில் அதற்குப்பதிலாக தடவல் 1-க்கு 4-கிரைன் கொடுக்கவும்.

### (a) இயோனிமின்

இதற்கு "எக்ஸ்ட்ராக்ட்டம் இயோனிமீஸிக்கம்" என்றும் பெயர்.

குணம்:—(1) கதார்ட்டிக் (2) கோலகாக்

(g)

அளவு:—1 முதல் 2 கிரைன்.

உபயோகம்:—இதை நாள்பட்ட மலச்சிக்கலை நீக்கவும் பித்தத்தைக் கழிக்கவும் மாத்திரைகளாகச் செய்து கொடுக்கலாம்.

## (81) பெர்ரம்—(அயர்ன்)
(f)

### இரும்பு

(1) பெர்ரை. கார்போனஸ். ஸாக்ரடா
(f) (b) (g) (d)

இதற்கு 'அயச்செந்தூரம்' எனப் பெயர் வழங்கிவருகிறது.

அளவு:—10 முதல் 30 கிரைன்

உபயோகம்:—இதை ரத்தக்குறைவு, சோகை, காங்கை, தேகவரட்சி, பலயீனம் இவைகளைக் குண மாக்க உபயோகப் படுத்தலாம்.

(2) பெர்ரை. ஸேஸ்க்யூ. ஆக்ஸைட்
(f (d)

இதற்கு "அயகாந்த செந்தூரம்" எனப் பெயர் வழங்கிவருகிறது.

உபயோகம்:—இதையும், சோகை, ரத்தக்குறைவு, சூதகப் பாண்டு, கதகதப்பு பலயீனம், இவைகளுக்கு தடவல் 1-க்கு 5 கிரைன் கொடுக்கலாம்

குறிப்பு:—(1) பொதுவாக இரும்புசேர்ந்த மருந்துகளை எல்லாம் சாப்பாட்டுக்குப் பின் கொடுக்கவேண்டும்.

(2) இரும்புசேர்ந்த மருந்துகள் கொடுக்கும்போது மலத்தைக்கட்டும், மலமும் கருப்பாய்ப் போகும். அதிகமாய் மலத்தைக் கட்டினால் தடவல் 1 க்கு 1-டிராம். "கிளி

ஸரின்" என்னும் மருந்தைச் சேர்த்துக் கொடுக்கவும்.

பேர்ரை. எற். அமோனியா. ஸிட்ரஸ்
(f)

இது சிகப்பு நிறமுள்ள சிறு தகடு தகடான மருந்து.

அளவு:—2 முதல் 10-கிரைன்.

உபயோகம்:—ரத்தக் குறைவு, சோகை, பலயீனம், இவைகளுக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

பேர்ரை. எற். அமோனியா ஸிட்ரஸ். கிரைன் 10

டிஞ்சர். நக்ஸ்வாமிக்கா துளி 15

ஆஸிட். நைட்ரோ. ஐட்ரோகுளோரிக் டில்.
(d) (h)(d) (d)
துளி 15

ஸிரப் ஸிம்பிள் டிராம் $1\frac{1}{2}$

இன்பியூஷன். குவாஷியா. சேர்ந்து.
(f)
அவுன்ஸ் $1\frac{1}{2}$

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு $\frac{1}{2}$-அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3-தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

(4) பேர்ரை எற் கோய்னைன் ஸிட்ரஸ்
(f)

இது பச்சைகலந்த மஞ்சள் நிறமுள்ள சிறு தகடு தகடான மருந்து

குணம்:—(1) எமாட்டினிக் (2) ஆன்டி. பீரியாடிக்
(h) (d)

அளவு:—5 முதல் 10 கிரைன்.

உபயோகம்:—பலவித வியாதியால் உண்டாகிற ரத்தக் குறைவுக்கும், தாதுநரம்பு பலயீனத்தை மாற்றவும் முறை சுரத்தால் தேகத்தில் உண்டாகிற கத கதப்பைத் தணிக்கவும், பசி உண்டாக்கவும்:—

எடுத்துக்கொள்

பெர்ரை. எற். கொய்னைன். ஸிட்ராஸ்.
(f) கிரைன் 10

லிக்கர். ஸ்டிரிக்னைன். ஐட்ரோ குளோரைட்
(h) d) (d)
துளி 6

டிஞ்சர். கலம்பா துளி 45

ஸிரப். ஆரன்டி டிராம். $1\frac{1}{2}$

ஆக்குவா சேர்ந்து அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக் குப்பின் கொடுக்கவும்.

(5) ஸிரப். பெர்ரை. அயோடைட்.
(f) (d)(d)

அளவு:—30 முதல் 60 துளி

உபயோகம்:—இதை மேக சம்பந்தமான புண், வாதம், கண்டமாலை முதலிய துர் நீர் வியாதிகளைக் குணமாக்க, தனிமையாகவாவது அல்லது 1 தேக்கரண்டி "டீ ஜான்ஸ். காட்' லீவர்.
(d) (d)

ஆயில்," என்னும் மீன் எண்ணெயோடு, தடவல் 1க்கு 30 துளி சேர்த்து, 2 அவுன்ஸ் சுடுகிற பசும்பாலில் கலக்கி நாள் 1 க்கு 2 அல்லது 3 தடவல் ஆகாரம் சாப்பிட்டு 1 மணி நேரம் கழித்து சாப்பிடவும். இப்படிக் கொஞ்சகாலம் நீடித்துச் சாப்பிடவும்,

அல்லது

கேப்ளாஸ்- ஸொலியூஷன், ஆப். காட்
(f) (d)
லீவர். ஆயில். இன், மால்ட். எக்ஸ்ட்ராக்ட். வித். அயர்ன். அயோடைட்," என்ற மீன் எண்ணெய்யில் தடவல் 1 க்கு 1 தேக்கரண்டி வீதம் நாள் 1 க்கு 2 அல்லது 3 தடவல் சுடுகிற பசும்பாலில் கலக்கிச் சாப்பிடவும்.

(6) டிஞ்சர். டெர்ரை. பேர்க்குளோரைட்
(f) (d)

அயத்திராவகம்

**அளவு:**—5 முதல் 15 துளி

**உபயோகம்:**—(1) இதை வெளிப்பிரயோகமாக சமபாகம் "டிஞ்சர் டிஜிடாலிஸ்" என்னும் மருந்துடன் சேர்த்து, கை கால் வீக்கம் சுரப்பு, ரத்தம் கன்னல் இவைகளுக்கு மேல் தடவலாம்.

(2) உள்ளுக்கு, ரத்தக்குறைவு, சோகை, காங்கை, இவைகளைக் குணமாக்கத் தடவல் 1க்கு 5 துளி 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1 க்கு 2 அல்லது 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கலாம்.

(3) தேகத்தில் ரத்தக் குறைவு, பசியின்மை, களைப்பு, நரம்பு, தாது பலயீனத்தைமாற்ற:—

எடுத்துக்கொள்

டிஞ்சர். பெர்ரை. பெர்க்குளோரைட்
(d)
துளி 15

லிக்கர். ஸ்டிரிக்னைன், ஐட்ரோகுளோரைட்
(h)(d) (d)
துளி 6

ஆஸிட். நைட்ரோ. ஐட்ரோ குளோரிக்டில்
(d) (h)(d) (d)
துளி 15

ஸிரப். ஆரன்டி டிராம் $1\frac{1}{2}$

ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

(7) ஸிரப். பேர்ரை. பாஸ்பஸ். கம். கோய்னைன்.
(f) (f) (f)

எற். ஸ்டிரிக்னைன்.

இதற்கு "ஈஸ்டன்ஸ். ஸிரப்" என்றும் பெயர்.

அளவு:—30 முதல் 60 துளி

**உபயோகம்:**—நரம்பு, தாது பலத்திற்கும், சோகையை மாற்றி ரத்தம் ஊறச் செய்யவும், பசி உண் டாக்கவும், பெண்களுக்கு மாத விடாய் சரி

யானபடி ஒழுங்காய் காணும்படி செய்யவும். தடவல் 1 க்கு 30 துளி 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1 க்கு 2 அல்லது 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

அல்லது

'ஆலன். ஆன்ட். ஆன்பரிஸ்' கம்பெனியில்
(d) (h) (b)
செய்யப்படுகிற மேல் எழுதி இருக்கிற மருந்துக்கு "பைனின். அமரா" என்று பெயர்
(b)

இந்த மருந்தில் தடவல் 1 க்கு 1 தேக்கரண்டி 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கலாம்.

(8) பேர்ரை. ஸல்பஸ்
(f) (f)

அன்னவதி

குணம்:—(1) எம்மனகாக் (2) ஆஸ். டிரிஞ்சென்ற் (3) டானிக் g)

அளவு:—1 முதல் 5 கிரைன்.

உபயோகம்:—ரத்தக் குறைவால், மாதவிடாய் காணுமல் இருப்பதற்கும், சூதகக்கட்டுப் பாட்டை நீக்கவும்.

எடுத்துக்கொள்

"பிளாட்ஸ். பில்"
(b)

**செய்யும் விதம்:—**

பெர்ரை. ஸல்பஸ். கிரைன் 30
(f) (f)
பொட்டாஸ். கார்ப். கிரைன் 30
(b)
முதலில் "பெர்ரை. ஸல்ப"ஸை நொறுக்கி
(f) (f)
நன்ருய்த் தூளாக்கிக்கொண்டு பிறகு 'ஸிலா
ப்'பில் 'போலஸ்' கத்தியால் 'பொட்டாஸ்
(b)
கார்ப்' பை ஒன்ருய்ச்சேர்த்து தேய்த்தால் தண்ணீர்போலாகும். நன்ருய் அழுத்தித் தேய்த்துக்கொண்டே இருந்தால் கழிம்பு போல் திரண்டு மாத்திரையாக உருட்டும் பக்குவத்துக்கு வந்தவுடன் 12 மாத்திரைகளாகப் பிரித்துக்கொள்ளவும். இதில் நாள் 1 க்கு 2 மாத்திரைகள் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

அல்லது

"ஒப்பன். ஈமர்ஸ்," பிளாட்ஸ். பில் பைபா
(b) (b) (b)
லட்டிஞய்ட்ஸ்" என்ற மாத்திரைகளில்
(d)
தடவல் 1 க்கு 1 மாத்திரை கொடுத்து அதன் மேல் "வாலென்டைன்ஸ், மீட். ஜியூஸ்', என்னும் மருந்தில், 1 தேக்காண்டி அளவு எடுத்து $1\frac{1}{2}$ அவுன்ஸ் இளஞ்சூடான தண்ணீரில் கரைத்து நாள் 1 க்கு 2 தடவல்

கொடுத்தால் பெண்களுக்கு ரத்தக் குறை வால் தேகம் வெளுத்துப்போய் சோகைக் குணம்போல் இருப்பதைமாற்றி தேகத்துக் கும் பலத்தைக் கொடுக்கும்.

(9) பேர்ரை, பாஸ்பஸ்.
(f) (f) (f)

**குணம்:**—டானிக்

**உபயோகம்:**—*ரத்த விருத்திக்கும், தாதுபலத்திற்கும் கொடுக்க, "பேர்ரை பாஸ்பஸ்" சேர்ந்திருக்கிற*
(f) (f) (f)

*மருந்துகளாவன:*—

(1) "ஈஸ்டன்ஸ். ஸிரப்"

(2) "பைனின். அமரா"
(b)

(3) "பைஞே. ஐப்போ. பாஸ்பைட்ஸ்"
(b) (h) (f) (f) (f)

(4) "கெமிக்கல். பூட்"
(f)(d)

(5) "பேர்ரோக்கால்;"
(f)

(6) "அக்ஸிலீஸ். நெர்விகர். ஸிரப். வித் பார் மேட்ஸ்"
(h) (g) (f)

*இவைகளில் யாதேனும் ஒன்றை உபயோகப் படுத்தலாம்.*

## (82) பெர்ராட்டின்.

(f)

இது வெகுவாய் ரத்தத்தோடு கலந்து தேகத்துக்குப் போஷிப்பைக் கொடுக்கக்கூடிய 'அயர்ன்' சேர்ந்த மருந்து. இதை தடவல் 1 க்கு 10 கிரைன் வீதம் பவுடராக நாள் 1 க்கு ஒரே தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும் எனத் தீர்மானிக்கிறார்கள்

---

## (83) பெர்ரை பைரன்.

(1) இதை வெளிப்பிரயோகமாக:— மூக்கு, காது மத்தியபாகம், தொண்டை இவைகளிலிருந்து வரும் ரத்தத்தை நிறுத்த, 1 அவுன்ஸ் தண்ணீரில் 85 கிரைன் கரைத்து மேல் தடவலாம். எரிச்சல் இராது என்றும்,

(2) உள்ளுக்கு:—ரத்தக் குறைவால் மாதவிடாய் காணாமல் இருப்பதற்கும், மேகத்திற்கும், ரத்தவாந்திக்கும், வயிற்றோட்டத்திற்கும், ஆகிய இவைகளைக் குணமாக்க, 1 அவுன்ஸ் தண்ணீரில் 5 கிரைன் வீதம் கரைத்துக் கொடுக்கலாமென்றும் தீர்மானிக்கிறார்கள்.

---

## (84) ஜெல்ஸெமி. ரூட்

### (1) டிஞ்சர். ஜெல்ஸெமி

**குணம்:**—ஸெடட்டிவ்
(d)

**அளவு:**—5 முதல் 15 துளி

**உபயோகம்:**—நரம்பு வேதனை, ஒருத்தலை இடி, இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்க:—

*எடுத்துக்கொள்*

| | |
|---|---|
| டிஞ்சர். ஜெல்ஸெமி. | துளி 15 |
| பொட்டாஸ். புரோமைட். (b) (d) | கிரைன் 15 |
| ஸ்பிரிட். குளோரோபார்ம். (f) | துளி 30 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

*மிக்சர்செய்*

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

---

## (85) ஜென்ஷன் ரூட்.

**குணம்:**—இது, வயிறு, குடல், முதலிய ஜீரணக் கருவிகளுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய கசப்புள்ள வேர்.

### (1) எக்ஸ்ட்ராக்ட், ஜென்ஷன்

**குணம்:**—ஜென்ஷன் ரூட்டுக்குள்ளது

அளவு:—2 முதல் 8 கிரைன்

உபயோகம்:—மற்ற மருந்துகளோடு சேர்த்து மாத்திரையாகச் செய்ய, இது துணை மருந்தாய் இருக்கிறது.

(2) டிஞ்சர். ஜென்ஷன். கோ.

குணம்:— ஜென்ஷன் ரூட்டுக் குள்ளது

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—(1) கர்ப்பஸ்திரீகளுக் ¦குண்டாகிற மசக்கை வாந்தியை நிறுத்தக் கொடுக்க நல்ல மருந்து. மேல்படி வியாதிக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| டிஞ்சர். ஜென்ஷன். கோ | டிராம் | 1 |
| ஆஸிட். ஐட்ரோ குளோரிக் டில் | துளி | 15 |
| (d) (b)(d) | (d) | |
| ஆக்குவா. சேர்ந்து. | அவுன்ஸ் | 3 |

ஒன்று சேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

(2) வாந்தி, பசியின்மை, புளித்தேப்பம் அன்னத்துவேஷம் இவைகளுக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| டிஞ்சர். ஜென்ஷன். கோ | துளி | 60 |
| ஸோடா. பை. கார்ப் | கிரைன் | 30 |
| (d) (b) (b) | | |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் | 3 |

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

---

## (86) கிளிஸெரீன்.

(g)

இது எண்ணெய் போன்ற, தித்திப்புள்ள, தெளிவான மருந்து.

**குணம்:**—டேமியூல். ஸென்ற்
(d)

**அளவு:**—1 முதல் 2 டிராம்

**உபயோகம்:**—(1) வெளிப் பிரயோகமாக, 'வெண்காரம்,' அல்லது 'போரிக். ஆஸிட்' இவைகளில் யா
(b) (d)
தேனும் ஒன்றோடு சேர்த்துக் குழப்பி, உதடு வெடிப்பு, வாய்ப்புண், முதலானவைகளுக்கு மேல் தடவலாம்.

(2) நாள்பட்ட மலச்சிக்கலை நீக்க, 1 டிராம் "கிளிஸெரின்" இதை "ஸிரிஞ்சு" மூலமாய் ஆஸனத்திற்குள் ஸிரிஞ்சுபண்ணினல், மலம் வெளியாகும். ஆனல் ஸிரிஞ்சு பண்ணின அந்த நேரம் தான் மலம் வெளியாகுமே தவிர திரும்பவும் மலச்சிக்கல் உண்டாகாமல் தடுக்காது.

(3) காதுச்சவ்வுக்குள், வெளிச்சியாவது, ரணமாவது உண்டாகி குத்துவலி ஏற்பட்டால்

எடுத்துக்கொள்

கிளிஸெரின் அவுன்ஸ் 1
(g)
போரிக். ஆஸிட். கிரைன் 10
(b) (d)
ஸோடா. பைகார்ப். கிரைன் 10
(d) (b) (b)

ஒன்றுசேர்

இவைகளை எல்லாம் 'டேஸ்ட். டியூப்பில் நன்ருய்க் கொதிக்கவைத்து, ஆறின பிறகு காதுக்குள் காலே, மாலே, 20 துளி விட்டுப் பஞ்சால் அடைத்து வைக்கவும்.

உள்ளுக்குக் கொடுக்க:—

(1) மூலத்தால் ரத்தம் போகிறதை நிறுத்த, தடவல் 1 க்கு 1 தேக்காண்டி வீதம் நாள் 1 க்கு 3 அல்லது 4 தடவல் கொடுக்கலாம்.

(2) நீரழிவுக்காரர்களுக்கு மற்ற மருந்துக ளோடு இனிப்புச்சேர்க்க இதைத் தடவல் 1-க்கு 1 டிராம் சேர்த்துக்கொள்ளலாம்.

(3) இரும்பு சேர்ந்த மருந்துகள் கொடுக் கும்போது மலத்தைக்கட்டாமல் இருக்க தடவல் 1-க்கு 1 டிராம் சேர்த்துக் கொள்ள லாம். சமபாகம் "டிஞ்சர் பேரை. பேர்க்
(f)
குளோரைட்'' கிளிஸெரின்'' இந்த இரண்
(d) (g)

டையும் ஒன்று சேர்த்து குச்சியில் பஞ்சு சுற்றி முக்கி தொண்டைக்குள் உள் நாக்கு வளர்ந்திருப்பதால் உண்டாகிற ஓயாத இருமலைக் குணமாக்கவும், தொண்டைக்குள் இருபக்கங்களில் கட்டியிருக்கும், கட்டிகளைக் கரைக்கவும் மேல் தடவலாம்.

---

## (87) கிளிஸிரிஸா. ரூட்

(g) (z)

லிக்கரீஸ். ரூட்

### அதி மதுரம்.

குணம்:—கதார்ட்டிக் (2) டெமியூல் ஸென்ற்
(d)

உபயோகம்:— வெகுவாய் மலத்தைக் கழிக்கக் கூடியது. ஆனால் முக்கியமாய் மற்ற மருந்துகளுக்கு இனிப்பைக்கொடுக்க உபயோகப்படுகிறது

(1) பல்விஸ். கிளிஸ்ரிஸா. கோ
(g) (z)

குணம்:—லாக். ஸாட்டிவ்

அளவு:—1 முதல் 2 டிராம்

உபயோகம்:—மூல முளைக்காரர்களுக்கு, மலச்சிக்கலை நீக்கி, மலத்தை வெளியாக்கக்கொடுக்க நல்ல மருந்து. படுக்கைக்குப் போகும்போது 1 அல்லது 2 டிராம், கொஞ்சம் காய்ச்சின பாலிலாவது, அல்லது தண்ணீரிலாவது கலக்கிச்சாப்பிடவும். காலையில் மலம் வெளியாகும்.

## (88) எக்ஸ்ட்ராக்ட். கிரிண்டிலியா.
(g) (d)

லிக்குவிட்
(d)

இதை இளைப்பு, காசம் இவைகளுக்கு 1 அவுன்ஸ் தண்ணீரில் 20 துளி வீதம் கொடுக்கலாமெனத் தீர்மானிக்கிறார்கள்.

---

## (89) ஆமா மெலிடிஸ். கார்ட்டெக்ஸ்
(h) (d)

குணம்:—ஆஸ். டிரிஞ்சென்ற்
அளவு:—½-முதல் 1-டிராம்.

**(1)** எக்ஸ்ட்ராக்ட். ஆமா மெலிடிஸ். லிக்குவிட்
(h) (d) (d)

குணம்:—ஆஸ்டிரிஞ்சென்ற்
அளவு:—5 முதல் 15 துளி
உபயோகம்:—¼-அவுன்ஸ் "எக்ஸ்ட்ராக்ட் ஆமா மெலிடிஸ்
(h) (d)
லிக்குவிட்" 2¼அவுன்ஸ் 'ஸிம்பிள் ஆயின்ற்
(d)
மென்ற்" இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக் களிம்பாகச்செய்து, எரிச்சலோடு, வேதனையும் ரத்தமும் பட்டுக்கொண்டிருக்கிற மூலமுளையில் தடவலாம்.

அதேகாலத்தில் உள்ளுக்கும் தடவல் 1-க்கு 5-துளி 1-அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1-க்கு 3 அல்லது 4 தடவல் கொடுக்கலாம்.

(2) டிஞ்சர். ஆமா. மெலிடிஸ்
(h) (d)

**குணம்:—**ஆஸ். டிரிஞ்சென்ற்

**அளவு:—**½-முதல் 1 டிராம்

**உபயோகம்:—**(1) *மூல மூளைக்காரர்களுக்கு மூலத்தில் இருந்து வருகிற ரத்தத்தை நிறுத்த உள்ளுக்குக் கொடுக்க:—*

*எடுத்துக்கொள்*

*டிஞ்சர். ஆமா. மெலிடிஸ்* *துளி* 90
(h) (d)

*ஆக்குவா. சேர்ந்து* *அவுன்ஸ்* 3

*ஒன்றுசேர்*

*மிக்சர்செய்*

*தடவல்* 1 *க்கு* 1 *அவுன்ஸ் வீதம் நாள்* 1*க்கு* 3-*தடவல் கொடுக்கவும்.*

(2) *ரணமாயும், ரெத்தமும் வடிந்து வடிந்து கொண்டிருக்கிற மூலத்திற்கு:—*

1-பங்கு "டிஞ்சர் ஆமா மெலிடிஸ் 10-பங்கு
(h) (d)

*தண்ணீர் சேர்த்து இரி கேட்டர்" மூல*
(g)

*மாயாவது, அல்லது 'ஸிரிஞ்சு' மூலமாயாவது, ஆசனத்தில் ஸிரிஞ்சு பண்ணலாம்.*

*மேகம், வெள்ளைப்பிரமேகம் இவைகளுக்கும் மேல் காட்டிய அளவில் லோஷன் செய்து ஸிரிஞ்சு செய்யலாம்.*

*அதே தடவையில் மேல் சொல்லிய மூல வியாதிக்கு உள்ளுக்கும் தடவல்* 1-*க்கு*

30 துளி 'டிஞ்சர் ஆமா. மேலிடிஸ்' 1 அவு
(h) (d)
ன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1-க்கு 3 அல்லது 4-தடவல் கொடுக்கலாம்.

அல்லது

மூல மூளைக்காரர்களுக்கு ஏற்படுகிற உபத்திரவத்துக் கெல்லாம். 'ஏஸேஸீலன்' என்
(h) (z)
னும் மருந்தை வெளிப் பிரயோகமாகவும் உள்ளுக்கும் கொடுக்கலாம். இதை உபயோகப் படுத்தும் விதத்தை ஒவ்வொரு பாட்டிலிலும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

---

## (90) ஐட்ரார்ஜிரீ = (மெர்க்குரி)
(h)(d) ரஸம்

ஐட்ரார் ஜிரி. கம். கிரீட்டா
(h)(d)

இதற்கு, 'கிரே. பவுடர்.' என்றும் பெயர்
(g) (d)

செய்யும்விதம்:—2 அவுன்ஸ் 'பிரீப்பேர்ட். க்ஷாக்' இதோடு
(d)
Prepared Chalk

1 அவுன்ஸ் 'ரஸம்' சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

குணம்:—ஆல்டரேட்டிவ்

அளவு:—1 முதல் 5 கிரைன்

**உபயோகம்:**—இதை, மேகநீர், மேகப்புண், குழந்தைகளுக்குண்டாகிற கரப்பநீர், ரத்தத்தில் கலந்திருக்கிற விஷத்தன்மையால் உண்டாகும் தூர்நீர் வியாதிகள் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

6 மாசத்துக் குழந்தைக்குத் தடவல் 1-க்கு ½-கிரைன் வீதம், 3-நாளைக்கு நாள் 1-க்கு 3 தடவல் கொஞ்சம் தேனில்கலந்து கொடுத்து பிறகு ஒவ்வொரு நாள் இரவில் மட்டும் ½-கிரைன் வீதம் இடை இடையே விட்டு விட்டு குழந்தை நன்றாய்ச்சவுக்கியம், அடையுமட்டும் கொடுக்கவும்.

பெரியவர்களுக்கு, மேகவியாதி சம்பந்தமாய் ரத்தத்தில் விஷத்தன்மை கலந்து, ரத்தம் அசுத்தமாகி, அதன்காரணமாய் ஏற்படுகிற மேகப்புண் முதலியவைகளைக் குணமாக்கி, ரத்தத்தைச் சுத்தம் செய்ய தடவல் 1-க்கு 1 கிரைன் வீதம் நாள் 1-க்கு 3 தடவல், இடையே விட்டு விட்டு நீடித்த காலம் கொடுத்துவரவும்.

(2) எம்பிளாஸ்ட்ரம். ஐட்ரார்ஜிரி

(h)(d)

ரஸப் பிளாஸ்திரி

**குணம்:**—ரீஸால் வென்ற்

ஆனால் இந்தப் பிளாஸ்திரி, வியாதியஸ்தர் உடலுக்குப் பொருந்துகிற தில்லை. ஆகையால் இதற்குப்பதிலாக வீக்கம், கட்டிகளைக் கரைக்க

எம்பிளாஸ்ட்ரம். அமோனியாக்கை.

கம். ஐட்ரார்ஜிரி
(h)(d)

*இதை உபயோகப்படுத்தலாம்.*

**உபயோகப்படுத்தும் விதம்:**—*அரையாப்புக் கட்டிகள், கண்ட மாலைகள் முதலிய துர்நீர்க் கட்டிகளைக் கரைக்க, கட்டிகளுக்குத் தகுந்த அளவில், தோலாவது, முரடான துணியாவது கத்தி ரித்து, மேல்படி பிளாஸ்திரியில் கொஞ்சம் இளக்கித் தடவி, மறுபடியும் அனல் காட்டி இளஞ்சூடாய் இருக்கையில் கரைக்கவேண் டிய கட்டிகளின்பேரில் ஒட்டிவைத்து மேல் பஞ்சுவைத்துக் கட்டி வைக்கவும். இப்படி மாறி, மாறிக்கட்டி கரையும்வரை உபயோ கப்படுத்தவும்.*

(4) பில். ஐட்ரார்ஜிரி (புளு. பில்)
(h)(d) (b)

**செய்யும் விதம்:**—2 *அவுன்ஸ் இடையுள்ள* **'ரஸத்தை'** 3 *அவு ன்ஸ்* **'குல்கந்து' (confession of roses.)** *இதோடு சேர்த்து நன்றாய் அரைத்து, இதோடு நன்றாய்த் தூளாக்கின* **'அதிமது ரம்'** 1 *அவுன்ஸ் சேர்த்து அரைத்துக்கொள் ளவும்.*

**அளவு:**—4 *முதல்* 8 *கிரைன்*

**உபயோகம்:**—*துர்நீர் வியாதிகளால், அசுத்தமான ரத்தத் தைச் சுத்தமாக்கக் கொடுக்கலாம். மலம்*

*வெளியாகி துர்நீர் கழியும். ரத்தத்தை அசுத்தமாக்குகிற விஷத்தன்மையும் நீங்கி விடும்.*

(5) அங்குவன்டம். ஐட்ரார்ஜிரி
(h)(d)

*அல்லது*

புளு. ஆயின்ற்மென்ற்—(ரஸக்கழிம்பு)

(b) *இதை வெளிப் பிரயோகமாகக் கொஞ்சம்* "வாஸலைன்" *என்னும் கழிம்போடுசேர்த்து,* மேகப்புண், *துர்நீர்ப்* புண்களுக்குப் போடலாம்.

(6) அங்குவன்டம். ஐட்ரார்ஜிரி. நைட்ரேட்டிஸ்.
(h)(d)

*அல்லது*

ஸிட்ரின் ஆயின்ற்மென்ற்

*வெளிரின எலுமிச்சம்பழம் நிறமாய் இருப்பதால்தான் இந்தக் கழிம்புக்கு* "ஸிட்ரின் ஆயின்ற்மென்ற்' *என்று பெயராயிற்று. இந்தக் கழிம்பு நாள்படக் கருப்புநிறமாய் விடும்.*

**உபயோகம்:**—*இதை நகச்சுற்றுக்கு, கனமாய்த் தடவி நகத்தைப் பொதிந்து,* 'ஸ்டிக்கிங் பிளாஸ்டர்' *துண்டால் ஒட்டிவைக்கலாமெனத் தீர்மானிக்கிறார்கள்.*

**(7) அன்குவன்டம். ஐட்ரார்ஜிரி.**
(h)(d)

**நைட்ரேட்டிஸ். டைலியூட்**
(d)

*அல்லது*

**டைலியூட்டேட். ஸிட்ரின். ஆயின்ற்மென்ற்**
(d) (d)

**செய்யும்விதம்:**—*ஸிட்ரின், ஆயின்ற்மென்ற்* *அவுன்ஸ்* 1
*வாஸலேன்* *அவுன்ஸ்* 1
*இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.*

**உபயோகம்:**—*இதைப் பொடிப்புகள், அழுகச் சிரங்குகள் காப்பநீர்கள் இவைகளுக்கு தடவலாம்.*

சிரங்குக்குக் கழிம்புசெய்ய:—

*எடுத்துக்கொள்*

*டைலியூடெட். ஸிட்ரின். ஆயின்ற் மென்ற்*
(d) (d)

*அவுன்ஸ்* $\frac{1}{4}$

*புளு. ஆயின்ற்மென்ற்* *டிராம்* $\frac{1}{2}$
(b)

*ஸிங். ஆக்ஸைட்* *டிராம்* 1
(z) (d)

*வாஸலேன்* *அவுன்ஸ்* 1

*ஒன்றுசேர்*

*கழிம்பாகச் செய்து சிரங்கு, மேகப்புண், காப்பநீர் இவைகளின்மேல் தடவி வைத்*

திருந்து பின்பு **"கார்பாலிக் ஸோப்"** அல்லது **"ஸல்பர் வைகோலியா" ஸோப்.**
**(f)**
கொண்டு சுத்தஞ் செய்யவும்.

(8) ஐட்ரார்ஜிரி. **ஓலியஸ்**
(h)(d)

**குணம்:**—ரிஸால்வென்ற்

**உபயோகம்:**—இதைப் வெளிப் பிரயோகமாக அரையாப்புக் கட்டிகள், துர்நீர்க்கட்டிகள் கரைய நாள் 1-க்கு 3 அல்லது 4 தடவல் கட்டிகளின் மேல் தேய்க்கவும்.

(9) அங்குவன்டம். ஐட்ரார்ஜிரி. **ஆக்ஸைட். பிளேவா**
(h)(d) (d) (f)

அல்லது

**பிளாஸ்மா**

**செய்யும்விதம்:**—

ஐட்ரார்ஜிரி. ஆக்ஸைட். பிளேவா. கிரைன் 1
வாஸலேன் கிரைன் 49
ஒன்றுசேர்

கழிம்பாகச்செய்து கண் இமைகளில் புரு வெட்டுதலுக்குத் தடவலாம்.

(10) ஐட்ரார்ஜிரி. பேர்க்குளோரைட்
(h)(d) (d)

அல்லது

**மேர்க்குரிக் குளோரைட்**
(d)

**சவ்வீரம் = வீரம்**

குணம்:—(1) ஆண்டி. ஸிபிலிட்டிக்
(2) ஆல்ட ரேட்டிவ் (3) ஆண்டி. ஸேப்டிக்
அளவு:—1/32 முதல் 1/16 கிரைன்

(1) லிக்கர். ஐட்ரார்ஜிரி. பேர்க்குளோரைட்
(h)(d) (d)

செய்யும் விதம்:—
எடுத்துக்கொள்

ஐட்ரார்ஜிரி. பெர்க்குளோரைட். கிரைன் 5
(h)(d) (d)
டிஸ்டில்ட் வாட்டர். அவுன்ஸ் 10
ஒன்றுசேர்
நன்றாய் 'மார்ட்டரில்' அரைத்துக் கொண்டு கல்கார்க்குக் குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—வாதத்தையும் குணமாக்கி, அதோடு ரத்த அசுத்தத்தையும் நீக்க:—

எடுத்துக்கொள்

பொட்டாஸ் அயோடைட் கிரைன் 15
(d)(d)
டிஞ்சர். ஜென்ஷன். கோ துளி 60
ஸ்பிரிட். அமோனியா. அரோமேட்டிக் துளி 30
லிக்கர். ஐட்ரார்ஜிரி. பெர்குளோரைட்
(h)(d) (d)
துளி 90

ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1-அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3-தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும். துர்நீர்ப் புண்கள், மேகரணங்கள், வெட்டுக் காயங்கள் முதலிய புண்களை ஆற்ற

ஆன்டி. ஸெப்டிக். ஸொலியூஷன்"

அல்லது

"மெர்க்குரி லோஷன்",

**செய்யும் விதம்:—**

ஐட்ரார்ஜிரி. பெர்க்குளோரைட்
(h)(d) (d)

கிரைன் 60

ஸோடியம். குளோரைட் (உப்பு)
(d) (d) கிரைன் 60

கிளிஸெரின் அவுன்ஸ் 1½
(g)

ரெக்டிபைட். ஸ்பிரிட் அவுன்ஸ் 1
(f (d)

எல்லாம் ஒன்றுசேர்த்து "மார்ட்டரில்" அரைத்து கல்கார்க்குக் குப்பியில் ஊற்றி வைத்துக்கொண்டு "பாய்ஸன்"=(விஷம்) என்று லேபில் எழுதி ஒட்டிவைத்துக் கொள்ளவும்.

"ஆன்டி ஸெப்டிக். லோஷன்" 1-அவுன்ஸ் செய்ய இதில் 1-அவுன்ஸ் தண்ணீரில்

4 துளி சேர்த்துக்கொள்ளவும். இந்த அள வில் போதுமான லோஷன் செய்துக்கொள் ளலாம்.

இந்த லோஷனைக்கொண்டே, எவ்விதமான ரணங்களையும் கழுவி மேல்படி லோஷனில் முக்கிப்பிழிந்த லின்றுத் துணியால் ரணத் தைச் சுற்றிவைத்து இந்த லோஷனில் முக்கிப்பிழிந்த வெள்ளைத்துணியால் கட்டி வைத்தால், "அயோடபார்ம்" "போரிக் ஆஸிட்" என்ற மருந்துகளை உபயோகப் படுத்தாமலே, புண்களை ஆற்றிவிடலாம்.

அல்லது

"காரோஸிவ். ஸப்ளிமேட். டேபிளாய்ட்ஸ்"

(b) (b) (d)

என்ற "ஆன்டி ஸேப்டிக் லோஷன்" மாத் திரைகளில், 20 அவுன்ஸ் தண்ணீரில், 1 மாத்திரையைக் கரைத்துக்கொண்டு எவ் விதமான ரணங்களையும் ஆற்றக் கழுவுநீராக உபயோகப்படுத்தலாம்.

இந்த லோஷன் காட்டம் குறையவேண்டு மானுல் 40 அவுன்ஸ் தண்ணீரில் 1 மாத் ரை கரைத்துக்கொண்டு உபயோகப்படுத்த வும்.

மேகப்புண்ணை ஆற்ற:—மேல் எழுதியிருக் கிற "ஆன்டி. ஸேப்டிக் லோஷன்" களில் யாதேனும் ஒன்றினுல் புண்ணை நன்ருய்ச் சுத்தம்செய்துவிட்டு, புண்ணின்மேல் "கா

லோமல்,'' "ஸிங் ஆக்ஸைட்'' இந்த
(z) (d)
இரண்டும் சமபாகம் கலந்து கொஞ்சம் தூற்றி, லின்றுத்துணியை, மேல்படி லோஷனில் முக்கிப்பிழிந்து, சுற்றி அதன்மேல் காட்டன், வைத்துப் பொதிந்து, மேல்படி லோஷனில் முக்கிப்பிழிந்த வெள்ளைத்துணியால் கட்டிவைக்கவும். இப்படி நாள் 1-க்கு 1 தடவல் கட்டினால் போதும். மேகப்புண் குணமாகும்வரை இப்படியே செய்யவும்.

(2) ஐட்ரார்ஜிரி. ஸப். குளோரைட்
(h)(d) (b) (d)

அல்லது

காலோமல் = (ரஸபஸ்பம்)

குணம்:—(1) ஆல்ட்டரேட்டிவ் (2) பர்கட்டிவ் (3) டயூ
(g) (d)
ரேட்டிக்

அளவு:—$\frac{1}{2}$ முதல் 5-கிரைன்.

உபயோகம்:—(1) பித்தத்தைச் சமப்படுத்தி, 2 அல்லது 3 தடவல் மலம் வெளிப் போகச்செய்து, காய்ச்சலேயும் தணிக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| காலோமல் | கிரைன் 4 |
| பெறு. ஸெட்டின். (f) | கிரைன் 8 |
| கார்பின். ஸிட்ரஸ். (f) | கிரைன் 4 |

ஸோடா. பைகார்ப். கிரைன் 4
(d) (b) (b)

ஒன்றுசேர்
இதை ஒரேதடவலாக வாயில்போட்டு உமிழ்
நீரோடு சேர்த்து விழுங்கிவிடவும்.

காலையில் மலம் வெளியாகிப் பித்தமும் கழிந்து காய்ச்சலும் தணியும். இன்னமும் மலம் வெளிப்போக வேண்டுமென்ற அவசியம் இருந்தால் மட்டும் சுக்குக் கஷாயத்தில் இனிப்புச் சேர்த்து அதில் 4 முதல் 6 டிராம் 'எப்ஸம் ஸால்ட்'' என்ற பேதி உப்பைக் கரைத்துச் சாப்பிடவும்.

(2) மேகப்புண், மேகாணம், தூர்நீர்ப் புண் இவைகளுக்குப் புண்ணின்மேல் "காலோமல்'' கொஞ்சம் தூற்றி, "லின்றுத் துணி''யால் சுற்றிக்கட்டி வைத்து "கார்பாலிக்ஸோப்'' கொண்டு சுத்தம் செய்யவும்.

(1) லோஷன் ஐட்ரார்ஜிரி நிக்ரா
(h)(d) (g)

அல்லது

பிளாக் வாஷ்
(b)

செய்யும் விதம்:—கொஞ்சம் "கம். அக்கேஷியா'' வோடு
(g)
தண்ணீர் விட்டுப் பசைபோல் அரைத்துக் கொண்டு அதோடு 15-கிரைன் "காலோமல்'' சேர்த்து அரைத்து, அதோடு ¼ அவு

ன்ஸ் "கிளிஸரின்" சேர்த்து, எல்லாம்
(g)
5-அவுன்ஸ் ஆகும்வரை "லைம்வாட்டர்" (சுண்ணும்புத் தண்ணீர்) சேர்த்துக்கொள்ளவும்.

உபயோகம்:—மேகப்புண் உண்டாகி, அதோடு வீக்கம் இருந்தால், 3 விரல் அகலம் 'லின்றுத்துணி' கிழித்து "பிளாக்வாஷ்" லோஷனில் முக்கி
(b)
வீக்கம் உள்ள பாகம் பூராவும் சுற்றி, ஈரம் உலர உலர, மேல்படி லோஷனை நன்றுய் ஒவ்வொரு தடவையும் குலுக்கிக்கொண்டு அதினல் நனைத்து வரவும். வீக்கம் வற்று கிற வரைக்கும் இப்படிச் செய்யவும். பிறகு புண்ணின்மேல் "காலோமல்"லைத் தனிமை யாகவாவது அல்லது சமபாகம் "ஸிங். ஆக்
(g)
ஸைட்" சேர்த்தாவது மேல்போட்டுக், கார்
(d)
பாலிக். ஸோப் கொண்டு சுத்தம் செய்யவும்.

ஆனல் "காலமல்" லோடு 'வாஸலைன்' சேர்த்துக் கழிம்பாகச் செய்து மேகப்புண், மேகாணம் இவைகளுக்குப் போடுவது அவ்வளவு பொருத்தமான முறை அல்ல.

## (91) அயோஸ்யாமஸ். லீவ்ஸ்.
(h)

குணம்:—(1) ஸெடட்டிவ் (2) அனேடைன்
(d) (d)

(1) எக்ஸ்ட்ராக்ட். அயோஸியாமி. விரிடி.
(h) (d)

அளவு:—2 முதல் 8 கிரைன்.

உபயோகம்:—மலச்சிக்கலை நீக்கக் கொடுக்கிற மாத்திரை களில் சேருகிற மருந்துகள் வயிற்று வலி யையும் பிசைதலையும் உண்டு பண்ணுமை விருக்க, ஒவ்வொரு மாத்திரையிலும் 2 கிரைன் சேர்த்துக் கொள்ளலாம்.

(2) டிஞ்சர். அயோஸியாமஸ்.

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—(1) காய்ச்சல் இருக்கும்போது மேல்வலி, அலுப்பு இவைகளை நீக்க:—
"டயா. போ. ரெட்டிக். மிக்சரில்" தடவல்
(d) (f)
1-க்கு 10 துளி வீதம் சேர்க்கப்பட்டிருக் கிறது.

குறிப்பு:—"டயா. போ. ரெட்டிக் மிக்சர்" செய்யும் விதத்
(d) (f)
தை இப்புஸ்தகத்தின் மூன்றாவது பாகம். முதல் பிரிவில் பார்த்துக் கொள்ளவும்.

(2) வியாதியஸ்தர்களுக்கு இரவில் தூக்கம் உண்டு பண்ண. இருதய வியாதி இல்லாத வர்களுக்கு:—

எடுத்துக்கொள்.

| | |
|---|---|
| டிஞ்சர். அயோஸியாமஸ் | துளி 20 |
| பொட்டாஸ். புரோமைட் | கிரைன் 30 |
| (b) (d) | |
| ஸிரப். ஆரன்டி | துளி 30 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 1 |
| | ஒன்று சேர் |

மிக்சர் செய்

இதை ஒரே தடவலாக இரவில் கொடுக்கவும்.

குறிப்பு:—ஆனால் இதையே, தூக்கம் வருகிறதற்கு வழக்கமாய் வைத்துக் கொள்ளக்கூடாது.

அவசரமான சமயங்களில் மட்டும் உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

(3) பருவுக்கு—குச்சியில் பஞ்சு சுற்றி "டிஞ்சர் அயோஸியாமஸ்" இதில் முக்கி, நாள் 1-க்கு பலதடவல் பருவில் வைத்துக் கொண்டே வந்தால் பருவின் முகம் அழிந்து வீக்கம் வலி இருந்தாலும் குணமாகும்:—

(4) நீர்ப்பையில், எரிச்சல், ரணம் இருந்து நீரும் சரியானபடி இறங்காமல் சொட்டுச் சொட்டாய் இறங்கி, அடிக்கடி நீர் வருவது போல் இருக்கும்போது கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர். அயோஸியாமஸ் | துளி 60 |
| லைக்கர். பொட்டாஸ் | துளி 30 |
| டிஞ்சர். பக்கு | துளி 45 |
| (b) | |

ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3 ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1-அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3-தடவல் கொடுக்கவும்.

"பார்லி. ரைஸ்" வாட்டரில் பாலும் சீனி
(b)
யும் சேர்த்துக் கொடுக்கலாம். "பார்லி மாவு" கஞ்சி காய்ச்சி பாலும் சீனியும் சேர்த்துக்கொடுக்கலாம்.

குறிப்பு:—குழந்தைகளுக்கு 'அயோஸியாமஸ்' அதிகமான அளவில் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளு மென்றும், வயசு சென்றவர்களுக்கு, குறைந்த அளவில் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை யென்றும் தீர்மானிக்கிறுர்கள்.

---

## (92) டாக்டர். ஆமல்வ்ஸ், எமாட்டோஜன்
(d) (h) (h)

இதைத் தேகத்தில் ரத்தம் உண்டாகிப் பலத்தைக்கொடுக்க உபயோகப் படுத்தலாம்.

---

## (93) அயோடம்

குணம்:—(1) அப்ஸார்பென்ற். (2) ஆல்ட்டரேட்டிவ்
(b) (b)

(1) லைக்கர். அயோடி. போர்டிஸ். அல்லது
(d) (f)

லினிமென்ற் அயோடின்.
(d)

செய்யும்விதம்:—அயோடம் (d) — அவுன்ஸ் 1¼

வாத உப்பு) = பொட்டாஸ். அயோடைட். (d)(d) — அவுன்ஸ் ¾

ஆக்குவா — அவுன்ஸ் 1¼

ரெக்டிபைட். ஸ்பிரிட் (f)(d) — அவுன்ஸ் 9

ஒன்றுசேர்

குறிப்பு:—'ரேக்டிபைட். ஸ்பிரிட்' (f)(d) கிடைக்காவிட்டால் "கூட்சு. ஸைன்ட். ஸ்பிரிட்" அதாவது அடுப்பு எரிக்கிற ஸ்பிரிட் எண்ணெய் சேர்த்துக்கொள்ளலாம்.

உபயோகம்:—இதை வெளிப் பிரயோகமாக, வீக்கங்கள், அரையாப்புக் கட்டிகள், ரத்தக்கட்டிகள், வாத சூலைக் கட்டுகள் இவைகளைக் கரைக்கவும், வீக்கங்கள் வற்றவும், மேல் தடவலாம். உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது

## (2) டிஞ்சர். அயோடின் (d)

செய்யும்விதம்:—அயோடம் (d) — அவுன்ஸ் ½

பொட்டாஸ். அயோடைட், (d)(d) — அவுன்ஸ் ½

ஆக்குவா. சேர்ந்து — அவுன்ஸ் ½

ரெக்டிபைட். ஸ்பிரிட். சேர்ந்து. அவுன்ஸ் 20

ஒன்றுசேர்

உபயோகம்:—இதை வெளிப்பிரயோகமாக, ரத்தக்கட்டிகள், வீக்கங்கள், அரையாப்புக் கட்டிகள், சூலைக் கட்டுகள், வாத உளைச்சல், இவைகளுக்கு மேல் தடவலாம்.

குறிப்பு:—வீக்கம், கட்டி முதலானவைகளுக்கு மேல் தடவும்பொழுதெல்லாம். சரிபாகம் "டிஞ்சர்' அயோடின்," "லினிமென்ற். அயோடின்"
(d)
இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக் கொண்டு தடவுவது உத்தமம்.

---

## (9½) இப்பிக்காக். ரூட்

### (1) பல்விஸ். இப்பிக்காக்.

குணம்:—(1) எக்ஸ்பெக்டோரென்ற் (2) எமட்டிக்.

(அளவு:—¼-முதல் 2 கிரைன் (தொண்டைப்புகைச்சல்கிற்க)
15 முதல் 30 கிரைன் (வாந்தி உண்டுபண்ண)

### (2) பல்விஸ். இப்பிக்காக். கோ

இதற்கு "டோவர்ஸ் பவுடர்" என்றும்
(d) (d)
பெயர்
10 கிரைன் மருந்தில் 1 கிரைன் 'அபின்' சேர்ந்திருக்கிறது.

குணம்:—(1) அனேடைன் (2) டயா போ ரெட்டிக்
(d) (d) (f)

**அளவு:**—5 முதல் 15 கிரைன்.

**உபயோகம்:**—வயிற் றழைச்சலோடு, ரத்தமும் சீதமும், கடுப்பும் இருக்கும்போது கொடுக்க:—

**எடுத்துக்கொள்**

| | |
|---|---|
| டோவர்ஸ். பவுடர் (d) (d) | கிரைன் 15 |
| காலிக். ஆஸிட் (g) (d) | கிரைன் 15 |
| பிஸ்மத். ஸப்நைட்ராஸ் (b) (b) | கிரைன் 15 |

ஒன்றுசேர்

3-பொட்டணமாக மடித்துக்கொண்டு 4 மணி நேரத்திற்கு ஒருதடவல் பொட்டணம் தேனில் கலந்துகொடுக்கவும்.

**குறிப்பு:**—இந்த மருந்துகொடுத்து 1-மணி நேரம்வரை தண்ணீராவது, அல்லது தண்ணீர் போன்ற ஆகாரமாவது கொடுக்கக்கூடாது.

(3) வைனம் இப்பிக்காக்

**குணம்:**— (1) எக்ஸ்பெக்டோ ரேன்ற் (2) எமட்டிக்

**அளவு:**—10 முதல் 30 துளி (தொண்டைப் புகைச்சலே நிறுத்த) ½-முதல் ¾- அவுன்ஸ் (வாந்தி உண்டு பண்ண)

**உபயோகம்:**—(1) 1-வயசுக்குழந்தைக்கு வாந்தி உண்டு பண்ணி கபத்தை வெளியாக்கிப் புகைச்சலே யும் குணமாக்க, வாந்தி எடுக்கும்வரை 15 நிமிஷத்துக்கு ஒரு தடவல் 1 தேக்கரண்டி அளவு "வைனம். இப்பிக்காக்'

கொடுத்து, வாந்தியான பின்பு, 2-மணிக்கொரு தடவல், தடவல் 1-க்கு 5 துளி வீதம், 2 அல்லது 3 தடவல் கொடுத்து நிறுத்திக் கொள்ளவும்.

(2) பலவித வியாதிகளால் உண்டாகிற வாந்தியை நிறுத்த வாந்தி நிற்கிற வரைக்கும், 2 அல்லது 3 மணிக்கொரு தடவல், 1 அவுன்ஸ் தண்ணீரில் 1 துளி 'வைனம் இப்பிக்காக்' கொடுத்து வரவும்.

(3) தொண்டைப் புகைச்சலை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| சோடா. பை கார்ப்<br>(d) (b) (b) | கிரைன் 30 |
| வைனம். இப்பிக்காக் | துளி 30 |
| டிஞ்சர். காம்பர் கோ.<br>(f) | துளி 60 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் 4 மணி நேரத்துக்கு ஒரு தடவல் கொடுக்கவும்.

குறிப்பு:— தொண்டைப் புகைச்சலோடு அற்ப சுரமும், அலுப்பும் இருந்தால் மேல் எழுதி யிருக்கிற மிக்சரில் "ஸோடா பை கார்ப்" இதை
(d) (b) (b)
நீக்கிவிட்டு, தடவல் 1-க்கு 4-கிரைன் "கோய்னைன், ஸல்பஸ்" இதை 5 துளி "ஆஸிட்
(f) (d)

ஸல்பியூரிக் டில்'' சேர்த்துக்கரைத்து உப
(f) (d)

யோகப்படுத்திக் கொள்ளவும்.

(4) சிறு குழந்தைகளுக்கு தொண்டைப் புகைச்சலை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| வைனம், இப்பிக்காக். | துளி 8 |
| அமோனியா கார்ப் (b) | கிரைன் 4 |
| டிஞ்சர், ஸெனிகா. (g) | துளி 15 |
| டிஞ்சர். சில்லி. | துளி 8 |
| ஸிரப். டுலு. | துளி 20 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் 1 |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 2 தேக்கரண்டி வீதம் 4-மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

குறிப்பு:—குத்திருமலாய் இருந்தால் "அமோனியா கார்ப்''
(b)

இதை நீக்கிவிட்டு, மேல்காட்டிய மிக்சரில் தடவல் 1 க்கு 2 கிரைன் "அமோனியா புரோமைட்'' 5-துளி "டிஞ்சர். அயோஸி
(b) (d)

யாமஸ்'' இந்த இரண்டையும் சேர்த்துக் கொள்ளவும்.

## (95) அயோடோ பார்ம்
(d) (f)

**குணம்:—(1)** ஆன்டி ஸெப்டிக்

**உபயோகம்:—** இதை, எவ்விதமான புண், வெட்டுக்காயம், ஆராத ரணம் இவைகளுக்கெல்லாம் தனிமை யாகவாவது அல்லது இரண்டு பங்கு "போ
(b)
ரிக் ஆஸிட்" உடன் கலந்தாவது, மேல்
(d)
தூற்றி அதன்மேல், "லின்ற்" "காட்டன்" இவைகள் வைத்துப் பொதிந்து வெள்ளைத் துணியால் கட்டி வைக்கவும்.

## (96) அயோடால்
(d)

இதற்கு "அயோட பாரத்தை"ப் போல் வீச்
(d)(b)
சம் கிடையாது. 'அயோட பாரத்தை' உப
(d) (b)
யோகப்படுத்துவதுபோல் இதையும் புண்க ளுக்கு உபயோகப்படுத்தலாம்.

---

## (97) இக்தியால்.

இது தார் எண்ணெய் வீச்சமுள்ள, கருப்பு நிறமான தைலம்.

**உபயோகம்:—** இதை ரத்தக் கட்டிகள், அரையாப்புக் கட்டிகள், வீக்கங்கள் இவைகளை வற்றவைக்க:—

எடுத்துக்கொள்

இக்தியால் டிராம் 1
எக்ஸ்ட்ராக்ட். பெல்லடோனா அவுன்ஸ் ½
(b)
கிளிஸரின் டிராம் 1
(g)

ஒன்றுசேர்

மிக்மேன்ருகச் செய்து கட்டிகளின்மேல்
(g)
தடவி பஞ்சுவைத்துக் கட்டவும்.

---

## (98) ஜாலப்

### (1) பல்விஸ். ஜாலப்

குணம்:—பர்கட்டிவ்
(g)

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—இதை, மலம் வெளியாகும்பொருட்டு தனிமையாக உபயோகிப்பதால் மலம் வெளிப் போகும்போது, வயிற்றிலும், குடலிலும் வலி உண்டாகு மாகையால் இதற்குப் பதிலாக.

### (2) பல்விஸ். ஜாலப்கோ

இதை வயிற்ருல் போக உபயோகப்படுத்தலாம்.

அளவு:—20 முதல் 60 கிரைன்

உபயோகம்:—பித்தமும் கழிந்து, 3-அல்லது 4 தடவல் மலமும் வெளியாக வேண்டியதிருந்தால்

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| காலோமல் | கிரைன் 3 |
| ஸோடா. பை. கார்ப் | கிரைன் 4 |

(d) (b) (b)

ஒன்று சேர்

இதை ஒரே தடவலாக இரவில் வாயிற் போட்டு உமிழ் நீரோடு கூட்டி இறக்கி மறுநாள் காலையில் 2 அவுன்ஸ் தண்ணீரில் 1 டிராம் "பல்விஸ் ஜாலப். கோ" கலக்கிக் கொடுக்கவும். பிறகு இடையே வெந்நீர் குடிக்கவும்.

---

## (99) ஆயில் ஜூனிப்பர்.

இது ஒருவிதமான வாசனையுள்ள, லேசான மஞ்சள் நிறமான எண்ணெய்.

**குணம்:—**டயூரெட்டிக்

(d)

**அளவு:—**½ முதல் 3 துளி (சீனியில் கலந்து கொடுக்கவும்)

(1) ஸ்பிரிட் ஜூனிப்பர்

**செய்யும் விதம்:—**

| | |
|---|---|
| ஆயில். ஜூனிப்பர் | அவுன்ஸ் 1 |
| ரெக்டிபைட். ஸ்பிரிட். | அவுன்ஸ் 19 |

(f)(d)

ஒன்றுசேர்

இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும்.

குணம்:—டயூரெட்டிக்

(d)

அளவு:—20 முதல் 60 துளி

உபயோகம்:—நீர் பிரிய வேண்டியதற்காக இதை தனிமையாக உபயோகப் படுத்துவதைவிட, நீரைப் பிரிக்கக்கூடிய மற்ற மருந்துகளோடு சேர்த்துக் கொடுப்பது நல்லது.

நீர் பிரிந்து வீக்கம், சுரப்பு வற்ற:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பொட்டாஸ். ஆஸிட்டஸ். | கிரைன் 30 |
| பொட்டாஸ். ஸிட்ரஸ். | கிரைன் 30 |
| ஸ்பிரிட். ஜூனிப்பர். | துளி 60 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி. | துளி 45 |
| ஆக்குவா சேர்ந்து | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் விதம் நாள் 1-க்கு 3 தடவல் கொடுக்கவும்.

---

## (100) ஜாம்பல்.

(b)

நவ்வல் பழம்.

இது நீரழிவுக்காரர்களுக்கு, அதிகமாய்ப் போய்க்கொண்டிருக்கிற, நீரின் அளவைக் குறைக்க உபயோகப்படுகிறது. தடவல் 1-க்கு 30 கிரைன் தூள்கொடுக்கலாம்; ஆனால் இதற்கு மலத்தைக் கட்டக்கூடிய குணம் உண்டு.

## (101) பல்விஸ் கைநோ

குணம்:—ஆஸ்டிரிஞ் சென்ற்

அளவு:—5 முதல் 20 கிரைன்.

குறிப்பு:—இரும்பு சேர்ந்த மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்கக் கூடாது.

(1) பல்விஸ். கைநோ. கோ
20 கிரைன் பொடியில் 1 கிரைன் 'அபின்' இருக்கிறது.

குணம்:—(1)ஆஸ்டிரிஞ் சென்ற் (2) அநோடைன்
(d)

அளவு:—5 முதல் 20 கிரைன்.

உபயோகம்:—(1) வயிற்றழைச்சல், மூலத்தால் ரத்தம் போகுதல், கடுப்பு இவைகளுக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பல்விஸ். கைநோ. கோ. | கிரைன் 30 |
| காலிக். ஆஸிட். | கிரைன் 15 |
| (g) (d) | |
| பிஸ்மத். ஸப்நைட்ரஸ். | |
| (b) (b) | கிரைன் 15 |

ஒன்றுசேர்

3-பொட்டணமாக மடித்துக்கொண்டு தடவல் 1-க்கு 1-பொட்டணம், 4-மணிக்கொரு தடவல் தேனில் கலந்து கொடுக்கவும்.

குறிப்பு:—உபத்திரவம், லேசாய் இருந்தால் "பல்விஸ். கைநோ. கோ" தடவல் 1-க்கு 5 கிரைன் போதும்.

'பார்லி மாவு' கஞ்சியில் பால் சேர்த்துச் சாப்பிடவும்.

(2) 5 வயசுக் குழந்தைக்கு வயிற்றழைச் சலுக்குக் கொடுக்க:—

**எடுத்துக்கொள்**

| | |
|---|---|
| பல்விஸ். கைநோ. கோ. | கிரைன் 6 |
| பல்விஸ். கிரீட்டா. அரோமேட்டிக். | கம். |
| ஒப்பியம். | கிரைன் 9 |
| பிஸ்மத் ஸப்நைட்ராஸ் | கிரைன் 6 |

(b) (b

ஒன்றுசேர்

3 பொட்டணமாக மடித்துக் கொண்டு தடவல் 1-க்கு 1 பொட்டணம் வீதம் 4 மணிக்கொரு தடவல் தேனில்கலந்து கொடுக்கவும். "பார்லி மாவு" கஞ்சி கொடுக்கவும்.

---

## (102) கிரவலின்.

இது தெளிவான, தவிட்டு நிறமுள்ள திராவகம்.

**உபயோகம்:**—இது "கார்பாலிக். ஆஸிட்" டை விட அதிக வேக முள்ளதும் ஆனால் அதைப்போல் அவ்வளவு விஷமுள்ளதும் அல்ல. புண், ரணம் இவைகளிலுள்ள விஷப்பூச்சிகள் சாக, லோஷனைச் செய்து உபயோகப் படுத்தலாம்.

---

## (103) லவண்டியூலே. ஒலியம்
(d)

அல்லது

ஆயில். லவண்டர்
(d)

இது நல்லவாசனையுள்ள எண்ணெய்

**குணம்:**—கார்மினேட்டிவ்

**அளவு:**—½ முதல் 3 துளி

**உபயோகம்:**—அஜீரணத்தால் உண்டாகிற, மும்மரமான வயிற்றுவலியை நிறுத்த:—

**எடுத்துக்கொள்**

| | |
|---|---|
| ஆயில். லவண்டர் | துளி 3 |
| ஒலியம். கஜபுட். | துளி 2 |

இந்த இரண்டையும் கொஞ்சம் சீனியில் கலந்து கொடுக்கவும்

### (1) ஸ்பிரிட். லவண்டர்
(d)

**செய்யும் விதம்:**—ஆயில். லவண்டர் அவுன்ஸ் ½
(d)
ரெக்டிபைட். ஸ்பிரிட். அவுன்ஸ் 4½
(f) (d)

இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும்.

**அளவு:**—6 முதல் 20 துளி

### (2) டிஞ்சர். லவண்டர் கோ

**அளவு:**—30 முதல் 60 துளி

**உபயோகம்:**—இதற்கு "கார்மினேட்டிவ்" குணம் இருந்த போதிலும், பொதுவாக மிக்சர்களில், மற்ற மருந்துகளுக்கு நிறத்தையும் வாசனையையும் கொடுக்க உபயோகப்படுகிறது.

---

## (104) ஓலியம். லிமோனிஸ்

*அல்லது*

ஆயில். லெமன்

எலுமிச்சம் பழத்தின் தோட்டிலிருந்து எடுக்கப் படுகிற எண்ணெய்

**அளவு:**—½ முதல் 3 துளி

**உபயோகம்:**—பொதுவாக, "ஸோடா" உப்பைப் பொங்க வைத்துச் சாப்பிடும்போது வாசனைக்காக ½ துளி சேர்த்துகொள்ளத்தான் உபயோகப் படுகிறது.

## (105) லினம்—(லின் ஸீட்)

(d)

ஆளிவிதை

**குணம்:**—டேமியூல் சென்ற்
(d)

**உபயோகம்:**—இதை இடித்துத் தூளாக்கி, தனிமையாகவாவது அல்லது அரிசி மாவோடு சேர்த்துக் களியாகக் கிண்டி 'போல்ட்டிஸ்' போட உபயோகப் படுகிறது

ஆனால் பொறுக்கும்படியான சூட்டோடு வைத்துக் கட்டுவது நல்லது.

## (106) லிதியை. கார்போனஸ்
(b)

குணம்:—(1) டயூரெட்டிக் (2) அன்டாஸிட்
(d) (d)

அளவு:—2 முதல் 5 கிரைன்

உபயோகம்:—இதை நீர் இறங்க உபயோகப்படுத்தலாம்.

---

## (107) லொபிலியா
(b)

### (1) டிஞ்சர். லொபிலியா. ஈதர்
(b)

அளவு:—5 முதல் 15 துளி

உபயோகம்:—இதை இளைப்புக்குக் கொடுக்கலாம். மேல்படி வியாதிக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர். லொபிலியா. ஈதர். (b) | துளி 30 |
| பொட்டாஸ். அயோடைட் (d)(d) | கிரைன் 15 |
| ஸ்பிரிட். குளோரோ பார்ம் (f) | துளி. 30 |
| ஆக்குவா. சேர்ந்து. | அவுன்ஸ் 3 |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

## (108) லைஸால்

இது தார் எண்ணெய் வீச்சமுள்ள, கருப்பு நிறமான எண்ணெய் போன்ற மருந்து.

'கார்பாலிக் ஆஸிட்'டை விட இது 5-பங்கு
(b) (d)
அதிகக் காட்டமுள்ளதும், 8 பங்கு விஷத் தன்மையில் குறைவுள்ளதுமான மருந்தெனத் தீர்மானிக்கிறார்கள்.

உபயோகம்:—100 பங்கு தண்ணீருக்கு, $\frac{1}{2}$ முதல் 3 பங்கு சேர்த்து 'லோஷன்'கச் செய்து உபயோகித்தால் புண், ஆராத ரணம் இவைகளிலுள்ள பூச்சி, விஷஜெந்துக்களை நாசஞ்செய்து அவைகளால் உண்டாகும் வியாதியை வரவொட்டாமல் தடுக்கும்.

பெண்களுக்கு, மேகசம்பந்தமான துர்நீர் வியாதிகளுக்கு, மேல் காட்டிய அளவில் "லோஷன்" செய்து 'ஸ்ரிஞ்சு' பண்ணலாம்.

---

## (109) மெக்நீஷியா. கார்ப்
(g) (b)

இது வெண்மையான, லேசான தூள்.

குணம்:—(1) அன்டாஸிட் (2) பர்கட்டிவ்
(d) (g)

அளவு:—5 முதல் 30 கிரைன்

உபயோகம்:—(1) மேல் காட்டிய குணங்களுக்கு இதை தனிமையாக உபயோகப்படுத்துவதைவிட

இது சேர்ந்திருக்கிற "கிரி கரிஸ் பவுடர்"
(g) (g) (d)

இதையாவது, அல்லது பின் எழுதியிருக்கிற 'ஆல்பா. மிக்சர்" இதையாவது உபயோகப்
(b)

படுத்தலாம்.

1 வயசு குழந்தைக்கு தடவல் 1-க்கு 5 கிரைன் "கிரி கரிஸ் பவுடர்" இதை கொஞ்சம்
(g) (g) (d)

வெந்நீரில் கரைத்துக் கலக்கிக் கொடுத்தால் மந்தம் அடிபட்டு 1 அல்லது 2 தடவல் மலம் வெளியாகும்.

(2) சிறு குழந்தைகளுக்கு மந்தம் புளிப்பு நீங்கி அதோடு சம்பந்தப்பட்ட அற்பக் காய்ச்சலும் தணிய "ஆல்பா மிக்சர்' செய்
(b)

யும் விதம்

எடுத்துக்கொள்.

| | |
|---|---|
| எப்ஸம், ஸால்ட். | கிரைன் 40 |
| மெக் னீஷியா. கார்ப். | கிரைன் 5 |
| (g) (b) | |
| ஆக்குவா அனிஸி. சேர்ந்து | அவுன்ஸ் ½ |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

இதை ஒரே தடவலாகக் கொடுக்கவும். இது கொடுத்து 4 மணி நேரம்வரை, மலம் கழியா விட்டால் மறுபடியும் ஒருதடவல் கொடுக்கலாம்.

(3) ஆகாரம் செமிக்கும் காலத்தில் புளித் தேப்பம் வருகிறதாய் இருந்தால் அதை நிறுத்திப் பசி உண்டாக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| மெக்னீஷியா. கார்ப்.<br>(g) (b) | கிரைன் 10 |
| ஸோடா. பை. கார்ப்<br>(d) (b) (b) | கிரைன் 10 |
| டிஞ்சர். ரீயை. கோ | துளி 30 |
| ஸ்பிரிட். அமோனியா. அரோமேட்டிக். | துளி 20 |
| ஆக்குவா. அனிஸி. சேர்ந்து | அவுன்ஸ் 1 |

ஒன்று சேர்

மிக்சர்செய்

இதை ஒரேதடவலாக புளித்தேப்பம் வரும் போது சாப்பிடவும்.

---

## (110) மெக்நிஷியா, ஸல்பஸ்
(g) (f)

அல்லது

எப்ஸம். ஸால்ட்

**பேதி உப்பு**

குணம்:—பர்கட்டிவ்
(g)

அளவு:—½ முதல் 2-டிராம் (அடுத்தடுத்துக் கொடுக்க)
4-முதல் 8 டிராம் (ஒரேதடவல் கொடுக்க)

உபயோகம்:—(1) மலம்வெளியாக, சுக்குக் கஷாயம், இல்லாவிட்டால் நிலவாகைக் கஷாயம் இவைகளில் யாதேனும் ஒன்றில் கரைத்துக் கொடுக்வும்.

குறிப்பிட்ட வியாதிகளுக்காக மற்ற மருந்துகள் சேர்த்து மிக்சர்செய்து கொடுக்கும் போது அதேகாலத்தில் மலமும் வெளியாக வேண்டிய திருந்தால் அவைகளோடு கூட "எப்ஸம் ஸால்ட்" இதையும் வயசுக்குத் தகுந்த அளவில் சேர்த்துக் கொடுக்கலாம்.

(2) மலம் வெளியாக, 'பிளாக் டிராப்ட்'
(b) (d) (f)
இதையும் உபயோகப்படுத்தலாம். இதைச் செய்யவேண்டிய விதத்தை இப்புஸ்தகத்தின் மூன்றாவது பாகத்தின் முதல் பிரிவில் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்

---

## (111) மெல். டிபியூராட்டம்
(d)

அல்லது

**சுடவைத்து வடிகட்டின சுத்தமான தேன்**

உபயோகம்:—(1) இது முக்கியமாய் குழந்தைகளுக்கு தூளான மருந்துகள் குழப்பிக் கொடுக்க உதவும்.

(2) 'போராக்ஸ்' அல்லது வெண்காரம்
(b)
1 பங்கும் 'தேன்' 8 பங்கும் நன்றாய்க்

குழப்பி ஒன்று சேர்த்துக்கொண்டு, வாய்ப் புண், உதடுவெடிப்பு, பால் காம்பு ரணம் இவைகளுக்கு நாள் 1-க்குப் பல தடவல் மேல் தடவலாம். குழந்தைகள் வாயில் பட்டாலும் குற்றமில்லை.

(3) சுடுகிற எண்ணெய், தண்ணீர், ஆவி, நெருப்பு இவைகள் பட்டுவிட்டால், அந்த நிமிஷமே கொப்பளம் ஆகவொட்டாமல் தடுக்க தேனை மேல் தடவலாம் என்பது யாவர்க்கும் தெரிந்த விஷயமே.

(1) ஆக்ஸ. மேல்.

**செய்யும் விதம்:**—

| | |
|---|---|
| ஆஸிட்டிக். ஆஸிட். | அவுன்ஸ் 1 |
| (d) | |
| மெல். டிபியூராட்டம். | அவுன்ஸ் 8 |
| (d) | |
| ஆக்குவா. | அவுன்ஸ் 3 |

இவைகளை ஒன்று சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

**குணம்:**—எக்ஸ்பெக்டோரேன்ற்

அளவு:—1 முதல் 2 டிராம்

(2) ஆக்ஸிமேல் ஸில்லி.

**குணம்:**—எக்ஸ்பெக்டோரேன்ற்

**அளவு:**—½ முதல் 2 டிராம்

**உபயோகம்:**—இதை மட்டும் தனிமையாக உபயோகிப்பதை விட, தொண்டைப் புகைச்சலை நிறுத்த செய்து கொடுக்கப்படுகிற மிக்சரில் மற்ற மருந்துகளோடு இதையும் சேர்த்துக்

கொடுப்பது நல்லது தொண்டைப் புகைச் சலே நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| | அமோனியா. கார்ப். | கிரைன் 10 |
| | (b) | |
| | டிஞ்சர். ஸெனிகா. | துளி 45 |
| | (g) | |
| | வைனம். இப்பிக்காக் | துளி 30 |
| | ஆக்ஸிமெல். ஸில்லி. | துளி 90 |
| | ஆக்குவா சேர்ந்து | அவுன்ஸ் 3 |
| | | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1-அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3-தடவல் கொடுக்கவும்.

---

## (112) மெந்தா. பிப்பரிட். ஓலியம்,

### பேப்பர்மின்ட் ஆயில்.

**குணம்:**—(1) கார்மினேட்டிவ் (2) ஆன்டி. ஸ்பாஸ் மோடிக் (d)

**அளவு:**—½ முதல் 3 துளி

**உபயோகம்:**—(1) வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, புளித் தேப்பம், சத்திப்பு, அஜீரணத்தால் ஏற்படும் வாய்வுக் குத்து இவைகளுக்கு 1 அல்லது 2 துளி கொஞ்சம் சீனியில் கலந்து கொடுக்கவும். மறுபடியும் கொடுக்கவேண்டிய அவசிய மிருந்தால் 1-மணி நேரம் கழித்துக் கொடுக்கவும்.

(2) மண்டை இடி, ஒருத்தலை இடி இவை களுக்கு வலியுள்ள இடத்தில் அழுத்தி மேல் தேய்க்கலாம்.

## (1) ஆக்குவா. மேந்தா. பிப்.

அல்லது

## பேப்பர் மின்ட் ஆயில் கலந்த தண்ணீர்

**செய்யும்விதம்:**—1 அவுன்ஸ் தண்ணீருக்கு ½ துளி "பேப்பர் மின்ட் ஆயில்" வீதம் முதலில் சீசாவில் விட்டு பிறகு தண்ணீர் விட்டு நன்றாய்க் குலுக்கி வைத்துக் கொள்ளவும்.

**குணம்:**—பேப்பர்மின்ட் ஆயிலுக்குள்ளது.

**அளவு:**—1 முதல் 2 அவுன்ஸ்

## (2) ஸ்பிரிட். மேந்தா

**செய்யும்விதம்**—½ அவுன்ஸ் "பேப்பர்மின்ட் ஆயில்" இதோடு 4½ அவுன்ஸ் "ரேக்டிபைட் ஸ்பிரிட்" சேர்த்து நன்றாய்க் குலுக்கிக் கொள்ளவும். இது தண்ணீரில் மிதக்காமல் நன்றாய் ஒன்று சேர்ந்து கொள்ளும்.

**குணமும் உபயோகமும்:**— பேப்பர்மின்ட் ஆயிலுக் குள்ளது.

**அளவு:**—5 முதல் 20 துளி (1 அவுன்ஸ் தண்ணீரில் விட்டுக் கொடுக்கவும்)

## (3) எஸன்ஸ். பேப்பர்மின்ட்

**செய்யும்விதம்:**— ½ அவுன்ஸ் "ஆயில் பேப்பர்மின்ட்" இதோடு 2 அவுன்ஸ் "ரேக்டிபைட் ஸ்பி

ரிட்" சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும். இதுவும் தண்ணீரில் கலந்துகொள்ளும்.

**பணமும் உட்யோகமும்:**—பெப்பர்மின்ட் ஆயிலுக்குள்ளது.

**அளவு:**—2 முதல் 10 துளி 1 அவுன்ஸ் தண்ணீரில் சேர்த்துக் கொடுக்கவும். அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்தேப்பம் இதோடு சம்பந்தப்பட்ட வயிற்றோட்டம் இவைகளுக்குக் கொடுக்க:—

10 கிரைன், 'சோடா உப்பை' $\frac{1}{2}$ அவுன்ஸ்
(d)
தண்ணீரில் கரைத்து இதில் 1 துளி "பெப்பர்மின்ட் ஆயிலை" 10 துளி "ஸ்பிரிட் குளோரோ பார்ம்" சேர்த்துக் கரைத்து
(f)
ஊற்றி அதோடு 20 துளி "டிஞ்சர் கார்டம்
(d)
கோ"வும் 20 துளி "ஸ்பிரிட் அமோனியா அரோமேட்டிக்" கும் சேர்த்து எல்லாம் சேர்ந்து 1 அவுன்ஸ் ஆகும்வரை போதுமான தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும்.

இப்படி நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

**குறிப்பு:**—இதற்கு "கார்மினேட்டிவ். மிக்சர்" என்று பெயர்.

## (113) மெந்தால்

பெப்பர்மின்ட் கிரிஸ்ட்டல்

பெப்பர்மின்ட் உப்பு.

இதற்கு "புகையிலைச் சத்து" என்றும் பெயர் வழங்கி வருகிறது.

அளவு:—½ முதல் 2 கிரைன்

உபயோகம்:—(1) மண்டை இடிக்கு வலியுள்ள இடத்தில் அழுத்தித் தேய்க்கலாம்.

(2) பல்வலி, பல் அரண், ஈறுகட்டி வலி வேதனை இருத்தல் இவைகளுக்கு வலி உள்ள இடத்திலும் அரண், கட்டி இவைகள் இருக்கிற இடத்திலும் வைக்கலாம்.

(2) அஜீரணம், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, புளித்தேப்பம் இவைகளுக்கு தடவல் 1 க்கு 1 கிரைன் கொடுக்கலாம்.

குறிப்பு:—தற்காலம் இதை விசேஷமாய் வெற்றிலை போடும் போது தடவல் 1 க்கு 1 கிரைன் சேர்த்து உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

---

## (114) மார்பைன். ஐட்ரோ குளோரைட்
(f) (h (d) (d)

இது 'அபினில்' இருந்து எடுக்கப்படுகிறது.

குணம்:—(1) நார்க்கோட்டிக் (2) அனோடைன்
(d)

அளவு:—⅛ முதல் ½ கிரைன்

(1) லைக்கர். மார்பைன். ஐட்ரோ குளோரைட்
(f) (h)(d) (d)

செய்யும்விதம்:—2 அவுன்ஸ் 'பிடிக்கக்கூடிய 'டெஸ்ட் டியூப்' பில் ½ அவுன்ஸ், 'டிஸ்டில்ட். வாட்டரும்,"
(d)

½ அவுன்ஸ் "ரேக்டிபைட் ஸ்பிரிட்டும்"
(f)(d)

ஒன்றுசேர்த்து அதில் 8¾ கிரைன் மார்பைன் ஐட்ரோகுளோரைட் போட்டு 'ஸ்பிரிட்.
(h)(d) (d)
விளக்கில்' நன்றாய்க் கொதிக்கவைத்து, "மார்பைன். ஐட்ரோகுளோரைட்" பூரா
(h)(d) (d)
வும் கரைந்தபிறகு அதோடு 19 துளி 'டைலி
(d)
யூட். ஐட்ரோகுளோரிக். ஆஸிட்" சேர்த்து
(h)(d) (d)
எல்லாம் சேர்ந்து 2 அவுன்ஸ் ஆகும் வரை "டிஸ்டில்ட். வாட்டர்" சேர்த்துக்கொள்ள வும்.

குணம்:—(1) நார்க்கோட்டிக் (2) அனோடைன்
(d)

அளவு:—10 முதல் 60 துளி

உபயோகம்:—(1) இதை நோயாளிகளுக்கு இரவில் தூக்கம் உண்டுபண்ண 1 அவுன்ஸ் தண்ணீரில் 30 துளி சேர்த்துக் கொடுக்கலாம்.

(2) அஜீரணத்தோடு, வயிற்றுவலியும், குன்மமும் இருந்தால்:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பிஸ்மத் ஸப். நைட்ரஸ். | கிரைன். 15 |
| (b) (b) | |
| ஸோடா. பை. கார்ப். | கிரைன். 30 |
| (d) (b) (b) | |
| கம். அக்கேஷியா. | கிரைன். 45 |
| (g) | |
| டிஞ்சர். ஜென்ஷன். கோ. | துளி. 45 |

லைக்கர். மார்பைன். ஐட்ரோகுளோரைட்.
(f) (h)(d) (d)
துளி 30

ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ். 3
ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

குறிப்பு:—மருந்து கொடுக்கும்போது ஒவ்வொரு தடவலும் குலுக்கிக்கொண்டு கொடுக்கவும்.

(2) இன்ஜெக்ஷன். மார்பைன். ஐப்போ. டேர்மிக்கா
(f) (h) (d)

செய்யும் விதம்:—நன்ருய் கொதிக்கவைத்து ஆறவைத்த, 110 துளி தண்ணீரில் 5 கிரைன் "மார்பைன்
(f)
டார்ட்ரேட்" இதைக் கரைத்துகொள்ளவும்.

உபயோகம்:—'ஐப்போ. டேர்மிக். ஸிரிஞ்சு' என்னும் கருவியின் ஊசியின் வழியாய் ரத்தக்குழலில் குத்தி ரெத்தத்தில் பாவச்செய்யலாம். இப்படிச்செய்வதற்கு தடவல் 1 க்கு

அளவு:—2 முதல் 5 துளி

குறிப்பு:—தனி "மார்பியா" வை இவ்விதம் செய்வதால்
(f)
ஏற்படுகிற அபாயங்களை உண்டாக வொட்டாமல் தடுக்க தற்காலம் "அட்ரோபைன்" சேர்ந்திருக்கிற "இன்ஜெக்ஷன். மார்பைன்"
(f)

ஐபோடேர் மிக். டேப்ளாய்ட்ஸ்'' இதை
(h) (d) (b) (d)
உபயோகப் படுத்தலாம்

காலரா என்னும் விஷபேதி கண்டிருக்கை யில் காலராவை உண்டாக்குகிற விஷப்பூச்சி களை முதலில் வெளிக்குப் போகக்கூடிய மருந்துகளைக் கொடுத்து வெளியாக்கின பின்பு, மேல் சொல்லிய ''அட்ரோபைன்'' சேர்ந்திருக்கிற ''இன்ஜெக்ஷன். மார்பைன்.
(f)
ஐபோ. டேர்மிக். டேப்ளாய்ட்ஸ்'' இதை
(h) (d) (b) (d)
தற்காலம் விசேஷமாய்த்தேர்ந்த இங்கிலீஷ் வைத்தியர்கள் கையாடி வருகிறார்கள்.

---

## (115) மாஸ்க்கஸ்—(மஸ்க்)

### கஸ்தூரி

**குணம்:—(1)** ஆன்டி ஸ்பாஸ்மோடிக் **(2)** ஸ்டிமியூலென்ற்

அளவு:—5 முதல் 10 கிரைன்

### (1) டிஞ்சர். மஸ்க்

### கஸ்தூரி திராவகம்

**உபயோகம்:**—இதை ஜந்நிசுரத்துக்கும், நாடிகளில் சூடுண் டாக்கவும் சுவாசம் சரியானபடி வாங்கவும், விடவும், சூதக ஜந்நிக்கும், கபத்துக்கும் உபயோகப் படுத்தலாம். தடவல் 1 க்கு 20 துளி கொடுக்கலாம்.

---

## (116) மர்

### (1) டிஞ்சர் மர்

**குணம்:**—எம்மனகாக்
(g)

**அளவு:**—30 முதல் 60 துளி 'கம் அக்கேஷியா'வோடு சேர்த்தலைத்துக் கொடுக்கவும்.

**உபயோகம்:**—மாதவிடாய்—(சூதகம்) சரியானபடி பட, 'ஆலோஸ்' சேர்ந்திருக்கிற 'பில். ஆலோஸ் எற்மற்' என்ற மாத்திரையில் தடவல் 1-க்கு 4 கிரைன் வீதம் நாள் 1 க்கு 2 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கலாம்.

அல்லது

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர். ஆலோஸ். எற். மற். | டிராம் 1 |
| லைக்கர். ஸ்ட்ரிக்னைன். ஐட்ரோ குளோரைட் (h)(d) | (d) துளி 6 |
| ஸ்பிரிட். குளோரோபார்ம். (f) | துளி 30 |
| ஆக்குவா. சேர்த்து | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3-தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

**குறிப்பு:**—இதை வீட்டு விலக்கத்துக்கு 3 நாளைக்கு முன் கொடுக்கவும்.

## (117) மொர்ரே ஓலியம்

காட் லிவர் ஆயில்
(d)

மீன் எண்ணெய்

"காட்" என்னும் ஒருவகைமீனின் "லிவர்"
(d)
என்னும் பித்தாசயத்திலிருந்து எடுக்கப்படு கிற "ஆயில்" எண்ணெய் ஆகையால் இதற்கு "காட் லிவர் ஆயில்" என்று பெயராயிற்று.
(d)

குணம்:—டானிக்

அளவு:—1 முதல் 4 டிராம் சுடுகிறபாலில் கலக்கிக் கொடுக்கவும்.

உபயோகம்:—தேகத்தில் ரத்தக்குறைவுக்கும், வாட்சிக்கும், குழந்தைகளுக்கு கணைச்சூட்டுக்கும், நாம்பு, தாது பலயீனத்துக்கும், ரத்த அசுத்தத்தால் உண்டாகும் மேகப்புண்கள், கண்டமாலை முதலிய துர்நீர் வியாதிகளைக் குணமாக்கவும், தேகபுஷ்டி உண்டாகவும் கொடுக்கலாம்.

"காட் லிவர் ஆயில்" கொடுக்கும்போது
(d)
கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்களாவன:—

(1) ஜீரணக் கருவிகளாகிய வயிறு, குடல் முதலியவைகள் சரியான நிலைமையில் ஜீரண சக்தியில் யாதொரு குறைவும் இல்லாமல்

இருக்கவேண்டும். வயிற்றோட்ட முள்ளவர் களுக்குக் கொடுக்கக்கூடாது.

(2) குறைந்த அளவில் அதாவது தடவல் 1-க்கு 1-தேக்கரண்டி அளவு கொடுத்து இந்த அளவு தேகத்துக்குப் பிடித்துக்கொண் டால் மட்டும், கொஞ்சம் கொஞ்சமாய் 1 மாதத்துக்கொரு தடவல் 1 தேக்கரண்டி அதிகமாய்ச்சேர்த்து, தடவல் 1-க்கு 4-தேக் கரண்டி அளவு சாப்பிடுகிற வரைக்கும் கொடுத்து நிறுத்திக்கொள்ளவும்.

இடை இடையே, அஜீரணமாவது வயிற் றோட்டமாவது ஏற்பட்டால் உடனே நிறுத் திக்கொள்ளவும். குணமான பின்பு திரும்பக் கொடுக்கவும்.

(3) தேகத்துக்குப் பிடித்துக் கொள்ளவும், அருவருப்பை நீக்கவும் 15-நாளைக்கு இரவில் மட்டும் தூக்கத்திலேயே தெரியாமல் போ கும்படி கொடுத்து, பிறகு 1 மாசம்வரை மத்தியானமும், இரவுமாக நாள் 1-க்கு 2 தடவல் கொடுத்து இது தேகத்துக்குப் பிடி த்துக் கொண்டால் மட்டும் நாள் 1-க்கு 3 தடவல் இரண்டாம் மாதத்தில் கொடுக்கவும்.

(4) சிலர் கொடுக்கிறதுபோல, ஆகாரம் சாப் பிட்டவுடனே "மீன் எண்ணெ" யைக் கொடுக்கக்கூடாது. ஆகாரம் சாப்பிட்டு 1 மணி நேரம் கழித்துத்தான் கொடுக்கவேண் டும். ஏப்பம் வருங்காலத்தில் வீச்சத்தை மறைக்க எலுமிச்சம்பழவில்லை, அல்லது

பெப்பர்மின்ட் வாயில் ஒதுக்கிக் கொள்ள லாம்.

(1) சிறு குழந்தைகளுக்கு கணைச்சூடு, தேக வரட்சி, சோகை இவைகள் நீங்கிக்கொடுக்க வேண்டிய காட் லிவர் ஆயில்கள் ஆவன:—
(d)

(1) "கெப்ளர்ஸ். ஸொலியூஷன். காட்லிவர். ஆயில். இன், மால்ட். எக்ஸ்ட்ராக்ட்."
(d)

(2) "ஸ்காட்ச். எமல்ஷன். காட் லிவர். ஆயில்"
(d)

(3) "மால்ட்டின். காட். லிவர். ஆயில்"
(d)

(4) "பைனுல். காட். லிவர். ஆயில்"
(b) (d)

(5) "கெப்ளர்ஸ். ஸொலியூஷன். காட்லிவர். ஆயில். இன். மால்ட். எக்ஸ்ட்ராக்ட். வித். ஐப்போ பாஸ்பைன்."
(d)
(h) (f) (f)

(6) "கிரீம். ஆப். மால்ட். காட். லிவர் ஆயில். வித். ஐப்போ, பாஸ் பைட்"
(f) (d)
(h) (f) (f)

(2) பெரியவர்களுக்கு தேகத்தில் வலுவைக் கொடுத்து தாது பலயீனத்தை மாற்றி தேகத்துக்குப் பலத்தைக் கொடுக்க உபயோகப் படுத்த வேண்டிய "காட். லிவர். ஆயில்"களாவன:—
(d)

(1) "டீ ஜான்ஸ். காட். லிவர். ஆயில்"
(d) (d)

(2) "பர்காயின்ஸ். பியூர். காட்லிவர்.
(b)(g) (d)
ஆயில்".

(3) "கெப்ளர்ஸ். ஸொலியூஷன். பியூர் காட்.
(d)
லிவர். ஆயில்".

(4) "கெப்ளர்ஸ். ஸொலியூஷன். காட். லிவர்
(d)
ஆயில். இன். மால்ட். எக்ஸ்ட்ராக்ட். வித்.
ஐபோ பாஸ்பைட்"
(h) (f) (f)

(5) "கிரீம். ஆப். மால்ட். காட். லிவர் ஆயில்.
(f) (d)
வித். ஐப்போ. பாஸ்பைட்ஸ்".
(h) (f) (f)

(3) கண்டமாலை, சூலை முதலிய தூர்நீர் வியாதி கள் குணமாகச் சாப்பிடவேண்டிய "காட். லிவர். ஆயில்"களாவன:—

(1) "டீஜான்ஸ் காட் லிவர் ஆயில்" இதோடு
(d) (d)
தடவல் 1-க்கு 30 துளி "ஸிரப் பெர்ரை
(f)
அயோடைட் சேர்த்துக் கொள்ளவும்.
(d)(d)

(2) "கெப்ளர்ஸ். சொலியூஷன் காட் லிவர்
(d)

ஆயில் இன். மால்ட் எக்ஸ்ட்ராக்ட் வித் அயர்ன் அயோடைட்."

(d)(d)

(3) "ஸ்டெர்ன்ஸ். ஒயின் காட் லிவர் ஆயில்
(d)

(4) க்ஷயரோகிகள் சாப்பிடவேண்டிய "காட்
(d)
லிவர் ஆயில்" களாவன:—

(1) "டீ ஜான்ஸ். காட் லிவர் ஆயில்
(d) (d)

(2) "கிரீம் ஆப். மால்ட். காட். லிவர் ஆயில்.
(f) (d)
வித். ஐபோ பாஸ்பைட். ஆன்ட் கிரியா
(h) (f) (f) (d)
ஸோட்"

(3) கிரியாஸோட்டெட். எமல்ஷன். காட்
(d) (d)
லிவர். ஆயில்"

---

## (118) நாப்தால்
(f)

பீட்டா. நாப்தால்

(b (f)

இது குடல்களுக்குள் உண்டாகும் விஷத் தன்மையை நீக்கி அதன் மூலமாய் ஜீரண சக்தியை உண்டு பண்ணி, கிராணி, நாள் பட்ட வயிற்றோட்டம் இவைகளை நிறுத்தும்.

அளவு:—3 முதல் 10 கிரைன். (மாத்திரைகளாகச் செய்து கொடுக்கவும்) "நாப்தால் மாத்திரைகள்"
(f)

செய்யும் விதம்:—

எடுத்துக்கொள்

நாப்தால் (f) கிரைன் 40

டிஸ்பென்ஸிங். ஸிரப். (d) போதுமான அளவு ஒன்றுசேர்

12-மாத்திரைகளாகப் பிரித்துக்கொண்டு தடவல் 1-க்கு 1-மாத்திரை வீதம் நாள் 1-க்கு 3-தடவல் ஆகாரத்துக்கு ½ மணி நேரத்துக்கு முன் கொடுத்து கொஞ்சம் தண்ணீருடன் விழுங்க வேண்டும்.

இந்தச்சமயம் கொடுக்கிற ஆகாரம் லெகுவாய்ச் சீரணமாகக் கூடியதாய் இருக்க வேண்டும். பிறகு ஆகாரத்துக்குப்பின் 'ஈலட்ஸ் (h) பெப்ஸின். மிக்சர்' ஒவ்வொரு தடவலும் நன்றாய்க் குலுக்கிக் கொண்டு இதில் தடவல் 1-க்கு 30-துளி, 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து கொடுக்கவும். இப்படிச் செய்து வந்தால் நாள்பட்ட வயிற்றோட்டம், கிராணி, அன்னத் துவேஷம் இவைகள் தீரும்.

குறிப்பு:—' டிஸ்பென்ஸிங் ஸிரப்'' (d) என்றால் சமபாகம், "மியூஸிலேஜ் அக்கேஷியா'' "கிளிஸேரின்'' (g)

"ஸிம்பிள் ஸிரப்' இந்த மூன்றும் ஒன்றாய்க் கலந்தது.

---

## (119) நக்ஸ். வாமிக்கா

### எட்டிக்கோட்டை

இது கசப்புள்ள, விஷமான கொட்டை

குணம்:—டானிக்

அளவு:—1 முதல் 4 கிரைன் (பொடி பண்ணின தூள்) ஆனால் இவ்விதமாய் உபயோகப்படுத்தாமல் மாத்திரை ரூபமாகவும், திராவக ரூபமாகவும் விசேஷமாய் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

### (1) எக்ஸ்ட்ராக்ட். நக்ஸ்வாமிக்கா

அளவு:—¼ முதல் 1 கிரைன்

உபயோகம்:—(1) தாதுபலத்திற்கு:—

எடுத்துக்கொள்.

| | |
|---|---|
| எக்ஸ்ட்ராக்ட். நக்ஸ். வாமிக்கா. கிரைன் | 3 |
| எஸ்ட்ராக்ட். ஜென்ஷன். கிரைன் | 30 |

ஒன்று சேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக்கொண்டு தடவல் 1 க்கு 1 மாத்திரை வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்

(2) மலச்சிக்கலை நீக்கக் கொடுக்கிற "எக்ஸ்ட்ராக்ட். காஸ்காரா. ஸாக்ரடா" வோடு தட

வல் 1-க்கு $\frac{1}{4}$ கிரைன் வீதம் எக்ஸ்ட்ராக்ட். நக்ஸ். வாமிக்கா" வையும் சேர்த்து மாத்திரையாகச் செய்து கொடுக்கலாம்.

**(2) டிஞ்சர். நக்ஸ். வாமிக்கா**

**எட்டிக்கோட்டைத் திராவகம்**

**அளவு:—5** முதல் 15 துளி

**உபயோகம்:—(1)** இதையும் மலச்சிக்கலை நீக்கக்கொடுக்கிற "எக்ஸ்ட்ராக்ட். காஸ்காரா. ஸாக்ரடா, லிக்குவிட்" (g)(d) என்னும் மருந்துடன் தடவல் 1-க்கு (d) 10 துளி சேர்த்து இரவில் 1 பொழுது கொடுக்கலாம்.

(2) தாது நரம்புகளுக்கும் பலம் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர் நக்ஸ் வாமிக்கா | துளி 15 |
| எக்ஸ்ட்ராக்ட். டாமியானா. லிக்குவிட் (d) (d) | துளி 90 |
| ஸிரப். ஸிம்பிள் | டிராம் $1\frac{1}{2}$ |
| இன்பியூஷன். குவாஷியா. சேர்ந்து (f) | அவுன்ஸ் $1\frac{1}{2}$ |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

## (120) நார்க்கோட்டைன்

இது "அபினி" லிருந்து எடுக்கப்படுகிறது. ஆனால் "அபினை" ப்போல் மயக்கத்தையா வது தூக்கத்தையாவது உண்டு பண்ணுகிற தில்லை

**உபயோகம்:**—"கோய்னு" "ஆர்ஸனிக்" கொடுத்தும் நிற்காத மலைக்காய்ச்சல், குளிர் காய்ச்சல்களுக்கும் "ஆண்டிபைரின்" கொடுத்தும் நிற்காத மண்டையிடியை நிறுத்தவும் தடவல் 1 க்கு 2 முதல் 4 கிரைன் நாள் 1 க்கு 4 தடவல் கொடுக்கலாமெனத் தீர்மானிக்கிறார்கள்.

---

## (121) ஓப்பியம்

### அபின்

**குணம்:**—நார்க்கோட்டிக்

**அளவு:**—½ முதல் 2 கிரைன்

### (1) லினிமேன்ற். ஓப்பியம்

**செய்யும்விதம்:**—சரிபாகம் "லினிமேன்ற், ஸப்போனிஸ்" "டிஞ்சர் ஓப்பியம்" இந்த இரண்டும் ஒன்றாய்க் கலந்தது.

**உபயோகம்:**—இதை வெளிப்பிரயோகமாக, வாத உளைச்சல், இடுப்புவலி, இவைகளுக்கு வலி உள்ள இடத்தில் நன்றாய் அழுத்தித் தேய்க்கவும். நாள் 1 க்கு 2 அல்லது 3 தடவல் தேய்க்க

ளாம். தைலம் தேய்த்தவர்கள் கையை நன்ருய்ச் சுத்தம் செய்யவேண்டும்.

(2)பல்விஸ்.கிரிட்டா. அரோமெட்டிக் கம். ஓப்பியம். 40 கிரைன் மருந்தில் 1 கிரைன் "அபின்" இருக்கிறது.

**குணம்:—(1) கார்மினேட்டிவ் (2) ஆஸ்டிரிஞ்சென்ற்**

**அளவு:—10 முதல் 40 கிரைன்**

**உபயோகம்:—** வயிற்றழைச்சல், கடுப்பு இவைகளுக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

பல்விஸ். கிரிட்டா. அரோமேட்டிக். கம் ஓப்பியம். கிரைன் 45

பிஸ்மத் ஸப். நைட்ரஸ் கிரைன் 15

(b) (b)

ஒன்றுசேர்

3 பொட்டணமாக மடித்துக்கொண்டு தடவல் 1 க்கு 1 பொட்டணம் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் தேனில் கலந்து கொடுக்கவும்

**(3) பல்விஸ். இப்பிக்காக்கோ.**

இதற்கு "டோவர்ஸ் பவுடர்" என்னும்
(d) (d)
பெயர்.

10 கிரைன் மருந்தில் 1 கிரைன் "அபின்" இருக்கிறது.

**அளவு:—5 முதல் 15 கிரைன்**

உபயோகம்:—இதையும் வயிற்றழைச்சலுக்குக் கொடுக்கலாம். வயிற்றழைச்சலுக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

டோவர்ஸ். பவுடர். கிரைன் 15
(d) (d)
காலிக். ஆஸிட், கிரைன் 15
(g) (d)

ஒன்றுசேர்

3 பொட்டணமாக மடித்துக்கொண்டு தடவல் 1 க்கு 1 பொட்டணம் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும். "பார்லிமாவு" கஞ்சியில் பால் சேர்த்துக் கொடுக்கவும்.

(4) பல்விஸ். கைநோ. கோ

20 கிரைன் மருந்தில் 1 கிரைன் "அபின்" இருக்கிறது.

குணம்:—ஆஸ்டிரிஞ்சென்ற்

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—இதையும், வயிற்றழைச்சல் மூலத்தால் ரத்தம்போகுதல் இவைகளை நிறுத்தக் கொடுக்கலாம்.

(5) டிஞ்சர். காம்பர். கோ
(f)

1 அவுன்ஸ் மருந்தில் 2 கிரைன் "அபின்" இருக்கிறது,

குணம்:—(1) அனோடைன் (2) எக்ஸ்பெக்டோரேன்ற்

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—தொண்டைப்புகைச்சலை நிறுத்த:—

எடுத்துக்கொள்

டிஞ்சர் காம்பர். கோ. துளி 60
(f)
ஸோடா. பை கார்ப். கிரைன் 30
(d) (b) (b)
வைனம். இப்பிக்காக். துளி 30
ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

மிக்சர் செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் விதம் நாள் 1க்கு 3 தடவல் கொடுக்கவும்.

## (6) டிஞ்சர் ஓப்பியம்

### அபின் திராவகம்

இதற்கு "லாடனம்" என்றும் பெயர். 15
(d)
துளி மருந்தில் 1 கிரைன் "அபின்" இருக்கிறது.

குணம்;—(1) நார்க்கோடிக் (2) அனோடைன்
(d)

அளவு:—5 முதல் 15 துளி (அடுத்தடுத்துக் கொடுக்க) 20 முதல் 30 துளி (ஒரே தடவல் கொடுக்க)

உபயோகம்:—(1) இதை இரவில் தூக்கம் வராத வியாதியஸ்தர்களுக்குத் தூக்கம் உண்டுபண்ணக் கொடுக்கலாம். ஆனால் இது மலத்தைக் கட்டும்.

(2) காதுக்குத்து, வலி இவைகளுக்கு:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர். ஒப்பியம். | துளி 10 |
| கிளிஸெரின். | துளி 10 |

(g)

ஒன்றுசேர்

நன்ருய் இந்த இரண்டையும் ஒன்று சேர்த்துக்கொண்டு குத்து, வலியுள்ள காதுக்குள் ஊற்றிப் பஞ்சுவைத்து அடைத்து வைக்கவும்.

**(7) அங்குவன்டம். காலா. கம். ஒப்பியம்**

(g)

| | |
|---|---|
| செய்யும்விதம்:—மாயக்காய்த்தூள் | கிரைன் 120 |
| வாஸலீன் | அவுன்ஸ் 1 |
| ஓப்பியம் | கிரைன் 45 |

இந்த மூன்றையும் ஒன்று சேர்த்துக் களிம் பாகச் செய்து கொள்ளவும்.

உபயோகம்:—இதை வெளிப்பிரயோகமாக மூல முளையில் ரெத்தம்படுதலோடு வலி வேதனையும் இருந்தால் உபயோகப்படுத்தலாம்.

குறிப்பு:—"அபின்" சேர்ந்த மருந்துகளை ஒரு வயசுக்குள்பட்ட குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது.

## (122) ஓடால்

(d)

இதில் கொஞ்சம் எடுத்து ஒரு தமிளர் தண்ணீரோடு, கலந்து சொத்தைப்பல், குழி விழுந்த பல் இவைகளில் உண்டாகிற புழுக்களைக் கொன்று அதன் மூலமாய் அவைகளால் உண்டாகிற பல் குடைச்சல், பல்வலி இவைகளைக் குணமாக்க வாய் கொப்பளிக்க உதவும்.

---

## (123) பாராபினம். மோலி

(f)

அல்லது

வாஸலேன்

இது வெண்மையாகவாவது அல்லது மஞ்சள் நிறமாகவாவது இருக்கிற களிம்பு.

உபயோகம்:—(1) இதைப் பருக்கள், வேனல் கொப்பளங்கள், தீப்பட்ட புண்கள், கரப்பான், பொடிப்புகள் இவைகளுக்கு மேல் தடவலாம். அல்லது "போம்மேட். வாஸலேன்" என்பதை

(d)

யாவது மேல் காட்டியவைகளுக்கு உபயோகப்படுத்தலாம்.

(2) மற்றக் களிம்புகள் செய்வதற்கும் இது துணைக்களிம்பாக இருக்கிறது.

(3) மேகப்புண்ணுக்கு 1 டிராம் "வாஸலேன்" இதோடு 2 துளி "கார்பாலிக் ஆஸிட்"

(d)

சேர்த்து நன்றாய் "போலஸ். கத்தியால்" "ஸிலாப்" பில் தேய்த்துக்கொண்டு இதில் கொஞ்சம் எடுத்து காலை மாலை தடவி வைத்திருந்து பின்பு "கார்பாலிக். ஸோப்" கொண்டு சுத்தம் செய்துவரவும்.

---

## (124) பாரால்டி ஐடம்.
(d) (h)(d)

இது தெளிவானதும், அருவருப்பான வீச்சமுள்ளதும், தண்ணீர் போன்ற மருந்து.

குணம்:—இப்னுடிக்
(h)

அளவு—½ முதல் 2 டிராம்

உபயோகம்:—இதைத் தூக்கம் வாாதவர்க்குத் தூக்கம் உண்டுபண்ணக் கொடுக்கலாம்.

இது இருதயத்தை ஒன்றும் சேட்டை செய்யாது.

இதை முக்கியமாய்ப் பயித்தியக்காரர்களுக்குத் தூக்கம் உண்டுபண்ணக் கொடுக்கலாம். மற்றும் வேறு எந்தக்காரணத்தினாலும் தூக்கம் வாாமல் இருந்தாலும் தூக்கம் உண்டு பண்ணக் கொடுக்கலாம்.

இதன் அருவருப்பான வீச்சத்தையும், ருசியில்லாம லிருப்பதையும் மாற்ற, "ஆக்குவா. மெந்தா. பிப்" "ஸிரப். ஸிம்பிள்" இந்த இரண்டும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

தூக்கம் உண்டுபண்ண:—

எடுத்துக்கொள்

பாரால்டி. ஐடம். டிராம் 1
(d) (h)(d)

ஸிரப். ஸிம்பிள் டிராம் 1

ஆக்குவா மெந்தா பிப். சேர்த்து அவுன்ஸ் 1

ஒன்றுசேர்

மிக்சர் செய்

இதை ஒரே தடவலாகப் படுக்கைக்குப் போகும்போது கொடுக்கவும்.

---

## (125) பெப்ஸினம்.

பெப்ஸின்

இது மஞ்சள் நிறமும் தவிட்டு நிறமுமான லேசான தூள்.

குணம்:—டைஜெஸ்டிவ்
(d)

அளவு:—5 முதல் 10 கிரைன்

2 முதல் 5 கிரைன் (பர்காய்ன்ஸ் - பெப்
(b)(g)
ஸின். போர்ஸி. ஆறல்)

உபயோகம்:—நாம் சாப்பிடுகிற ஆகாரத்திலுள்ள "புரோட்டிட்" என்னும் பதார்த்தத்தை (அதாவது
(d)
கடலை, உளுந்து, பருப்பு, பால், முட்டை, மாமிசம் முதலிய சத்துள்ள பதார்த்தத்தை செமிக்கச்செய்ய வயிற்றிலுண்டாகிற 'காஸ்
(g)

ட்ரிக்ஜியூஸ்' இதன் உதவி வேண்டியதிருக் கிறது. இதில் கொஞ்சம் "ஐட்ரோ குளோ ரிக் ஆஸிட்"டும் "பேப்ஸின்", "ரேன்னின்" என இவைகளும் இருக்கின்றன. இவை களில்"பேப்ஸின்' உதவியால்தான் ஆகாரம் வயிற்றிலிருக்கும் நேரம் வரை "புரோட் டிட்' என்னும் பதார்த்தத்தின் கொஞ்ச
(d)
பாகம் செமித்து 'பேப்ட்டோன்' என்ற பதார்த்தமாக மாறுகிறது.

வயிற்றில் ஏதேனும் குற்றம் ஏற்பட்டு 'காஸ் ட்டிரிக் ஜியூஸ்' உண்டாகத் தடைப்பட்டால் அந்தச் சமயம் அஜீரணம் உண்டாகும். அப் பொழுது "பேப்ஸின்" கொடுத்தால் ஜீரண சக்தியை உண்டுபண்ணும்.

குறிப்பு:—நாம் ஒரு தடவல் சாப்பிட்ட ஆகாரம் 1 முதல் 4-மணி நேரம்வரை வயிற்றில் தங்கி இருந்து பின்பு 'கைம்' என்ற பெயரோடு "டியோ
(d)
டினம்" என்ற சிறு குடலுக்குள் அனுப்பப்
(d)
படுகிறது.

ஜீரண சக்தியை உண்டுபண்ணி வயிற்றி லுண்டாகிற இரைச்சல் முதலிய துர்க்குணங் களை மாற்ற:—

எடுத்துக்கொள்

பர்காய்ன்ஸ். பெப்ஸின். போர்ஸி.

(b)(g) கிரைன் 6

பிஸ்மத். ஸப். நைட்ரஸ் கிரைன் 10
(b) (b)

ஸோடா. பைகார்ப் கிரைன் 10
(d) (b) (b)

ஒன்றுசேர்

3 பொட்டணமாக மடித்துக்கொண்டு ஒவ்வொரு ஆகாரத்துக்கும் சற்றுமுன் ஒரு பொட்டணம் வாயில்போட்டு உமிழ்நீரோடு சேர்த்து விழுங்கிக் கொஞ்சம் தண்ணீர் குடிக்க வேண்டும். பிறகு ஒவ்வொரு ஆகாரத்துக்குப் பின்னும் கொடுக்க:—

எடுத்துக்கொள்

ஆஸிட். ஐட்ரோ குளோரிக். டில் துளி 15
(d) (h)(d) (d)

டிஞ்சர். ஜென்ஷன். கோ துளி 30

ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 6

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1-அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் ஆகாரம் சாப்பிட்டவுடன் சாப்பிடவும்.

அல்லது

எடுத்துக்கொள்

பெப்ஸின். போர்ஸி கிரைன் 6

ஆஸிட். ஐட்ரோ குளோரிக். டில் துளி 20
(d) (h)(d) (d)

டிடிஞ்சர். நக்ஸ்வாமிக்கா துளி 15

டிஞ்சர். ஜென்ஷன். கோ துளி 60
ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3

மிக்சர் செய்

ஒன்றுசேர்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரம் சாப்பிட்டவுடன் சாப்பிடவும்.

அல்லது

எடுத்துக்கொள்

ஈலட்ஸ். பெப்ஸின். மிக்சர் டிராம் 1½
(h)
ஆக்குவா சேர்ந்து அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1-அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3-தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

அல்லது

எடுத்துக்கொள்

(4) "பேப்ஸின் ஒயின்" இதில் தடவல் 1 க்கு ¼ அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரம் சாப்பிடுகிறதற்கு சற்றுமுன் சாப்பிடவும்.

---

## (126) பெருவெஸட்டின்

(f)

இது வெண்மையானதும், ருசி யாதொன்றும் இல்லாத மினுமினுப்பான தூள்.

"பேஞ ஸேட்டின்" "ஆன்டிபைரின்,"
(b)
"ஆன்டிபெப்ரின்" ஆகிய இவைகள் மூன்
(f)(b)
றும் ஒரே குணங்கள் உள்ளவைகளா யிருந்த போதிலும் "பேஞஸேட்டின்" ஒன்றையே
(f)
விசேஷமாய் உபயோகப்படுத்தி வருவது நலம். ஏனெனில் இவைகள் மூன்றில் "பேஞ ஸேட்டினு" க்கு மற்ற இரண்டை
(f)
யும் போல் இருதயத்தைப் பலயீனப்படுத்து கிற செய்கை அவ்வளவு அதிகமில்லே. ஆகை யால் இவைகள் மூன்றில் யாதேனும் ஒன்றை அதற்கு ஏற்பட்டிருக்கிற அளவில் உபயோகப் படுத்தும்போதெல்லாம் தடவல் 1 க்கு 3 கிரைன் "காபின் ஸிட்ரஸ்"
(f)
சேர்த்துக் கொடுக்கவும்.

**குணம்:—(1)** அஞல் ஜெனிக் (2) ஆன்டிபை ரெட்டிக்

**அளவு:—5** முதல் 10 கிரைன்

**உபயோகம்:—(1)** மண்டை இடியை நிறுத்த:—

எடுத்துக்கொள்

பெஞ ஸெட்டின் கிரைன் 8
(f)
காபீன். ஸிட்ரஸ் கிரைன் 3
(f)
ஸோடா. பை கார்ப் கிரைன் 3
(d) (b) (b)

ஒன்றுசேர்

ஒரே தடவலாக வாயில் போட்டு உமிழ்நீரோடு சேர்த்து விழுங்கி கொஞ்சம் வெந்நீர் குடிக்கவும். 1-மணிநேரம் கழித்து சுடச்சுட காப்பி சாப்பிடலாம்.

மறுபடியும் "பேஞ ஸெட்டின்" கொடுக்க
(f)
வேண்டுமானால் 8 மணிநேரம் கழிக்க வேண்டும்.

(2) காய்ச்சலில் "டெம்பரேச்சர்" 102-டிகிரிக்குமேல் இருக்கையில் காய்ச்சல் சூடு தணிய:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பேஞ ஸெட்டின் (f) | கிரைன் 8 |
| காபீன். ஸிட்ராஸ் (f) | கிரைன் 3 |

ஒன்றுசேர்

ஒரே தடவலாக வாயில்போட்டு 1 அவுன்ஸ் வெந்நீர் கொடுக்கவும்.

வேர்வை உண்டாகிக் காய்ச்சல் தணியும் ஆனால் தணிந்த காய்ச்சலை மறுபடியும் வராமல் இருக்கச்செய்கிற சக்தி இதற்கு இல்லை. ஒருதரம் தணித்த காய்ச்சலை 4 மணி நேரம் வரைக்குந்தான் மேல்போக வொட்டாமல் நிறுத்தி வைத்திருக்கும். அந்தச் சமயம் பார்த்து "தர்மாமிட்டர்" வைத்துப்பார்த்துக் கொண்டு காய்ச்சல் "100 டிகிரிக்கும்" குறையாமல் இருந்தால் "டயா போ ரெட்டிக் மிக்
(d) (f)

சர்" கொடுக்கவும். காய்ச்சல் 99 டிகிரிக்கு இறங்கினவுடன் 'கோயினு மிக்சர்' கொடுக்கவும். இந்த மிக்சர்களைச் செய்யும் விதத்தை இப்புஸ்தகத்தின் மூன்றாவது பாகத்தின் முதல் பிரிவில் பார்த்துக்கொள்ளவும்.

---

## (127) பாஸ்பரஸ்
(f) (f)

தீமுருகல் பாஷாணம்.

**குணம்:—(1) டானிக் (2) ரேஸ்டோரேட்டிவ்**

**அளவு:—1/100** முதல் **1/20** கிரைன்

**உபயோகம்:**—இதைத் தனிமையாக இவ்வளவு குறைந்த அளவில் மாத்திரைகளாகச் செய்து கொடுக்க வேண்டிய திருப்பதினாலும், மாத்திரைகள் செய்யும்போது "பாஸ் பரஸ்" தீப்பிடித்து
(f) (f)
எரிந்து விடாமல் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய திருப்பதாலும், இதைத் தனிமையாக உபயோகப்படுத்துவதைவிட, தாது பலயீனத்தை மாற்ற இதுவும் இன்னும் மற்ற மருந்துகளும் சேர்ந்திருக்கிற "நேர்வைன் டானிக்குகளாகிய:—

(1) டாக்டர் லாலார்ஸ். பாஸ் போடைன்"
(d) (f) (f) (d)

(2) "பெல்லோஸ். காம்பவுண்ட். ஸிரப்"
(f)

(3) "அக்ஸிலிஸ். நெர்விகர். ஸிரப். வித் பார்
(h)) (g) (f)

மேட்ஸ்"

(4) "டாமியானு டைன்"
(d) (d)

(5) "டாமியானு எலக்ஸியர்"
(d)

(6) "பைனின். அமரா"
(b)

(7) "பைனே. ஐப்போபாஸ்பைட்ஸ்"
(b) (h) (f) (f)

(8) ஈஸ்ட்டன்ஸ். ஸிரப்"

இவைகளில் யாதேனும் ஒன்றை அந்தந்தப் பாட்டிலில் எழுதி யிருக்கும் பிரகாரம் உப யோகப்படுத்தவேண்டிய விதத்தைக் கவ னித்து உபயோகப்படுத்தவும்.

---

## (128) பெனு வேஸானம்.
(f) (z)

இது வெண்மையான, வாசனை யாதொன்று மில்லாத கசப்பான தூள்.

இதற்கு "ஆன்டி பைரின்" என்றும் பெயர்.

குணம்:—பெனுஸேட்டினுக்குள்ளது
(f)

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்::—இதையும் "பெனுஸேட்டினை"ப் போலவே சாதாரண மண்டை இடிக்கும், மலைக்காய்ச் சலில் உண்டாகும் மண்டை இடியை நிறுத் தவும், காய்ச்சல்களில் சூடு தணியவும் தட

வல் 1 க்கு 3 கிரைன் "காபின் ஸிட்ரஸ்"
(f)
என்னும் மருந்தோடு சேர்த்துக் கொடுக்கவும்.

## (129) பைஸிஸ். லிக்குவிட்.
(d)

தார் எண்ணெய்

### (1) அங்குவன்டம். பைஸிஸ். லிக்குவிட்
(d)

தார் எண்ணெய்க் கழிம்பு

**செய்யும் விதம்:**—1 அவுன்ஸ் மஞ்சண மெழுகை உருக்கி அதோடு 2½ அவுன்ஸ் தார் எண்ணெயை ஒன்று சேர்த்து இளக்கி குளிர்ந்தவுடன் ஒன்று சேரும்படி கிண்டிக்கொள்ளவும்.

**உபயோகம்:**—காலிலுள்ள பித்த வெடிப்புக்குப் போடலாம்.

## (130) பிளம்பை. ஆஸிட்டஸ்
(b)

லெட் ஆஸிட்டேட்.
(d)

இதற்கு "சுகர். ஆப். லெட்" என்றும்
(Sugar) (f) (d)
பெயர்.

**குணம்:**—ஆஸ்டிரிஞ்சென்ற்

**அளவு:**—1 முதல் 5 கிரைன் (மாத்திரையாகச் செய்து கொடுக்கவும்.)

**குறிப்பு:**—இதை தனிமையாக மாத்திரையாகச் செய்து கொடுப்பதைவிட, ஒவ்வொரு மாத்திரையி லும் ½ கிரைன் "அபின்" சேர்த்துக் கொடுக் கலாம்.

**உபயோகம்:**—(1) 1 அவுன்ஸ் தண்ணீரில் 5 கிரைன் "லெட். ஆஸிட்டேட்" கரைத்து மேகத்துக்கும், நாள்பட்ட
(d)
மேகத்துக்கும் "சிரிஞ்சு" பண்ணலாம்.

(1) லிக்கர். பிளம்பை. ஸப் ஆஸிட்டேட்டிஸ்
(b) (b)
டைலியூட்டஸ்
(d)
இதற்கு "கௌலார்ட்ஸ. லோஷன்" என்று
(g) (d)
பெயர்.

**செய்யும் விதம்**—லிக்கர். பிளம்பை. ஸப் ஆஸிட்டேட்டிஸ்.
(b) (b)

| | |
|---|---|
| போர்டிஸ் (f) | டிராம் 1 |
| ஆல்கோஹால் | டிராம் 1 |
| டிஸ்டில்ட். வாட்டர். (d) (d) | அவுன்ஸ் 9¾ |

எல்லாம் ஒன்று சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும்.

**உபயோகம்:**—கைகால் முதலிய இடங்களில் அடிபட்டு, அல்லது சுளுக்கினால் வீக்கமும், அதோடு வேதனையும் இருந்தால் மேல் எழுதி யிருக் கிற லோஷனில் 50 துளி "டிஞ்சர் ஓப்பியம்" சேர்த்துக் கொண்டு நன்றாய்க் குலுக்கி வீக்கமுள்ள இடம் பூராவும் "லின்றுத் துணி

யால்'' மேல்படி லோஷனில் மூக்கைச் சுற்றி வைத்து ஈரம் உலர, உலர நனைத்துக்கொண்டே இருக்கவும். வீக்கம் வலி குணமாகிற வரையும் இப்படியே செய்யவும்.

---

## (131) போடோபில்லம். ரெஸின்.

(d) (f)

அல்லது

போடோ பில்லின்.

இது பச்சையும் தவிட்டு நிறமுமான தூள்.

**குணம்:**—கதார்ட்டிக்

**அளவு:**—¼ முதல் 1-கிரைன் (மாத்திரையாகச் செய்து கொடுக்கவும்)

**உபயோகம்:**—தண்ணீராய் மலத்தை வெளியாக்கும். நாள்பட்ட கடுமையான மலச்சிக்கலை நீக்கக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| போடோ பில்லின். (d) (f) | கிரைன் 3 |
| காலோமல். | கிரைன் 18 |
| பில். காலோஸிந்த். காம்பவுண்ட் (d) | கிரைன் 20 |
| எக்ஸ்ட்ராக்ட். அயோஸியாமல் | கிரைன் 18 |

ஒன்றுசேர்

12 மாத்திரைகளாகப் பிரித்துக் கொண்டு இரவில் படுக்கைக்குப் போகும்போது 1 மாத்திரை விழுங்கி அதற்குமேல் பாலாவது தண்

ணீராவது குடிக்கவும். அவசியமானல் மட்டும் 2 மாத்திரைகள் ஒன்றன்பின் ஒன்ருய் விழுங்கலாம்.

(1) டிஞ்சர். போடோபில்லின்.
(d)(f)

குணமும், உபயோகமும்:—போடோ பில்லினுக்குள்ளது
(d) (f)

அளவு:—5 முதல் 15 துளி

---

## (132) லிக்கர். பொட்டாஸ்.

குணம்: அன்டாஸிட்
(d)

அளவு:—10 முதல் 30 துளி

உபயோகம்:—நீர்ப்பையிலும், நீர்த்தாரையிலும் உண்டாகிற எரிச்சலையும், வேதனையையும் தணிக்கிற குணம் இதற்கு உண்டு. ஆகையால்தான் மேகத்துக்குக் கொடுக்கிற "கோப்பைபா.
(b)
மிக்சரோடு" சேர்த்துக் கொடுக்கப்படுகிறது.

## (133) பொட்டாஸ். ஆவிட்டஸ்.

காற்றுப்பட்டால் தண்ணீராய்ப் போய்விடுகிற மருந்து.

குணம்:—டயூரெட்டிக்
(d)

அளவு:—10 முதல் 60 கிரைன்
10 முதல் 60 துளி (தண்ணீராய் இருந்தால்)

உபயோகம்:—இதை நீர்பிரியக் கொடுக்கலாம்.

## (134) பொட்டாஸ். பைகார்ப்.
(b) (b)

குணம்:—(1) அன்டாஸிட் (2) ஸெடட்டிவ்
(d) (d)

அளவு:—5 முதல் 30 கிரைன்

உபயோகம்:—நீர்க்கடுப்புக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பொட்டாஸ். பைகார்ப் (b) (b) | கிரைன் 30 |
| டிஞ்சர். அயோஸியாமஸ். | துளி 30 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி. | துளி 60 |
| இன்பியூஷன், பக்கு சேர்ந்து (f) (b) | அவுன்ஸ் 3 ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கவும்.

---

## (135) பொட்டாஸ். புரோமைட்
(b) (d)

குணம்:—ஸெடட்டிவ் (2) இப்னுட்டிக்
(d) (h)

அளவு:—5 முதல் 30 கிரைன்

உபயோகம்:—(1) இதை இழுப்பு, காக்கைவலிப்பு, குத்திருமல், இளைப்பு, பயித்தியம், தூக்கமின்மை, மசக்கை வாந்தி, இசிவு, ஜந்நி, சூதகவலி ஒருத்தலை இடி, நரம்புவேதனை, காய்ச்சலில் உண்டாகும் மேல்வலி, அலுப்பு இவைகளுக்கெல்லாம் தடவல் 1 க்கு 10 கிரைன் வீதம் கொடுக்கலாம்.

(2) காக்கை வலிப்புக்குக் கொடுக்க::—

எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| பொட்டாஸ் புரோமைட். (b) (d) | கிரைன் | 30 |
| ஸோடியம் புரோமைட். (d) (b) (d) | கிரைன் | 30 |
| லைக்கர். ஆர்ஸனிக்காலிஸ். | துளி | 6 |
| டிஞ்சர். ஆரன்டி | துளி | 45 |
| ஸ்பிரிட் குளோரோபார்ம் (f) | துளி | 30 |
| ஆக்குவா சேர்ந்து | அவுன்ஸ் | 3 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1-அவுன்ஸ்வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

(3) இரவில் தூக்கம் வாராதவர்களுக்கு ஒரே தடவல் மட்டும் கொடுத்து தூக்கம் உண்டு பண்ண:—

எடுத்துக்ககாள்

| | | |
|---|---|---|
| பொட்டாஸ். புரோமைட். (b) (d) | கிரைன் | 30 |
| டிஞ்சர். அயோஸியாமஸ் | துளி | 20 |
| ஸிரிப். ஆரன்டி | துளி | 30 |
| ஆக்குவா. சேர்ந்து | அவுன்ஸ் | 1 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

ஒரே தடவல் படுக்கைக்குப் போகும் போது கொடுக்கவும்.

குறிப்பு:—(1) "பொட்டாஸ். புரோமைட்" நீடித்த காலம் கொடுக்கும்படி நேரிட்டால் தேகத்தில் கொப்பளம் உண்டாகாமல் இருக்க தடவல் 1 க்கு 2 துளி "லைக்கர். ஆர்ஸனிக்காலிஸ் சேர்த்துக் கொடுத்துவரவும்.

(2) தேகத்தில் ரத்தப்பசை இல்லாத சோகைக் குணம் உள்ளவர்களுக்கு "போட்டாஸ் புரோமைட்" அடுத்தடுத்துக் கொடுக்கக் (b) (d) கூடாது.

## (136) பொட்டாஸ். கார்போனஸ் (b)

குணம்:—(1) அன்டாஸிட் (2) ஸெடட்டிவ் (3) டயூரேட்டிக் (d) (d) (d)

அளவு:—5முதல் 20 கிரைன்

## (137) பொட்டாஸ். குளோரஸ்

குணம்:—டயூரேட்டிக்

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—வாய்ப்புண்ணுக்கு வாய் உறசிக் கொப்பளிக்க:—

எடுத்துக்கொள்

பொட்டாஸ். குளோராஸ் கிரைன் 30
கம். அக்கேஷியா. போதுமான அளவு
(g)

டிஞ்சர். மர். டிராம் 1
ஆலம். கிரைன் 15
டிஞ்சர். லவண்டர். கோ துளி 60
ஆக்குவா சேர்ந்து அவுன்ஸ் 6
ஒன்றுசேர்

இதை இரண்டு தடவலாகக் கொஞ்சம் கொஞ்சமாய் வாயில் ஊற்றி நன்றாய் உறசி, உறசிக் கொப்பளிக்கவும்.

---

## (138) பொட்டாஸ். ஸிட்ராஸ்.

காற்றுப்பட்டால் தண்ணீராய்ப் போகக் கூடிய வெண்மையான தூள்.

குணம்:—(1) டயாபோரெட்டிக் (2) ரெபிரிஜேரென்ற்
(d) (f) (f)

அளவு:—10 முதல் 40 கிரைன்

உபயோகம்:—இதற்கு மலத்தைக் கொஞ்சம் நெகிழ்த்தி யாய்ப் போக்கக்கூடிய குணமும் உண்டு இதை "பொட்டாஸ். ஆஸிட்டஸ்" உடன் சேர்த்து நீரைப் பிரிக்கவேண்டிய சந்தர்ப் பத்தில் கொடுக்கலாம்.

---

## (139) பொட்டாஸ். அயோடைட்.
(d)(d)

வாத உப்பு

குணம்:—ஆல்ட்ட ரேட்டிவ்

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—(1) 1 கிரைன் கூடப்பிடிக்காதவர்களுக்கு அளவை அதிகப்படுத்தி தடவல் 1 க்கு 5 அல்லது 6 கிரைன் கொடுத்தால் ஏற்றுக் கொள்ளுகிறது.

(2) பொட்டாஸ். அயோடைட் சாப்பிடும்
(d)(d)
போது ஜலதோஷம் கொள்ளும். இதை நிறுத்த தடவல் 1 க்கு 10 துளி "ஸ்பிரிட். அமோனியா அரோமேட்டிக்" சேர்த்துச் சாப்பிடவும். இப்படிச் சேர்த்துக் கொடுத்தும் ஜலதோஷம் மும்மரமாய் இருந்தால் உடனே "பொட்டாஸ் அயோடைட். மிக்
(d)(d)
சரை நிறுத்திவிட வேண்டும். ஜலதோஷம் குணமானபின் மறுபடியும் ஆரம்பிக்கவும். ஏற்றுக்கொள்கிற வரைக்கும் இடை இடையே நிறுத்தி, நிறுத்திச் சாப்பிடவும்.

(3) இதற்குத் தாதுவைக் குறைக்கும் குணம் இருப்பதால் "பொட்டாஸ் அயோடைட்.
(d)(d)
மிக்சர்" நீடித்துச் சாப்பிட வேண்டிய காலத்தில் தடவல் 1-க்கு 5 துளி "டிஞ்சர் நக்ஸ்வாமிக்கா" வாவது அல்லது 2 துளி

"லைக்கர். ஸ்ட்ரிக்னைன். ஐட்ரோ குளோ
(h)(d)
ரைட்'' ஆவது சேர்த்துக் கொள்ளவும்
(d)

4-வாரத்துக்குக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

பொட்டாஸ். அயோடைட் கிரைன் 15
(d)(d)
(1) டிஞ்சர். ஜென்ஷன். கோ. துளி 60
ஸ்பிரிட். அமோனியா. அரோமேட்டிக் துளி 30
ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3
ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

குறிப்பு:—மேல்படி மிக்சரில் "டிஞ்சர்.ஜென்ஷன்.கோ'' வுக்கும்'' ஆக்குவா'' வுக்கும் பதிலாக 3 அவுன்ஸ் "இன்பியூஷன். சிரட்டா'' =(நிலவேம்புக்
(f)
கஷாயம்) சேர்த்துக் கொள்ளலாம்

வாதத்தோடு மேகப்புண்கள், நார்சீர்க் கட்டிகள், கண்டமாலை முதலிய வியாதிகளும், ரத்தமும் அசுத்தமாய் இருந்தால், மேலே சொல்லிய 3 அவுன்ஸ் "பொட்டாஸ். அயோடைட் மிக்சரில் "90 துளி "லைக்கர் ஐட்ரார்
(d)(d)
ஜிரி. பேர்க்குளோரைட் சேர்த்துக்கொள்ள
(d)

வும். ரத்தம் சுத்தமாகும்வரை நீடித்துச் சாப்பிடவும்.

அல்லது

எடுத்துக்கொள்

பர்காய்ன்ஸ். அயோடைஸ்ட். ஸார்ஸபா
(b)(g) (d) (d)
ரில்லா டிராம் 3

(2) ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்,

அல்லது

எடுத்துக்கொள்

ஸிரப். டிரைபோலியம். காம்பவுண்ட்.
(f) (d)
டிராம் 3

(3) ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ் 3

ஒன்று சேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் கொடுக்கவும்.

(5) குழந்தைகளுக்குப் பால் கொடுக்கிற பெண் களுக்கு "பொட்டாஸ். அயோடைட்"
(d)(d)
கொடுத்து வந்தால் பாலை வற்ற வைக்கும். ஆனால் "பொட்டாஸ் குளோரஸ்". கொடுத்தால் பாலை அதிகப்படுத்தும்.

## (140) பொட்டாஸ். நைட்ரஸ்.

வெடியுப்பு

குணம்:—(1) டயூரெட்டிக் (2) டயாபோரெட்டிக்
(d) (d) (f)

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—இதைக் காய்ச்சலுக்கு "டயாபோ ரெட்டிக் (d) (f) மிக்சர்" செய்கிறதில் சேர்க்கப்படுகிறது. இதற்கு நீரைப் பிரிக்கிற குணமும் இருக்கிறது.

எடுத்துக்கொள்

நீர் பிரிய:—

| | |
|---|---|
| பொட்டாஸ். நைட்ரஸ் | கிரைன் 30 |
| ஸ்பிரிட். ஈதர். நைட்ரோஸி | துளி 60 |
| ஸ்பிரிட். ஜூனிப்பர் | துளி 45 |
| டிஞ்சர். டிஜிடாலிஸ் (d) | துளி 15 |
| இன்பியூஷன். பக்கு சேர்ந்து (f) (b) | அவுன்ஸ் 3 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

## (141) பொட்டாஸ். பெர்மாங்கனஸ்

குணம்:—(1) ஆன்டிஸெப்டிக் (2) எம்மனகாக்
(g)

அளவு:—1 முதல் 3 கிரைன்

உபயோகம்:—(1) வாய்க்குள்ளும், பல் ஈருகளிலும், புண், ரணம் இவைகள் உண்டாகி அதன் மூல மாய் வீச்சம் ஏற்பட்டிருக்கையில் வாய் கொப்பளிக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பொட்டாஸ் பெர்மாங்கனஸ் | கிரைன் 1 |
| டிஸ்டில்ட். வாட்டர். (d) (d) | அவுன்ஸ் 5 |

ஒன்றுசேர்

வாய் உறசிக் கொப்பளிக்கவும். நாள் 1-க்கு 2 தடவல் இப்படிச் செய்யவும்.

(2) அழுகப்புண் ரணம் இவைகளை 1 அவுன்ஸ் "டிஸ்டில்ட். வாட்ட' ருக்கு 1/8 கிரைன்
(d) (d)
வீதம் கரைத்து போதுமான "லோஷன்" செய்து கொண்டு கழுவி சுத்தம் செய்ய லாம்.

(3) கிணற்றுத் தண்ணீரிலுள்ள விஷப் பூச்சி களைக் கொன்று தண்ணீரைச் சுத்தமாக்க ஒரு கிணறுக்கு ¼ அவுன்ஸ் "பொட்டாஸ் பெர்மாங்கனஸ்" இதை 2 அவுன்ஸ் "டிஸ்டி
(d)
ல்ட் வாட்டரில்" கரைத்து கிண்ற்றுக்குள் ஊற்றவும்.

(4) மேகவியாதியின் ஆரம்பத்தில் 1 அவுன்ஸ் "டிஸ்டில்ட். வாட்டருக்கு" ½ கிரைன்
(d) (d)
வீதம் கரைத்து நீர்த்தாரைக்குள் ஸிரிஞ்சு பண்ணலாம்.

(5) நாள்பட்ட மேகத்திற்கு 1 அவுன்ஸ் "டிஸ்டில்ட். வாட்டருக்கு" 1 கிரைன் வீதம்
(d) (d)
கரைத்து ஸிரிஞ்சுபண்ணலாம்.

(6) பாம்புக்கடியின் விஷத்தை முறிக்கக் கடிவாயில் "போட்டாஸ். பேர்மாங்கனஸ்" பொடிபண்ணித் தேய்க்கலாம். முதலில் கடிவாயிலிருந்து கொஞ்சம் மேல்தள்ளி அவ்விடத்தில் ஒரு கயிற்றால் அல்லது துணியால் கடியுண்டவுடன் இறுக்கிக்கட்டி, பிறகு கடிவாயைக் கொஞ்சம் கீறி ரத்தத்தை வெளி யாக்கிக்கொள்ளவும்.

(7) சூதகக் கட்டுப்பாட்டை நீக்கவும் சொற்பமாய்ப்படுகிற சூதகத்தை சரியான அளவில் படும்படியாகவும் செய்ய, 2 கிரைன் அளவில் மாத்திரையாகச் செய்து கொடுக்கலாம். என்றாலும் இது அவ்வளவு பிரயோஜனமுள்ளதென்று பூராகவும் நம்பக்கூடவில்லை.

குறிப்பு:—"போட்டாஸ். பேர்மாங்கனஸ். லோஷன்" செய்யும்போதெல்லாம். "டிஸ்டில்ட் வாட்ட
(d) (d)
ரில்" செய்து கல் கார்க்குக் குப்பியில், காற்றுப் போகாதபடி நன்றாய் அடைத்து வைத்திருக்கவேண்டும்.

## (142) பொட்டாஸ். டார்ட்ரஸ்.

ஆஸிடஸ்
(d)

*அல்லது*

கிரீம். ஆப். டார்ட்டார்
(f)

*இதற்கு "முந்திரிப்பழ உப்பு" என்றும் சொல்வதுண்டு. இதிலிருந்துதான்* "டார்ட் டாரிக். ஆஸிட்" *என்னும் புளிப்பு செய்யப்*
(d)
*படுகிறது.*

குணம்:—(1) கதார்ட்டிக் (2) டயூரெட்டிக்
(d)

அளவு:—20 *முதல்* 60 கிரைன்

2 *முதல்* 4 டிராம் (*மலம் தண்ணீராய்ப் போக*)

---

## (143) குவாஷியா. லிக்னம்
(g)

*இது கசப்புள்ள பட்டை. இது இரும்பு சேர்ந்த மருந்தோடு சேர்த்துக் கொடுக்கலாம்.*

(1) இன்பியூஷன். குவாஷியா
(f)

குவாஷியா பட்டைக் கஷாயம்

செய்யும் விதம்:—10-*அவுன்ஸ் "குளிர்ந்த தண்ணீரில்* 44-கிரைன் "குவாஷியாபட்டை" *யைப்போட்டு*

¼-மணி நேரம் வைத்திருந்து பின்பு வடிகட்டிக்கொள்ளவும்.

குணம்:—டானிக்

அளவு:—½ முதல் 1 அவுன்ஸ்

உபயோகம்:—(1) அன்னத் துவேஷத்தில் ஜீரணக் கருவிகளுக்குப் பலத்தைக்கொடுத்து ஜீரண சக்தியை உண்டு பண்ணக் கொடுக்கலாம்.

(2) ஆசனத்துக்குள் சிரிஞ்சு மூலமாய் செலுத்தினல் பொடிக் கீரைப் பூச்சிகளைக் கொன்றுவிடும்.

(2) டிஞ்சர். குவாஷியா.

அளவு:—½ முதல் 1 டிராம்

இதை "இன்பியூஷன் குவாஷியா" (f) வுக்குப் பதிலாக உபயோகப் படுத்தலாம்.

---

## (144) கொய்னைன். ஸல்பஸ். (f)

இது கசப்புள்ள, வெண்மையான, லேசான தூள்.

குணம்:—(1) டானிக் (2) ஆண்டிபீரியாடிக் (d) (3) ஆண்டிநியூரால்ஜிக்

அளவு:—1 முதல் 10 கிரைன்

உபயோகம்:—(1) கொய்னவைக் குறைந்த அளவில் அதாவது தடவல் 1-க்கு ½கிரைன் வீதம், "அயம்,"

"எட்டிக்கோட்டை" இவைகள் சேர்ந்த மருந்துகளோடு சேர்த்துக் கொடுத்து வந்தால் ஜீரண சக்தியை உண்டுபண்ணியும், தாது பலத்தையும் கொடுக்கும்.

"ஈஸ்டன்ஸ். ஸிரப்பிலும்" "பைனின். அமராவிலும்" இப்படிக் குறைந்த அளவில் "கோய்னு" சேர்ந்திருப்பதினுலேயே பசியை உண்டுபண்ணவும், தாது பலத்தைக் கொடுக்கவும் மேல் சொன்ன மருந்துகளில் யாதேனும் ஒன்றை உபயோகப்படுத்தலாம்.

(2) குளிர்சுரம், முறைசுரம் இவைகளுக்கு சுரம் விட்டிருக்கும் போது தடவல் 1-க்கு 4 கிரைன் "கோய்னு"வை 5 துளி "ஆஸிட் (d) ஸல்பியூரிக். (f) டில்" (d) சேர்த்துக் கரைத்து அதோடு 1 அவுன்ஸ் தண்ணீர் சேர்த்து நாள் 1-க்கு 3 தடவல் இப்படி கொடுக்கவும்.

(3) மற்றக் காய்ச்சல் அதிகமான டிகிரியில் இருந்து இறங்கி 99 டிகிரிக்கு வந்திருக்கும் போது திரும்பவும் காய்ச்சல் வாராமல் தடுக்கக் "கோய்னு மிக்சர்" கொடுக்கலாம்.

(4) கோய்னுவுக்கு "எம்மனகாக்" (g) குணமும் உண்டு.

---

(1) பில். கோய்னேன்.

கோய்னு மாத்திரை

நாம் "கோய்னு" தூளை மாத்திரைகளாகச் செய்து கொடுப்பதைவிட இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் கோய்னு மாத்திரை", களாகவே வைத்திருக்கிறவைகளை உபயோகப் படுத்துவது நல்லது.

---

## (145) எம்பிளாஸ்டிரம். ரெஸினி

இதற்கு "ஸ்டிக்கிங்: பிளாஸ்ட்டர்" என்று பெயர்.

அதை வெட்டுப்பட்ட காயங்கள், புண்கள் இவைகளுக்கு, கொஞ்சம் எடுத்து இளக்கி துணியில் தடவி மேல் ஒட்டிவைக்கலாம்.

(1) அங்குவன்டம். ரேஸினி

ரேஸின். ஆயின்ற் மேன்ற்

இதை புண்களுக்கும், பித்த வெடிப்புக்கும் தடவலாம். மற்ற மருந்துகள் சேர்த்துக் களிம்பு செய்யும்போது இது துணைக்களிம்பாக உபயோகப்படுகிறது.

---

## (146) ரீயை ராடிக்ஸ்

(d)

ரூபார்ப். ரூட்
(b) (b)

(1) பல்விஸ். ரீயை

*இது மஞ்சள் நிறமான தூள்.*

**குணம்:**—(1) ஸ்டமக்கிக் (2) கதார்ட்டிக்

**அளவு:**—3 முதல் 10 கிரைன்

15 முதல் 30 கிரைன் (ஒரே தடவலாகக் கொடுக்க)

**உபயோகம்:**—1 வயசுக்கு உள்பட்ட சிறுகுழந்தைகளுக்கு பால் செமிக்காமல் புளிப்பு, மந்தம், வயிற்றுப்பொருமல் அதோடு காய்ச்சலு மிருந்தால் முதலில் மலத்தை வெளியாக்க:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பல்விஸ்.ரீயை | கிரைன் 3 |
| காலோமல் | கிரைன் 1 |
| ஸோடா. பைகார்ப் | கிரைன் 3 |

(d) (b) (b)

ஒன்றுசேர்

ஒரு குச்சியில் "ஆயில். அனிஸி" முக்கி இதோடு கலந்து, இதை ஒரே தடவலாகக் கொஞ்சம் தேனில் கலந்து கொடுக்கவும். ஒன்று, அல்லது 2 தடவல் மலம் வெளியாகி வயிறு உப்பிசம் தணியும்.

பிறகு

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| பல்விஸ்.ரீயை | கிரைன் 2 |
| ஸோடா. பைகார்ப் | கிரைன் 6 |

(d) (b) (b)

| | |
|---|---|
| ஆயில். அனிஸி | துளி 1 |

ஒன்றுசேர்

4 பொட்டணமாக மடித்துக்கொண்டு தடவல் 1 க்கு 1 பொட்டணம் வீதம் 3 மணிக்கொரு தடவல் தேனில் கலந்து கொடுக்கவும்.

இதிலிருந்து பூராவும் குணமாகும் வரை 4 மணிக்கொரு தடவல் மேல்படி பொடியைக் கொடுத்து வரவும்.

(1) பல்விஸ். ரீயை. கோ

இதற்கு "கிரிகோரிஸ். பவுடர்" என்றும்
(g) (g) (d)
பெயர்.

**செய்யும் விதம்:**—3 அவுன்ஸ் "மேக்நீஷியா கார்ப்" இதை
(g) (b)
முதலில் நன்றாய்த் தூளாக்கிக்கொண்டு, இதோடு 1 அவுன்ஸ் "பல்விஸ். ரீயை" சேர்த்து இவர்களோடு ½ அவுன்ஸ் "பல்விஸ். ஜிஞ்ஜர்" அதாவது (**சுக்குத்தூள்**) சேர்த்து இவைகள் மூன்றும் நன்றாய் ஒன்றுசேரும்படி கலந்துகொள்ளவும்.

**குணம்:**—"பல்விஸ். ரீயை" க்குள்ளது

**அளவு:**—20 முதல் 60 கிரைன்

**உபயோகம்:**—இது, சிறு குழந்தைகளுக்கு மலத்தை வெளியாக்கக் கொடுக்க நல்ல மருந்து.

1 வயசுக் குழந்தைக்கு தடவல் 1க்கு 5 கிரைன், பாலிலாவது, வெந்நீரிலாவது கலக்கிக்கொடுக்கலாம். இந்தப்படி வாரத்தில் 2 தடவல் கொடுத்துவரலாம்.

(2) டிஞ்சர். ரீயை. கோ

குணம்:—"பல்விஸ். ரீயை"க்குள்ளது

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—சிறு குழந்தைகளுக்கு வெண்மையாய் மலம் போய்க்கொண்டு பால் முதலியவைகள் வாந்தி பண்ணினுல் அப்பொழுது கொடுக்க·

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| டிஞ்சர். ரீயை. கோ. | துளி 20 |
| அமோனியா. குளோரைட் | கிரைன் 8 |
| (d) | |
| ஸோடா, ஸாலிஸிலஸ். | கிரைன் 6 |
| (d) | |
| ஸிரப். ஸிம்பிள், | துளி 20 |
| ஆக்குவா. அனிஸி. சேர்ந்து | அவுன்ஸ் 1 |
| | ஒன்றுசேர் |

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 2 தேக்கரண்டி வீதம் 4 மணிக்கொரு தடவல் கொடுக்கவும்.

---

## (147) ரிஸினி ஓலியம்.

### காஸ்ட்டர். ஆயில்.

### விளக்கெண்ணெய்

குணம்:—கதார்ட்டிக்

அளவு:—1 முதல் 8 டிராம்

உபயோகம்:—குழந்தைகளுக்கு மலத்தை வெளியாக்க விசேஷமாய் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது.

சுகபேதிக்காகப் பெரியவர்களும் சாப்பிட லாம். மூல உபத்திரவமுள்ளவர்கள் மலச்சிக் கல் ஏற்படும்பொழுது இரவில் 1 அல்லது 2 தேக்கரண்டி அளவு பாலுடன் கலந்து சாப்பிடலாம்.

இரவில் கிருமிப்போடி கொடுத்திருந்தால் காலையில் இந்த எண்ணெயை உபயோகிக்க வேண்டும் "டைபாய்ட். பீவர்" என்னும்
(f) (d) (f)
விஷஜந்நி சுரத்துக்குப் பின்பும், கொடுமை யான வைசூரிக்குப் பின்பும் ஜீரணக்குடல் களில் ரணம் உண்டாகி அளைச்சல் போல் மூலத்தில் ரத்தம் வந்து கொண்டிருந்தால் "காஸ்டர். ஆயில். மிக்சர்" கொடுக்கலாம். குடலிலுள்ள எரிச்சல், புண், வயிற்றளைச் சல் இதோடு கடுப்பும் வேதனையும் இருந் தால் 1 அவுன்ஸ் "காஸ்டர். ஆயில். மிக்ச ரோடு" 5 துளி "டிஞ்சர் ஓப்பியம்" சேர்த் துக்கொள்ளவும். சிறு குழைந்தைகளுக்குக் கொடுக்கிறதானால் "டிஞ்சர். ஓப்பியம் சேராமல் தனி "காஸ்டர். ஆயில். மிக்சரில்" பெரியவர்களுக்குக் கொடுக்கிற அளவில் ஒரு பாகம் கொடுக்கவும்.

குறிப்பு:—"காஸ்டர். ஆயில். மிக்சர்" செய்யும் விதத்தை இப்புஸ்தகத்தின் மூன்றுவது பாகத்தின் முதல் பிரிவில் பார்த்துத் தெரிந்து கொள்ள வும்.

---

## (148) ஸாலால்

இது வெண்மையான, தண்ணீரில் கரை யாத மருந்து. இதை குடலுக்குள் விஷத் தன்மை உண்டாகாமல் இருக்கக் கொடுக் கலாம்.

**அளவு:—5** முதல் 15 கிரைன்

**உபயோகம்:—(1)** இதை கிராணி, அஜீரணம், வயிற்றோட் டம் இவைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறதற்கு முன் கொடுக்க:—

**எடுத்துக்கொள்**

| | |
|---|---|
| ஸாலால் | கிரைன் 5 |
| பிஸ்மத். ஸப்நைட்ராஸ் (b) (b) | கிரைன் 5 |

ஒன்றுசேர்

இதை ஒரே தடவலாக வாயில் போட்டு கொஞ்சம் தண்ணீர் குடிக்கவும்.

ஆகாரத்துக்குப்பின் கொடுக்க —

**எடுத்துக்கொள்**

| | |
|---|---|
| ஈலட்ஸ். பெப்ஸின். மிக்சர். (h) | துளி 30 |
| ஆக்குவா. டிஸ்டில்லேட்டா. (d) | அவுன்ஸ் 1 |

ஒன்றுசேர்

மிக்சர்செய்

இதை ஒரே தடவலாக ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

(2) வயிற்றழைச்சல் குடலின் விஷத்தன்மை இவைகள் நீங்கக் கொடுக்க:—

எடுத்துக்கொள்

"கம். அக்கேஷியா." போதுமான அளவு
(g)

இதைக் கொஞ்சம் தண்ணீர்விட்டுப் பசை போல் "மார்ட்டரில்" அரைத்துக் கொண்டு

இதோடு "ஸாலால்" கிரைன் 5

"பிஸ்மத் ஸப்நைட்ரஸ்" கிரைன் 5

சேர்த்து அரைத்து, இதோடு 30 துளி "ஸிம்பிள். ஸிரப்" சேர்த்து எல்லாம் ஒன்றுசேர்ந்து 1 அவுன்ஸ் ஆகும் வரை போதுமான சுத்த ஜலம் சேர்த்துக்கொள்ளவும். இந்த மருந்தை எப்படி அரைத்துச் சேர்த்தாலும் தண்ணீரில் கரையாமல் அடியில் படியும். ஆகையால் மிக்சர் கொடுக்கும் போது நன்ருய்க் குலுக்கிக்கொண்டு இப்படி நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்.

"ஸ்பீட்ஸ். ஆரோரூட்." "பார்லிமாவு"
(d)

இவைகளில் யாதேனும் ஒன்றைக் கஞ்சி காய்ச்சிப் பால் சேர்த்துக் கொடுக்கலாம்.

(3) எவ்விதமான காய்ச்சல்களிலும் அதிகமாயிருக்கிற : "டெம்பரேச்சர்" இறங்க 10 கிரைன் "ஸாலால்," 5 கிரைன் "பிஸ்
(b)

மத். ஸப் நைட்ரஸ்" இந்த இரண்டும்
(b)

ஒன்று சேர்த்துக் காய்ச்சல் சூடு தணிகிறதைக் கவனித்துக்கொண்டு 4 மணிக்கொரு தடவல் கொடுத்து வாலாம்.

குறிப்பு:—"ஸாலால்" கொடுக்கும்போதெல்லாம் தனிமையாய்க் கொடுக்காமல் "பிஸ்மத். ஸப் (b) (b) நைட்ரஸ்" சேர்த்துக் கொடுக்கவும்.

---

## (149) கோய்னெட்டம்

இதைக் "கோய்ன" வுக்குப் பதிலாகக் குளிர் காய்ச்சல், மலேக்காய்ச்சல், முறைக்காய்ச்சல் இவைகளுக்கு "கோய்ன" கொடுக்கிற அளவில் மாத்திரைகளாகச் செய்து கொடுக்கலாம்.

"கோய்னெட்டம்" மாத்திரைகள் செய்யும் விதம்:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| கொய்னெட்டம். | கிரைன் 40 |
| கம். அக்கேஷியா. (g) | கிரைன் 10 |
| ஸிற்றிக்ஆஸிட் (d) | கிரைன் 10 |

முதலில் "ஸிற்றிக் ஆஸிட்" டை நன்ருய்த் (d) தூளாக்கிக்கொண்டு, "கம். அக்கேஷியா" (g) வோடு சேர்த்துக் கொஞ்சம் தண்ணீர் விட்டுப் பசை போலாக்கிக் கொண்டு "போலஸ்கத்தி" யால் இந்த பசையைக் கொஞ்சம் கொஞ்சமாய் "கோய்னெட்டத்தோடு சேர்த்து "ஸிலாப்"பில் நன்ருய்த் தேய்த்து ஒன்றுசேர்த்து உருட்டி, 12 மாத்

திரைகளாகப் பிரித்துக்கொள்ளவும். தடவல் 1 க்கு 1 மாத்திரை வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

---

## (150) ரிஸார்ஸின்

இதை வெளிப்பிரயோகமாக, சிரங்குகள் ஆராத புண்கள், பத்துகள் இவைகளுக்கு 1 அவுன்ஸ் "வாஸலேன்" என்னும் கழிம் போடு "15 கிரைன். ரிஸார்ஸின்" சேர்த்து நன்றாய்க்கலந்து கழிம்பாகச்செய்து முத வில் "கார்பாலிக் ஸோப்," "ஸாலூட்டிஸ் ஸோப்," ரைட்ஸ். கோல்ட்டார்ஸோப்," "கிரிமால்ட். அன் கோ. மெடிஸினல்ஸ்கி.
(g) (d)
ன். ஸோப்" இவைகளில் யாதேனும் ஒன் றால் சுத்தம் செய்து, பிறகு கழிம்பை நாள் 1 க்கு 1 தடவல் போட்டு வரவும்.

---

## (151) ஸான்றல். ஓலியம்

ஸான்றல். வுட். ஆயில்
(d)

வெண் சந்தணக்கட்டை எண்ணெய்

**குணம்:**—டயூரெட்டிக்

**அளவு:**—5 முதல் 30 துளி

**உபயோகம்:**—இதை மேகவியாதி ஆரம்பத்திலும் நாள்பட்ட மேகவியாதிக்கும் தடவல் 1 க்கு 20 துளி

கொஞ்சம் "கம் அக்கேஷியா" பசையோடு
(g)
சேர்த்து அரைத்து 1 அவுன்ஸ் தண்ணீர் சேர்த்து நாள் 1 க்கு 3 தடவல் கொடுத்து வந்து, மேகம் நின்ற பிறகு அதிலிருந்து 1 வாரத்துக்கு தடவல் 1-க்கு 10 துளி வீதம் மேல்படி விதமாய்ப் பக்குவப்படுத்தி நாள் 1 க்கு 3 தடவல் கொடுத்துவரவும்.

அல்லது

"ஸான்றல். மிடி" என்ற மாத்திரைகளில்
(d)
1 மணி நேரத்துக்கு 1 மாத்திரை வீதம் நாள் 1 க்கு 12 மாத்திரைகள் சாப்பிட்டு மறுநாளிலும் அதேபிரகாரம் செய்து பிறகு மேகம் மட்டுப்பட்டபின் 3-மணிக்கொரு தடவல் 1 மாத்திரை வீதம் சாப்பிட்டு வரவும்.

அல்லது

"ஈலட்ஸ். லேக்கர். ஸான்றல். பிளேவா
(h) (f)
கம். பக்கு எற். கியூபெப்." என்ற மருந்
(b) (b)(b)
தில் தடவல் 1 க்கு 60 துளி 1 அவுன்ஸ் சுத்த ஜலத்தில் (டிஸ்டில்ட். வாட்டரில்)
(d) (d)
சேர்த்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் 1வாரம் சாப்பிட்டு,பிறகு இரண்டாம் வாரம் தடவல் 1க்கு 30 துளி வீதம் நாள் 1க்கு 3 தடவல் மேகம் குணமாகும் வரை

சாப்பிட்டு,மேகம் நின்ற பிறகு "பர்காய்ன்ஸ்.
(b)(g)
அயோடைட்ஸ். ஸார்ஸபாரில்லா," என்
(d) (d)
னும் மருந்தில் தடவல் 1 க்கு 60 துளி 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுத்து வந்தால் ரத்தத்தைச் சுத்திசெய்து மேகத் துக்குப்பின் உண்டாகிற வாதம், மேகநீர், கண்ணில் சிகப்பு இறங்குதல், மேகப்புண் முதலிய துர் நீர் வியாதிகள் வரவொட்டா மல் தடுக்கும்.

---

## (152) ஸான்டோனின்

கிருமிப்பொடி

இதை கீரைப்பூச்சி, இறைப்பூச்சி என்று சொல்லப்படுகிற கிருமியை வெளிப்படுத்தி அதன் மூலமாய் ஏற்படுகிற வயிற்றுவலி, பசியின்மை, தேகவாட்சி இன்னும் இதர வியாதிகளைக் கண்டிப்பதற்காகக் கொடுக்கப் பட்டு வருகிறது.

அளவு:—2 முதல் 5 கிரைன் (பெரியவர்களுக்கு)
$\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ கிரைன் (1 வயசுக் குழந்தைக்கு)
2 கிரைன் (2 அல்லது 3 வயசுக் குழந் தைக்கு)

உபயோகம்—இதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய், சீனியோடு கலந்தும், "ஸோடா. பைகார்ப்"
(d) (b) (b)

வோடு கலந்தும் அல்லது "காலோமல்" "ஸோடா. பைகார்ப்" இவைகளோடு கலந்தும் இரவில் படுக்கைக்குப் போகும்போது கொடுத்து வந்தபோதிலும், பின் எழுதியிருக்கிற விதமாய் "ஸான்டோனைன்"கொடுப்பது நலமென அபிப்பிராயப்படுகிறார்கள்.

அதாவது:—பெரியவர்களுக்கு, படுக்கைக்குப் போகும்போது

| | |
|---|---|
| "ஸான்டோனைன்" | கிரைன் 3 |
| "ஸோடா. பைகார்ப்" | கிரைன் 3 |

(d) (b) (b)

இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து ¼ அவுன்ஸ் "காஸ்டர் ஆயில்' =(விளக்கெண்ணெயில்) கலக்கிக் கொடுக்கவும். மறுநாள் காலையில்:—

| | |
|---|---|
| "ஸான்டோனைன்" | கிரைன் 2 |
| "ஸோடா. பைகார்ப்" | கிரைன் 2 |

(d) (b) (b)

இவைகளை ஒன்று சேர்த்து 1½ அவுன்ஸ் உத்தேசம் (பக்காவுக்கு அரை வீசம்படி) "காஸ்டர் ஆயிலில்" கலக்கிக் கொடுத்துவிடவும். காஸ்டர் ஆயிலுக்கு," "ஸான்டோனைன்," சரியானபடி வேலை செய்யவும், அதனால் ஏற்படும் துர்க்குணங்களைத் தடுக்கும் சக்தியும் இருப்பதால், "ஸான்டோனைன்" கொடுக்கும்போதெல்லாம் மேல் எழுதியிருக்கிற விதமாய் "விளக்கெண்ணெயிலேயே" சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

சிலர்கள் எண்ணெய் சாப்பிட அருவருப்பாய் இருக்கிறதென்று மலம் வெளியாக "ஸான்டோனின்" இதோடு 4 கிரைன் "காலோமல்" சேர்த்து இரவில் சாப்பிட்டும், சிலர்கள் மலம் வெளியாக மறுநாள் காலையில் "எப்ஸம் ஸால்ட்" முதலிய பேதி உப்புகளைச் சாப்பிட்டும் வருகிறார்கள். இப்படிப்பட்ட வழக்கங்களெல்லாம் அவ்வளவு பொருத்தமானதல்ல.

---

## (153) லினிமெண்டம். ஸப்போனிஸ்

ஸோப். லினிமேன்ற்

**உபயோகம்:—** இதை வெளிப் பிரயோகத்திற்கு மட்டும் வாத உளைச்சல் வலி இவைகளுக்கு வலியுள்ள இடங்களில் காலை மாலை நன்றாய் அழுத்தித் தேய்த்து வைத்திருந்து வெந்நீர் சுடச்சுட விட்டுவர வேண்டியது.

---

## (154) ஸார்ஸா. ராடிக்ஸ்

(d)

ஸார்ஸபாரில்லா

நன்னாரிவேர்

**குணம்;—** ஆல்ட்டரேட்டிவ்

**உபயோகம்:—** இதைக் கஷாயம் செய்து "போட்டாஸ் அயோடைட்" என்னும் "வாத உப்பு" டன்

(d) (d)

சேர்த்து மேகவாதம், வாதம், துர்நீர்ப் புண்கள், அசுத்தமான ரத்தம் சுத்தமாக இவைகளுக்குக் கொடுக்கலாம்.

(1) எக்ஸ்ட்ராக்டம். ஸார்ஸா லிக்குவிடம் (d)

அளவு:—¼ முதல் ½ அவுன்ஸ்

உபயோகம்:—இதை நன்னாரிவேர்க் கஷாயத்திற்குப் பதில் மேல்காட்டிய துர்நீர் சம்பந்தமான வியாதிகளைக் கண்டிக்கக் கொடுக்கலாம்.

## (155) ஸில்லா

ஸ்குவில்

நரிவெங்காயம்

(1) ஆக்ஸி மேல். ஸில்லி

குணம்:—எக்ஸ்பெக்டோரேன்ற்

அளவு:—½ முதல் 1 டிராம்

உபயோகம்:—இதை இருமல் கபம் இவைகளுக்கு தனிமையாகக் கொடுப்பதை விட இருமலைத் தணிக்கச் செய்து கொடுக்கப்படுகிற மிக்சர்களில் மற்ற மருந்துகளோடு இதையும் சேர்த்துக் கொடுப்பது நலம்.

(2) டிஞ்சர். ஸில்லி

குணம்:—எக்ஸ் பெக்டோரேன்ற்

அளவு:—5 முதல் 15 துளி

உபயோகம்:—இதையும் இருமலுக்குச் செய்து கொடுக்கிற மற்ற மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்கப்படுகிறது.

## (156) ஸெனிகா. ரூட்
(g)

### (1) டிஞ்சர். ஸெனிகா

**குணம்:**—எக்ஸ் பெக்டோரேன்ற்

**அளவு:**—30 முதல் 60 துளி

**உபயோகம்:**—இதை நாள்பட்ட இருமல் கபம் இவைகளுக்குக் கொடுக்கலாம். இந்த மருந்தின் குணத்தை "அமோனியா கார்ப்" அதிகப்படுத்தி
(b)
வியாதியைக் கண்டிக்கும்படி செய்வதால் "டிஞ்சர். ஸெனிகா" வை நாள்பட்ட தொண்
(g)
டைப் புகைச்சலை நிறுத்தக் கொடுக்கும்போதெல்லாம் "அமோனியா. கார்ப்" சேர்த்தே
(b)
கொடுத்துவரவேண்டும்.

நாள்பட்ட இருமலை நிறுத்த:—

எடுத்துக்கொள்

| | |
|---|---|
| அமோனியா. கார்ப் (b) | கிரைன் 9 |
| டிஞ்சர். ஸெனிகா (g) | துளி 60 |
| டிஞ்சர். காம்பர். கோ. (f) | துளி 60 |
| வைனம். இப்பிக்காக். | துளி 30 |
| ஸ்பிரிட். குளோரோபார்ம். (f) | துளி 30 |
| ஆக்குவா. சேர்ந்து. | அவுன்ஸ் 3 |

ஒன்று சேர்

மிக்சர்செய்

தடவல் 1-க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

---

## (157) ஸென்ஞ

நிலவாகை

**குணம்:—கதார்ட்டிக்**

### (1) இன்பியூஷன். ஸென்ஞ

நிலவாகைக் கஷாயம்

**செய்யும் விதம்:**—10 அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரில் 1 அவுன்ஸ் நில வாகையையும் 27½ கிரைன் சுக்குத்தூளையும் போட்டு ¼ மணி நேரம் மூடிவைத்திருந்து வடிகட்டிக்கொள்ளவும்.

**அளவு:**—½ முதல் 1 அவுன்ஸ்

2 அவுன்ஸ் (ஒரே தடவலாகக்கொடுக்கவும்)

**உபயோகம்:**—இதை 1 அவுன்ஸ் "காஸ்டர் ஆயிலில்" கலக்கி சாப்பிட்டால் மலசுத்தியாகும்.

அல்லது

¾ அவுன்ஸ் "எப்ஸம். ஸால்ட்" டை, 2 அவுன்ஸ் "நிலவாகைக்கஷாயத்தில்" கரைத்துக் கொடுத்தாலும் மல சுத்தியாகும்.

### (2) டிஞ்சர். ஸென்ஞ. கோ

**அளவு:**—½ முதல் 1 டிராம் (அடுத்தடுத்துக்கொடுக்க)

¼ முதல் ½ அவுன்ஸ் (ஒரே தடவல் கொடுக்க)

**உபயோகம்:**—இதை "எப்ஸம். ஸால்ட்" டில் சேர்த்துக் கொடுத்தால் மலசுத்தியாகும்.

மலசுத்தியாக "பிளாக். டிராப்ட்" செய்
(b) (d) (f)
யும் விதம்:—

எடுத்துக்கொள்

எப்ஸம். ஸால்ட். டிராம் 6
(இதை "மார்ட்டரில்" 1 அவுன்ஸ் தண்ணீரில் அரைத்துக் கரைத்து வடிகட்டிக் கொண்டு) இதோடு
டிஞ்சர். ஸென்னு. கோ. டிராம் 1
டிஞ்சர்.ஜிஞ்சிபெரிஸ். துளி 30
(z) (b)
ஆக்குவா.சேர்ந்து.ஆக அவுன்ஸ் 2
ஒன்றுசேர்

மிக்சர்செய்

இதை ஒரேதடவலாக காலையில் கொடுக்கவும்

## (158) ஸினப்பிஸ்

### மஸ்ட்டார்ட்
(d)

### கடுகு

**குணம்:**—(1)எமட்டிக் (2) ஸ்டிமியூலென்ற்.

**உபயோகம்:**—(1) விஷம் சாப்பிட்டவர்களுக்கு வாந்திஎடுக்க, மற்றமருந்துகள் கைவசமில்லாமல் இருக்கையில் 4தேக்காண்டி அளவு தூளாக்கின கடுகை 1 தமிளர் வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம்

(2) "கால்ருவில் உண்டாகும் வாந்தியை நிறுத்த வயிற்றின் நடுப்பாகத்தில் போல்டிஸாகப்" போடலாம்.

15 முதல் 30 நிமிஷம் வரை இருக்கவேண்டும். குழந்தைகளுக்குப் போடுகிறதானுல் 1 முதல் 4 பங்கு கார்ன். பிளவர்', சேர்த்துப் போடவேண்டும். (f)

(1) ஓலியம். ஸினுப்பிஸ்
மஸ்ட்டர்ட். ஆயில்.
(d)

கடுகு எண்ணெய்

இது தண்ணீரைக்காட்டிலும் கனமுள்ளது.

உபயோகம்:—1 பங்கு "கடுகு எண்ணெயும்," 2 பங்கு "டர்ப்பெண்டைனும்" சேர்த்து ஒன்ருய்க் குலுக்கி நெஞ்சில் கட்டியிருக்கும் கபத்தை இளக்க, நெஞ்சில் தேய்த்துக் கோதுமைத் தவிடு வருத்தாவது அல்லது பிளானல் துணியை கொதிக்கிற தண்ணீரில் முக்கிப் பிழிந்தாவது ஒத்தடம் கொடுக்கலாம்.

---

## (159) ஸோடா. டார்ட்டரேட்டா.

(d)

குணம்:—கதார்ட்டிக்

அளவு—2 முதல் 4 டிராம்.

உபயோகம்:—சுகமாய் 3 அல்லது 4 தடவல் மலம் வெளியாக "ஸேட்லிட்ஸ். பவுடர்"
(d) (d)

"ஸிங்கிள் டோஸ்" கொடுக்கவும்.
(g) (d)

**செய்யும் விதம்:—**

எடுத்துக்கொள்

ஸோடா. டார்ட்டரேட்டா கிரைன் 120
(d)

ஸோடா. பைகார்ப். கிரைன் 40
(b) (b)

ஒன்றுசேர்

இந்த இரண்டையும் நன்றாய்த் தூளாக்கி ஒன்று சேர்த்து 10 அவுன்ஸ் குளிர்ந்த தண்ணீரிலாவது வெந்நீரிலாவது கரைத்து 38 கிரைன் "டார்ட்டாரிக் காஸிட்" டோடு சேர்த்துப் பொங்குகிறபோது சாப்பிடவும். 3 அல்லது 4 தடவல் மலசுத்தியாகும். கடுமையான மலச்சிக்க லுள்ளவர்களுக்குக் கொடுக்க "ஸேட்லிட்ஸ். பவுடர்" டபிள்
(d) (d) (d)(b)

டோஸ்" ஆனால்
(d)

"ஸோடா டார்ட்டரேட்"
(d)

"ஸோடா. பைகார்ப்"
(d) (b) (b)

இந்த இரண்டையும் மேல்காட்டிய "ஸிங்கிள் டோஸ்" அளவைப்போல் கூட ஒரு
(d)

பங்கு அதிகமாய்ச் சேர்த்துக் கொள்ளவும்.

ஆனால் "டார்ட்டாரிக் ஆஸிட்" டை மட்
(d)
டும் ஸிங்கிள் டோஸில் உபயோகப்படுத்தி
(d)
யதுபோல் 38 கிரைன் தான் சேர்த்துக் கொள்ளவும்.

---

## (160) ஸோடியை. பென்ஸால்.
(d) (z)

குணம்:—டயூரெட்டிக்

அளவு:—5 முதல் 30 கிரைன்

உபயோகம்:—இதை நீரைப் பிரிக்கிறதற்காகவும், மூத்திரப் பைக்குள் உண்டாகும் விஷத்தன்மையை நீக்கவும் தடவல் 1 க்கு 10 கிரைன் வீதம் 1 அவுன்ஸ் "இன்பியூஷன் பக்கு" வோடு
(f) (b)
சேர்த்து நாள் 1 க்கு 3 தடவல் கொடுக்கலாம்.

"பார்லி அரிசி". கஞ்சியில் பாலும் சீனியும்
(b)
சேர்த்துக் கொடுக்கலாம்.

---

## (161) ஸோடா பைகார்ப்.
(d) (b) (b)

ஸோடா. உப்பு.
(d)

குணம்:—அன்டாஸிட்
(d)

அளவு:—5 முதல் 30 கிரைன்

உபயோகம்:—(1) கொதிக்கிற தண்ணீராவது, தீயாவது காய்ந்த எண்ணெயாவது மேல் பட்டவுடன் அந்த நிமிஷமே "ஸோடா' உப்பை" தண்
(d)
ணீர் விட்டு கட்டியாய் கரைத்துக்கொண்டு மேல் பூசினுல் எரிச்சல், காந்தல் தணிந்து கொப்பளமும் உண்டாக வொட்டாமல் தடுக்கு மெனத் தீர்மானிக்கிருர்கள்.

(2) வயிற்றுவலி, அஜீரணம், புளித் தேப்பம் இவைகளுக்கு உள்ளுக்கும் கொடுக்கலாம்.

---

## (162) ஸோடியை. புரோமிடம்
(d) (b) (d)

குணம்:—ஆன்டிஸ்பாஸ்மோடிக்
(d)

அளவு:— 5 முதல் 30 கிரைன்

உபயேகம்:— இது "பொட்டாஸ். புரோமைட்" குளோ
(b) (d)
ரல். ஐட்ரஸ்" இவைகளைப்போல் அதிகமாய்
(h)
இருதயத்தைச் சேட்டை செய்யாது. இதை காக்கை வலிப்புக்கு தடவல் 1 க்கு 5 கிரைன் "பொட்டாஸ். புரோமைட்" டோடும் 2 துளி லைக்கர். ஆர்ஸேனக்காலி ஸோடும்" சேர்த்து நாள் 1-க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கலாம்.

---

## (163) ஸோடா. ஸாலிஸிலஸ் (d)

இது தகடு தகடான வெண்மையான தூள்.

**குணம்:—(1)** ஆன்டி. ருமேட்டிக் = (வாதத்தைக் குணமாக்குகிற மருந்து.)

**(2)** ஆன்டிபைரேட்டிக்

**அளவு:**—10 முதல் 30 கிரைன்

**உபயோகம்:—(1)** இந்த மருந்தை காய்ச்சல் சூட்டைத் தணிக்க "கோயினு" வோடு சேர்த்துக் கொடுக்க வேண்டுமானல் தண்ணீரில் கலந்து மிக்சராகக் கொடுக்கக்கூடாது.

இரண்டையும் தூளாகவே கலந்து கொடுக்க வேண்டும்.

**(2)** மும்மரமான வாதத்தோடு ஏற்படுகிற காய்ச்சல் சூட்டைத்தணிக்கவும் வாதத்தைக் குணமாக்கவும், 20 கிரைன் "ஸோடா (d) ஸாலிஸில" வை ½ அவுன்ஸ் தண்ணீரிலாவது, நிலவேம்புக்கஷாயத்திலாவது கரைத்து 2 மணிக்கொரு தடவல், 3, 4 அல்லது 6 தடவல் கொடுக்கலாம். ஆனல் ஒருநாள் பூராவும் 120 கிரைனுக்குமேல் கொடுக்கக் கூடாது.

3 தடவல் கொடுத்து நாலாம் தடவல் கொடுக்கும்போது "தர்மாமிட்டர்" வைத்துப் பார்த்துக்கொண்டு, காய்ச்சல்சூடு இன்னம் தணிய வேண்டியதிருந்தால் மட்டும் கொடுக்

கவும். ஆனால் தடவல் 1 க்கு 20 கிரைன் வீதம் நாள் 1 க்கு 6 தடவலுக்குமேல் கொடுக்க வேண்டாம்.

(3) இதற்கு கட்டுப்பட்டிருந்த சூதகத்தை திரும்பவும் படும்படி செய்கிற குணமும் உண்டு.

---

## (164) ஸோடா. ஸல்பஸ்
(d) (f)

குணம்:—கதார்ட்டிக்

அளவு:—$\frac{1}{2}$ முதல் 2 டிராம் = (அடுத்தடுத்துக் கொடுக்க)

2 முதல் 4 டிராம்= (ஒரே தடவலாகக் கொடுக்க)

உபயோகம்:—இதைக் காய்ச்சலில், மலமும் வெளியாகி அதோடு பித்தமும் கழிய உபயோகப்படுத்தலாம்.

---

## (165) ஸோடா. ஸல்பிஸ்
(d) (f)

குணம்:—ஆன்டி ஸெப்டிக்

அளவு:—5 முதல் 20 கிரைன்

உபயோகம்:—இதை விசேஷமாய் வெளிப் பிரயோகமாக ஆறாத புண்கள் சிரங்குகளிலுள்ள விஷப் பூச்சிகளைக்கொன்று அதன் மூலமாய்க் குணத்தைக் கொடுக்க தண்ணீரில் கரைத்து உபயோகிக்கலாம்.

## (166) ஸ்பிரிட். ரெக்ட்டிபிக்கேட்டஸ்
(f)

ரேக்ட்டிபைட். ஸ்பிரிட்
(f)(d)

இது டிஞ்சர்களெல்லாம் செய்யவும். மற்ற மருந்துகள் கலந்த ஸ்பிரிட்டுக ளெல்லாம் செய்யவும் உபயோகப்படுகிறது.

## (167) மிக்சர் ஸ்பிரிட் வைனி காலிக்ஸி.
(g)

அல்லது

எக். பிளிப்
(g) (f)

எக் பிளிப்:—
(g) (f)

செய்யும் விதம்:—

½ படி சுடுகிற பாலில் 1 முட்டையின் மஞ்சள் கருவை வாய் அகன்ற ஒரு கோப்பையில் ஊற்றி "எக்பீட்டர்" என்னும் கடை
(g)(b)
கிற கருவியால் கடைந்து நன்ருய் முட்டையின் மஞ்சள் கருவையும் பாலையும் ஒன்று சேர்த்துக் கலக்கிக்கொண்டு இதில் கொஞ்சம் சீனியும் 1 அவுன்ஸ் பிராந்தியும், அவசியமானல் லவங்கப்பட்டைத் தூளாவது அல்லது கிராம்புத் தூளாவது சேர்த்துக் கொண்டு சாப்பிடவும். இந்த அளவுப்படி சாப்பிட்டு ஜீரண சக்தியில் குறைவில்லாம

இருந்தால் அவரவர்கள் தேகநிலைமைக்கும் ஜீரணக் கருவிகளின் பலத்துக்கும் தகுந்த படி முட்டையையும் பாலையும் அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

உபயோகம்:—இது தேகத்திற்கு சத்தைக்கொடுத்து களைப்பைமாற்றி உற்சாகத்தைக் கொடுக்கும்.

---

## (168) ஸ்டிராமோனியா போலியா

(f)

ஸ்டிராமோனியா இலைகள்

உபயோகம்:—இதை இளைப்புக்காரர்களுக்குத் தனிமையாகவாவது, புகையிலையோடு சேர்த்தாவது சுருட்டி, சுருட்டுக் குடிப்பதுபோல் புகை குடித்தால் இளைப்பு நிற்கும்.

### (1) டிஞ்சர். ஸ்டிராமோனியம்.

குணம்:—ஆன்டி ஸ்பாஸ்மோடிக்

(d)

அளவு:—5 முதல் 15 துளி

உபயோகம்:—இதையும் இலைகளுக்குப் பதிலாக உள்ளுக்கு இளைப்பை நிறுத்தத் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம்.

### (2) எக்ஸ்ட்ராக்ட்டம். ஸ்டிராமோனியம்

இதையும் இளைப்பு வருகிறதற்கு 1 அல்லது 2 மணி நேரத்திற்கு முன் ½ முதல் 1 கிரைன் மாத்திரையாகக் கொடுத்தால் இளைப்பை வரவொட்டாமல் தடுக்கும்.

---

## (169) ஷ்ட்ரோ பாந்தஷ். ஷீட்ஷ்
(f) (d)
(Strophanthus)

### (1) டிஞ்சர். ஸ்ட்ரோபாந்தஸ்
(f)

**குணம்:**— கார்டியக். டானிக்
(d)

**அளவு:**—5 முதல் 15 துளி

**உபயோகம்:**—இதை இருதய வியாதியைக் கண்டிக்கவும், இருதய நடையை ஒழுங்குபண்ணி சரியான நிலமையில் வைக்கவும் உபயோகப் படுத்தலாம். இதற்கு "டிஜிடாலிஸை"ப் போல் இருதய நடையை ஒழுங்கு பண்ணு கிற குணம் உண்டு; ஆனால் நீரைப் பிரிக்கிற குணம் அவ்வளவு அதிகமில்லே.

இருதய வியாதிக்கு முதலில் தடவல் 1க்கு 5 துளி "டிஞ்சர். டிஜிடாலிஸ்" இதை
(d)
1 அவுன்ஸ் தண்ணீரில் சேர்த்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும். இப்படி "டிஞ்சர். டிஜிடாலிஸ்" 2
(d)
மாசம் கொடுத்து பிறகு 1 மாசம் "டிஞ்சர். ஸ்ட்ரோபாந்தஸ்" இதை தடவல் 1 க்கு 5
(f)
துளி வீதம், 20 துளி "ஈஸ்டன்ஸ் ஸிரப்" போடு சேர்த்து இந்த இரண்டையும் 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் கொடுக்கவும்

ஆனால் இடை இடையே இருதயத்தைச் சோதித்துக்கொண்டு கொடுத்து வரவும்.

---

## (170) ஸ்ட்ரிக்னைன்

இது "எட்டிக்கொட்டை" யிலிருந்து எடுக்கப்படுகிற தண்ணீரில் கரையாத வெண்மையான கசப்புள்ள உப்பு.

குணம்:—தாது நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கக் கூடியது.

அளவு:—1/60 முதல் 1/15 கிரைன் அதாவது (1 கிரைனில் 60 ல் 1 பங்கு முதல் 1 கிரைனில் 15 ல் 1 பங்கு)

(1) லைக்கர். ஸ்ட்ரிக்னைன். ஐட்ரோகுளோரைட்
(h d) (d)

செய்யும்விதம்:—½ அவுன்ஸ் "ரெக்டிபைட். ஸ்பிரிட்"
(f) (d)
டை 2 அவுன்ஸ் பிடிக்கக்கூடிய "டெஸ்ட். டியூப்" பில் விட்டு அதில் 8¾ கிரைன் "ஸ்ட்ரிக்னைன். ஐட்ரோ குளோரைட்" டைப்
(h d)
போட்டு "ஸ்பிரிட் விளக்கில்" நன்றாய்க் கொதிக்க வைத்துக் கரைத்து இதோடு 19 துளி ஆஸிட்" ஐட்ரோ "குளோரிக். டில்"
(d) (h d) (d)
சேர்த்து எல்லாம் சேர்ந்து 2 அவுன்ஸ் அளவுக்குப் போதுமான "டிஸ்டில்ட். வாட்டர்"
(d) (d)
சேர்த்துக்கொள்ளவும்.

**குணம்:**—தாது நரம்புகளுக்குப் பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கக் கூடியது.

அளவு:—2 முதல் 8 துளி

**உபயோகம்:**—இது விஷமான மருந்தாகையால் வெகு ஜாக்கிரதையாய் மேல்காட்டிய குறைவான அளவில் உபயோகிப்பதோடு கூட, மற்ற மருந்துகளோடு மிக்சரில் சேர்ந்து வரும் போது எல்லா மருந்துகளும் சேர்த்தபிறகு கடைசியாக இதைச் சேர்க்க வேண்டியது. ஏனென்றால் முதலிலாவது நடுவிலாவது போட்டால் சிலவேளைகளில் இதைச் சேர்த்தோமோ இல்லையோ என்ற சந்தேகமுண்டாகி இரட்டிப்பாக மறுபடியும் சேர்த்து விடாமலிருக்கத்தான். இந்த மருந்தை தடவல் 1 க்கு 8 துளிக்குமேல் கொடுக்கக் கூடாது.

(1) தாதுபலயீனத்தை மாற்ற "ஸ்ட்ரிக்னைன்" (எட்டி உப்பு) சேர்ந்திருக்கிற:—

(1) "ஈஸ்டன்ஸ். ஸிரப்"

(2) "பைனோ. ஐப்போபாஸ் பைட்ஸ்"
(b) (h) (f) (f)

(3) பைனின். அமரா"
(b)

(4) "அக்ஸிலிஸ். நெர்விகர். ஸிரப் வித் பார்மேட்ஸ்"
(h) (g) (f)

(5) "பெல்லோஸ். காம்பவுண்ட். ஸிரப்"
(f)

என்ற "பேட்டென்ற் மருந்துகளி" ல் யாதே னும் ஒன்றை அதற்கு எற்பட்டுருக்கிற அள வில் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப் பின் சாப்பிடவும்.

(2) இதற்கு சூதகத்தை வெளிப்படுத்து கிற குணம் இருப்பதால் இதை மாதவிடாய் க்கு 1 வாரத்துக்கு முன் கொடுக்க:—

எடுத்துக்கொள்

கொய்னீன். ஸல்பஸ் (f) கிரைன் 2.

ஆஸிட் ஐட்ரோகுளோரிக். டில் (d) (h d) (d) துளி 4

லிக்கர். ஸ்ட்ரிக்னீன். ஐட்ரோகுளோரைட் (h d) (d) துளி 2

ஆக்குவா. சேர்ந்து. அவுன்ஸ் 1

ஒன்றுசேர்

மிக்சர் செய்

இப்படி நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக் குப்பின் 2 வாரம் கொடுத்துவாவும்.

அல்லது

எடுத்துக்கொள்

பர்காய்ன்ஸ். ஈஸ்டன்ஸ் ஸிரப். (b) (g) டிராம் 1½

ஆக்குவா. சேர்ந்து அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ்வீதம் நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

சூதகம் சரியானபடி படும்வரை இதையே உபயோகப்படுத்தி வரலாம்.

அல்லது

எடுத்துக்கொள்

"பைனின். அமரா"
(b)

இதில் தடவல் 1 க்கு ¼ அவுன்ஸ் வீதம் 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1 க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும். இதையும் சூதகக்கட்டு நீங்குகிற வரைக்கும் கொடுக்கவும்.

**(3)** இதை பக்க வாதத்துக்குக் கொடுக்கலாம். ஆனால் அசைவாவது, ஸ்மரணையாவது கொஞ்சமேனும் இல்லையானால் இந்த மருந்து பிரயோசனப்படாது.

"பக்கவாதத்துக்கு" க் கொடுக்க:—

எடுத்துக்கொள்

லைக்கர். ஸ்ட்ரிக்னைன். ஐட்ரோகுளோரைட்
(h d) (d)
துளி 10

ஆஸிட். நைட்ரோ. ஐட்ரோகுளோரிக் டில்
(d) (h d) (d)
துளி 15

டிஞ்சர். ஜென்ஷன். கோ. துளி 45

ஆக்குவா சோந்து அவுன்ஸ் 3

ஒன்றுசேர்

மிக்சர்செய்

தடவல் 1 க்கு 1 அவுன்ஸ் வீதம் நாள் 1க்கு 3 தடவல் ஆகாரத்துக்குப்பின் கொடுக்கவும்.

குறிப்பு:—இந்த மிக்சரை "அன்னத் துவேஷத்திற்கும்" கொடுக்கலாம்.

"லைக்கர். ஸ்ட்ரிக்னைன். ஐட்ரோகுளோ
(h d)
ரைட்" இதற்குப்பதிலாகத் தடவல் 1க்கு
(d)
10 துளி "டிஞ்சர். நக்ஸ்வாமிக்கா" வை மேல்படி மிக்சரில் சேர்த்துக்கொள்ளலாம்.

---

## (171) ஸல்போனல்
f)

இது வெண்மையானதும், வாசனை யாதொன்றுமில்லாததும், ருசியில்லாததும், தண்ணீரில் கரையாததுமான மருந்து.

குணம்:—இப்னாட்டிக்
(h)

அளவு:—10 முதல் 30 கிரைன்

உபயோகம்:—எவ்வித வியாதியினாலாவது தூக்கம் வாராமலிருந்தால் தூக்கம் உண்டுபண்ண 20 கிரைன் "ஸல்போனல்" பொடி செய்து
(f)
வாயில்போட்டு உமிழ் நீரோடு சேர்த்து இறக்கி 1 அவுன்ஸ் தண்ணீர் குடிக்கவும். தூக்கம் உடனே வாராது. சில வேளைகளில் மருந்து கொடுத்து தூக்கம் வா மூன்று மணிநேரம் செல்லும். இதற்கு "குளோரல்.

ஐட்ரஸ்'' க்குண்டான தூர்க்குணம் கிடை
(h)
யாது.

---

## (172) ஸல்பர். ஸப்ளிமேட்
(f) (b)

### கெந்தகம்

**குணம்:**—(1) லாக்ஸாட்டிவ்

(2) ஆன்டிபாராஸிட்டிக்

**அளவு:**—20 முதல் 60 கிரைன்

**உபயோகம்:**—தூர்நீர் கழியவும், ரத்தம் சுத்தமாகவும் தடவல் 1 க்கு 20 கிரைன் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் கொடுத்துவந்தால் மலம் வெளியாகி தூர்நீர் கழியும்

### (1) கண்பெக்ஷன் ஸல்பர்
(f) (f)

**செய்யும் விதம்:**—

| | |
|---|---|
| ஸல்பர். ஸப்ளிமேட் (f) (b) | அவுன்ஸ் 1 |
| கிரீம் ஆப். டார்ட்டார் (f) | அவுன்ஸ் $\frac{1}{4}$ |
| டிரககந்த் (Tragacanth) (g) | கிரைன் $4\frac{1}{2}$ |
| ஸிரப். ஸிம்பிள் | அவுன்ஸ் $\frac{1}{2}$ |
| டிஞ்சர். ஆரண்டி. | டிராம் 1 |
| கிளிஸெரின் (g) | டிராம் 3 |

இவைகளை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.

அளவு:—1 முதல் 2 டிராம்

உபயோகம்:—இதை மூல உபத்திரவக்காரர்களுக்கு மூலத்தால் ரத்தம் போவதை நிறுத்தவும், மலச்சிக்கலை நீக்கவும் தடவல் 1-க்கு 60 கிரைன் வீதம் நாள் 1-க்கு 3 தடவல் கொடுக்கவும்.

(2) அங்குவண்டம. ஸல்பர்
(f)

கெந்தகக்கழிம்பு

செய்யும் விதம்:—ஸல்பர். ஸப்ளிமேட். டிராம் 1
(f) (b)

வாஸலீன் டிராம் 9

ஒன்றுசேர் கழிம்பாகச் செய்துகொண்டு சிரங்குக்கு இதை மேல் தடவி வைத்திருந்து, பின்பு "ஸல்பர். ஸைனோலியா. ஸோப்" கொண்டு
(f)
சுத்தம் செய்யவும்.

---

## (173) ஸஹட்டோஜன்

இதை, பலவித வியாதியினால் ஏற்படுகிற பெலஹீனத்தை மாற்றவும், லெகுவாய் ஜீரணமாகி உடம்புக்குச் சக்தியைக் கொடுக்கவும் தடவல் 1-க்கு 1 தேக்காண்டி வீதம் கொஞ்சம் பாலில் கலக்கி நாள் 1-க்கு 2 அல்லது 4 தடவல் கொடுக்கலாம்.

## (174) ஸாங்குவிஞல்

இதை சோகைக்கும், ரத்தக் குறைவால் ஏற்படும் சூதகக் கட்டுப்பாட்டை நீக்கவும், ரத்தத்தை உடம்பில் பாவச் செய்து அதன் மூலமாய் சோகையையும் நீக்கி, பெண்களுக்கு சூதகத்தையும் வெளிப்படுத்துமெனத் தீர்மானிக்கிருர்கள்.

---

## (175) டிஞ்சர். ஸெனிக்கியோ.

### ஜாக்கோபியா

(b)

**உபயோகம்:**—ரத்தப் புஷ்டியுள்ள பெண்களாயிருந்தும், சூதகம் கட்டுப்பட்டு மாதவிடாய் காணமலிருந்தால் ஒழுங்காயும், கிரமமாயும் வெளியாக தடவல் 1-க்கு 1 முதல் 2 டிராம் 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து நாள் 1-க்கு 4 தடவல் கொடுக்கலாம். சூதகம் கிரமமாய் படுகிறவரைக்கும் ஒவ்வொரு மாசத்திலும் 1 வாரம் மருந்து கொடுத்து வாவும்.

---

## (176) ஸோமாடோஸ்

இது மஞ்சள் நிறமான, வாசனையும் ருசியுமில்லாத, தண்ணீரில் கரையக்கூடிய தூள். இது லேசாய் செமித்து தேகத்துக்குச் சத்தைக் கொடுக்கக்கூடிய ஆகாரமாயிருக்கிறது. இதை வயிற்றுப் புண்ணுக்கும், உடம்

பை மெலிய வைத்துக் கொண்டே போகிற வியாதிகளுக்கும், உடம்புக்கு சத்தை கொடுக்க உபயோகிக்கலாம். குழந்தைக்குப் பால்கொடுக்கிற பெண்களுக்கு கொடுத்தால் அதிகமாய் சுரக்கும். இதை பசுவின் பாலில் நாள் ஒன்றுக்கு ஒரு அவுன்ஸ் வீதம் சேர்த்து சாப்பிடவும். கருதரித்திருக்கிற காலத்தில் உண்டாகிற வாந்தியைநிறுத்த உயர்ந்த மருந்தெனத் தீர்மானிக்கிறார்கள்.

---

## (177) ஸான்மெட்டோ

இதை மூத்திரக்காய்கள், மூத்திரப்பை நீர்த்தாரை இவைகளிலுண்டாகிற எரிச்சல் வேதனையைத் தணிக்கவும் மூத்திரம் தாராளமாய் இறங்காமல் செறுத்திருப்பதை நீக்கவும், மூத்திரம் தங்கி நின்று அடிக்கடி ஜலபாதைக்கு அதிக நோவோடு போகிறதைக் குணமாக்கவும், ஜனனேந்திரியங்களுக்குப் பலத்தைக் கொடுக்கவும், சொட்டு மூத்திரத்தை குணமாக்கவும், பெண்களுக்கு மூத்திரக் கருவிகளின் ஒழுங்கீனங்களை சரிப்படுத்தவும் பொதுவாக மூத்திரக்காய்கள், மூத்திரப்பை, நீர்த்தாரை இவைகளின் ஒழுங்கீனங்களை சரிப்படுத்தவும், அவைகளில் ஏற்படும் வியாதிகளை குணமாக்கவும் கொடுக்கலாம்.

---

## (178) எக்ஸ்ட்ராக்ட் டாராக்ஸ்லெஸலி.

குணம்:-(1) டயூரேட்டிக் (d) (2) லாக்ஸாட்டிவ் (3) கோலகாக் (g)

அளவு:—5 முதல் 15 கிரைன் (மாத்திரைகளாகச் செய்தாவது அல்லது தண்ணீரில் கரைத்தாவது கொடுக்கலாம்.)

உபயோகம்—இதை பித்தத்தை வெளியாக்கவும், சமப்படுத்தவும், மலச்சிக்கலை நீக்கவும், நீரைப் பிரிக்கவும், மேல்காட்டிய அளவில் மாத்திரைகளாகவாவது தண்ணீரில் கரைத்தாவது கொடுக்கலாம்.

மாத்திரைகளாகச் செய்து கொடுக்கும்போது ஒவ்வொரு மாத்திரையிலும் $\frac{1}{4}$ கிரைன் "எக்ஸ்ட்ராக்ட். நக்ஸ்வாமிக்கா"வும், 2 கிரைன் "எக்ஸ்ட்ராக்ட். ஜென்ஷனு"ம் சேர்த்துக் கொள்ளவும்,

தண்ணீரில் கரைத்துக் கொடுக்கும்போது தடவல் ஒன்றுக்கு 5 துளி "டிஞ்சர். நக்ஸ் வாமிக்கா" வும் 20 துளி டிஞ்சர் "ஜென்ஷன்கோ" வும் சேர்த்துக் கொள்ளவும்.

---

## (179) டிரபினம் =(டிரபின்)
(b) (b)

இது வாசனையுள்ள, வெண்மையான. தண்ணீர் போன்ற மருந்து.

குணம்:—(1) ஆன்டிஸெப்டிக் (2) எக்ஸ்பெக்டோ ரேன்ற்

அளவு:—5 முதல் 15 துளி

**உபயோகம்:**—(1) இதை விஷப்பூச்சிகளைக் கொல்லவும், கெட்ட விஷக்காற்றைப் போக்கவும், கெட்ட வீச்சத்தை மாற்றவும் உபயோகப் படுத்தலாம்.

(2) க்ஷயரோகத்திற்கு:—

20 அவுன்ஸ் கொடுக்கிற தண்ணீரில் 10 துளி "டிரபினம்," 10 கிரைன் "தைமால்"
(b)
10 துளி "கார்பாலிக் ஆஸிட்" இந்த மூன்
(b) (d)
றையும் போட்டு "இன்யேலர்," என்னும்
(b)
கருவியின் மூலமாகவாவது அல்லது வாயைத் திறந்துகொண்டு ஆவியை உள்ளுக்கு சுவாசம் செய்யவும்.

(3) நாள்பட்ட தொண்டைப் புகைச்சலுக்கு:—
திக்காய் காய்ச்சின சீனிப்பாகில் தடவல் ஒன்றுக்கு 10 துளி "டிரபினம்" சேர்த்து
(b)
நாள் ஒன்றுக்கு மூன்று பொழுது கொடுக்கலாம்

(4) படுக்கையிலேயே மல ஜலம் போய்க் கொண்டிருக்கிற நோயாளிகளின் அறையில் நாற்றத்தைப்போக்க தெளித்து வைக்கலாம்.

(5) கால்ரா காலத்தில் கைக் குட்டையில் கொஞ்சம் "டிரபினம்" தெளித்துக்கொண்டு அடிக்கடி முகர்ந்து பார்க்கலாம்.

## (180) டிரபிந்தினி ஓலியம்.
(b)

ஆயில் ஆப். டர்ப்பென்டைன்
(f)

இதற்கு "கர்ப்பூரத்தைலம்" எனப் பெயர் வழங்கி வருகிறது. இதை உள்ளுக்குக் கொடுக்கலா மென்றாலும் அநேகமாய் வெளிப்பிரயோகமாகவே உபயோகப்படுத்தி வருகிறார்கள். இதை கைகால் உளைச்சல், குத்து, வலி, வாதவலி இவைகளுக்கு வலியுள்ள இடங்களில் காலை மாலை நன்றாய் சூடுண்டாகும்படி அழுத்தித் தேய்த்து வைத்திருந்து வெந்நீர் சுடச்சுட விடவும். அஜீரணத்தினாலாவது மற்று வேறு எந்தக் காரணத்தினாலாவது வயிற்றில் வலியிருந்தால் கொதிக்கிறதண்ணீரில் கொஞ்சம் "கர்ப்பூரத்தைலம்" ஊற்றி அதில் "பிளானல்
(f)

துணி" முக்கி இறுக்கி பிழிந்து விட்டு வயிற்றின்மேல் போட்டு வைக்கலாம். நெஞ்சில் கபம் கட்டியிருந்தால் "கர்ப்பூரத்தைலம்" நெஞ்சில் தேய்த்து பிளானல் துணியை
(f)

கொதிக்கிற தண்ணீரில் முக்கி இறுக்கி பிழிந்துவிட்டு நெஞ்சில் ஒத்தடம் கொடுக்கலாம். அல்லது கோதுமைத்தவிடு வறுத்து ஒத்தடம் கொடுத்து திரும்பவும் "கர்ப்பூரத்தைலம்" தடவி வைக்கலாம். இப்படி நாள் ஒன்றுக்கு 3 அல்லது 4 தடவல் செய்யவும்.

கால் கை இவைகளில் சூடில்லாமல் குளிர்ந்துபோன காலத்தில் சூடுண்டாக்க "கர்ப்பூரத்தைலம்" தேய்த்து கருந்தவிடாவது, கோதுமைத் தவிடாவது, மணலாவது வறுத்து சுடச்சுட ஒத்தடம் கொடுக்கலாம்.

(1) லினிமேன்ற். டர்ப்பேன்டைன்

இதில் சேர்ந்திருக்கும் மருந்துகளாவன:—

6½ அவுன்ஸ் ஆயில் ஆப் டர்ப்பேன்டைன்." ½ அவுன்ஸ் "காம்பர்"
(f) (f)

¾ அவுன்ஸ் "சோப் மிக்சர்"

1 அவுன்ஸ் "டிஸ்டில்ட் வாட்டர்."
(d) (d)

ஆகிய இந்த நான்கும் ஒன்று சேர்ந்தது. எல்லாம் ஒன்று சேர்த்து 10 அவுன்ஸ் ஆகும் வரை போதுமான தண்ணீர் சேர்த்துக்குலுக்கினால் மஞ்சள்கலந்த வெண்மையாயிருக்கும்.

உபயோகம்:—இதை வெளிப் பிரயோகமாக, வாதம், உளைச்சல், வீக்கம், வலி, இவைகளுக்கு காலை மாலை வலிவேதனையுள்ள இடங்களில் நன்றாய் சூடுபிறக்க அழுத்தி தேய்த்து வைத்திருந்து வெந்நீர் விட்டு வாவும்.

## (181) தைமால்

இதற்கு "ஓம உப்பு" என்று பெயர்

**குணம்:—(1)** ஆன்டிஸெப்டிக் (2) டியோடோரேன்ற்
(d) (d)

**அளவு:—**½ முதல் 2 கிரைன்

**உபயோகம்:—(1)** தோலின் பேரில் உண்டாகிற சொரி, சிரங்கு, புண், இவைகளுக்கு ½ டிராம் "தைமால்" இதை 4 டிராம் "வாஸலேனேடு" சேர்த்துக் கழிம்பாகச் செய்து மேல்தடவி வைத்திருந்து பிறகு "குட்டிக் கியூரா சோப்பு" கொண்டு சுத்தம் செய்யவும்.

(2) தலையிலும், முகத்தில் தாடிப்பக்கத்திலும் உண்டாகும் பத்துக்கு:—½ டிராம் "தைமாலே" 7½ டிராம்"ஈதரில்" கரைத்து மேல் போட்டால் பத்து உதிர்ந்து விடும்.

(3) தொண்டைப் புகைச்சல், இருமல், க்ஷயம், இவைகளுக்கு "தைமால்" 10 கிரைன். ஸ்பிரிட் 1½ டிராம். மெக்னீஷியா. கார்ப்
(g) (b)
5 கிரைன். தண்ணீர்சேர்ந்து 1½ அவுன்ஸ். இவ்வளவும் ஒன்று சேர்த்து 20 அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரில், 1 டிராம் ஊற்றி ஆவியை சுவாசம் செய்யவும்.

## (182) டிரககந்த்
(g)

இதை "கம், அக்கேஷியா" வுக்குப்பதிலாக
(g)
உபயோகப்படுத்தலாம்.
மாத்திரைகள் செய்யவும் துணைமருந்தாக யிருக்கிறது. இது "கம். அக்கேஷியா" வை
(g)
ப்போல் வழுவழுப்புள்ள செய்கையால் குடல் வயிறு இவைகளில் ஏற்படுகிற எரிச்சலைத்தணிக்கும்.

---

## (183) டாக்கா. டயாஸ்டேஸ்
(d)

இது வெளிரின மஞ்சள் நிறமானதூள். ஆகாரத்திலுள்ள "ஸ்டார்ச்" என்னும் பதார்த்தத்தை (அதாவது பலவிதமான மாவுகள் அரிசி, உருளைக்கிழங்கு இவைகளை) செமிக்க வைக்கும் சக்தி அதிகமாய் இதற்கு உண்டு. ஆகையால் "ஸ்டார்ச்" என்னும் பதார்த்தம் ஜீரணமாகாமல் ஏற்படும் அன்னத்துவேஷத்திற்கு தடவல் ஒன்றுக்கு 2 முதல் 5கிரைன் வரை, 5 கிரைன் "ஸோடா.
(d)
பைகார்ப்" போடு சேர்த்துக் கொடுக்கவும்.
(b) (b)

---

## (184) டான்னல்பின்

(b)

இது தவிட்டுநிறமான, ருசியில்லாத தண்ணீரில் கரையாததுள். இது வயிற்றில் போய் யாதொன்றும் செய்யாமல் சும்மா யிருந்து விட்டு, குடலில் போய் வேலைசெய்து தண்ணீராயும், கெகிழ்த்தியாயும் போகிற மலத்தைக் கட்டியாக்குகிற குணம் உண்டு. ஆகையால் இதை எவ்விதமான வயிற்றோட்டத்திற்கும் தடவல் ஒன்றுக்கு 30 கிரைன் வரை ஆகாரத்தோடே கொடுக்கவும். சிறு குழந்தைகளுக்கு 5 கிரைன் அளவில் கொடுக்கலாம், எனத்தீர்மானிக்கிறார்கள்.

---

## (185) வெலிரியன். ரிமேலாமா.

### (1) டிஞ்சர். வெலிரியன். அமோனியேட்டா

**குணம்:**—ஸ்டிமியூலென்ற்

**அளவு:**—30 முதல் 60 துளி

**உபயோகம்:**—சூதக ஜந்நிக்குக் கொடுக்க

**எடுத்துக்கொள்:**—டிஞ்சர். வெலிரியன். அமோனியேட்டா துளி 90

| | |
